விலை ரூபா 20
பக்கங்கள் : 28

# உதயன்

34c - 27c
பரவலான இடி மழை

சுடர் 31 கதிர் 176 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 07, வெள்ளிக்கிழமை 20.05.2016

மகிந்தவின் ஜனாதிபதிக் கனவு கலைந்ததாக வேண்டும்

பக். 12

# தாண்டவமாடும் இயற்கை

+ 58 பேர் சாவு; 144 பேர் மாயம்
+ 5 இலட்சம் பேர் பாதிப்பு
+ 3 இலட்சத்து 7ஆயிரம் பேர் இடம்பெயர்வு



கொழும்பு, மே 20
நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ளப் பெருக்கில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை நேற்றுமாலை வரை 58 ஆக அதிகரித்துள்ளன.
அத்துடன், 144 பேர் காணாமற்போயுள்ளனர். 5 இலட்சம் பேருக்கும் மேல் பாதிக்கப்பட்டுள்ளனர். 3 இலட்சத்து 7ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இடம் பெயர்ந்துள்ளனர் என்று இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.
வங்கக்கடலில் ஏற்பட்ட தாழமுக்கம் காரணமாக கடந்த 5 தினங்களாக இலங்கையில் சீரற்ற காலநிலை நிலவி வருகின்றது. ஒரு நாளைக் பக்.26

## இடர்களில் சிக்கிய மக்களுக்கு உதவி வழங்க முன்வாருங்கள்

ஜனாதிபதி அவசர அழைப்பு

கொழும்பு, மே 20
சீரற்ற காலநிலையால் நாட்டில் ஏற்பட்டுள்ள இடர்களில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவுவதற்கு பக்.26

## இந்தியாவை அண்மித்தது 'ரோனு' சூறாவளி

கொழும்பு, மே 20
யாழ்ப்பாணம், காங்கேசன்துறைக்கு வடக்கே 600 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கடற் பகுதியில் நிலைகொண்டிருந்த குறைந்த காற்றமுத்த பக்.23

## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

கொழும்பு, மே 20
நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக, அனைத்துப் பாடசாலைகளுக்கும் இன்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அறிவித்துள்ளார்.
கல்வியமைச்சில் நேற்று பக்.25

# மீண்டும் 'ஜெ'

## தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சி பலமான எதிர்க்கட்சியாக தி.மு.க.

சென்னை, மே 20
கடந்த சில தினங்களாகப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த தமிழக சட்ட சபைத் தேர்தல் முடிவுகள் நேற்று வெளியாகின. இதில் செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க அணி வெற்றி பெற்றுள்ளது. இந்த நிலையில் நான்காவது முறை வெற்றி பெற்று ஆறாவது தடவையாகவும் ஜெயலலிதா முதலமைச்சராகப் பதவி யேற்கவுள்ளார்.
தமிழக சட்ட மன்றத்துக்கான 234 தொகுதிகளில் 232 தொகுதிகளில் மாத்திரம் தேர்தல் இடம் பெற்றது. இதில் 134 தொகுதிகளை அ.தி.மு.கவும், 98 தொகுதிகளில் தி.மு.க. கூட்டணியும், வெற்றிபெற்றுள்ளன.
தமிழக சட்ட மன்றத்துக்கான தேர்தல் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்றது. இந்தத் தேர்தலில் ஆளும் அ.தி.மு.க எந்தவொரு கட்சியுடனும் கூட்டணி வைக்கவில்லை. தி.மு.க, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டது.
2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தல் போல் அல்லாது, இந்த ஆண்டு பக்.24



முச்சந்தி முரளி



ஈழத்தமிழருக்கு அம்மா என்ன செய்யப் போறாவாம்...

## தமிழக முதல்வர் ஜெயலலிதா தமிழருக்கு நன்மை செய்வார்

வடக்கு முதலமைச்சர் விக்கி நம்பிக்கை

யாழ்ப்பாணம், மே 20
தமிழக முதலமைச்சராகத் தேர்வு செய்யப்பட்டுள்ள செல்வி ஜெயலலிதா, எம்முடன் இணைந்து தமிழ் மக்களுக்குப் பல்வேறு நன்மைகளைச் செய்வார்.
இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.
தமிழக முதலமைச்சராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள ஜெயலலிதாவின் வெற்றி தொடர்பில், வடக்கு மாகாண முதலமைச்சரிடம், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். பக்.26

## வடக்கு மாகாணத்துக்கென தனி மீன்பிடி அதிகார சபை

சட்ட வரைவு விரைவில் நிறைவேற்றப்படும் என்கிறார் மீன்பிடி அமைச்சர் டெனீஸ்வரன்

யாழ்ப்பாணம், மே 20
வடக்கு மாகாணத்துக்கான மீன்பிடிஅதிகாரசபை உருவாக்கப்படவுள்ளது. இதற்கான நியதிச் சட்டம் விரைவில் தயாரிக்கப்பட்டு, வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்படவுள்ளது. இதற்காக அதிகாரிகளைக் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன்.
வடக்கு மாகாணத்திலுள்ள மீனவர் பக்.25

## திருமண வீட்டில் தாலிகள் உட்பட 28 பவுண் திருட்டு

யாழ்ப்பாணம், மே 20
திருமணம் முடிந்து நான்காம் நாள் கொண்டாட்டம் நடைபெற்ற தினத்தில் வீடு புகுந்த திருடர்கள், தாலிக் கொடிகள் உட்பட 28 பவுண் பக்.23

வர்தன ரன்வரம
தங்க நகை அடகுச் சேவை



உங்கள் பெறுமதிமிக்க தங்க நகைகளுக்கு குறைந்த பணத்தைப் பெறுவது ஏன்?
இப்போது எம்மிடமிருந்து தங்க நகைகளுக்கு
மிகவுயர்ந்த விலை

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு
துரித அழைப்பு (011) 2 350 000
Web: www.dfcc.lk

Digitized by Noolaham Foundation.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# இறுதிப்போரில் சரணடைந்தோர் விவரம் ஜூலை 14 தரவேண்டும்

## இராணுவத்துக்கு முல்லைத்தீவு நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம், மே 20
போரின் இறுதியில் சரணடைந்தவர்களின்விவரங்களை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் ஜூலை மாதம் 14 ஆம் திகதிய வழக்கு விசாரணையின் போது, கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும் என முல்லைத்தீவு நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், அரச தரப்பு சட்டத்தரணிகள் நேற்றைய தினமும் மன்றில் முன்னிலையாகவில்லை. இதனால் வழக்கு ஜூலை மாதம் 14 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் 58 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மன்றில் முன்னிலையாக வேண்டும் என்றும், தவறின் அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்படும் எனவும் நீதிவான் எச்சரித்தார்.

**பின்னணி**

வவுனியா மேல் நீதிமன்றத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டு ஆட்கொணர்வு மனு, காணாமற்போனோரின் உறவினர்களால் தாக்கல் செய்யப்பட்டது. 2009 ஆம் ஆண்டு போரின் இறுதியில் இராணுவத்தினரிடம் கையளித்த – சரணடைந்த தமது உறவினர்களை மீட்டுத் தருமாறு கோரியே குறித்த ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு வவுனியா மேல் நீதிமன்றத்தினால், சம்பவம் இடம்பெற்ற பகுதி நீதிமன்றமாகிய முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்துக்கு விசாரணைகளுக்காக மாற்றப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் மனுதாரர்களின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னர், பிரதிவாதிகளின் சாட்சியம் பதிவு செய்யும் நடவடிக்கை கடந்த டிசெம்பர் 10 ஆம் திகதி ஆரம்பமாகியிருந்து. 58 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சாணக்ய குணவர்தன, ஆட்கொணர்வு மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் எவரும் 58 ஆம் படையணியிடம் சரணடைந்ததற்கான பதிவுகள் எதுவும் தங்களிடம் இல்லை என்று தெரிவித்திருந்தார்.

**குறுக்கு விசாரணை**

இந்த நிலையில் சாட்சியம் மீதான குறுக்கு விசாரணை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில், நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் முன்னிலையில் பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி இடம்பெற்றது. அன்றைய தினம், 58 ஆவது படையணியின் கட்டளைத் தளபதியை, மனுதாரர்கள் சார்பில் மன்றில் முன்னிலையாகியிருந்த சிரேஷ்ட சட்டத்தரணி கே.என். ரட்ணவேல் குறுக்கு விசாரணை செய்தார்.

இதன்போது, ஆட்கொணர்வு மனுத் தாக்கல் செய்தவர்களின் பெயர்கள் உங்களிடம் இல்லை என்பதைஎதைவைத்துத்தெரிவித்திருக்கின்றீர்கள் என்று மனுதாரர் தரப்பு சட்டத்தரணியினால் கேட்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த கட்டளைத் தளபதி, சரணடைந்தவர்கள் தொடர்பான பெயர்ப் பட்டியல் எம்மிடம் உள்ளது. அதில் ஆராய்ந்து பார்த்த போது, மேற்படி பெயர்கள் இல்லை. அதனடிப்படையிலேயே தெரிவித்தேன் என்று பதிலளித்திருந்தார்.

இதனால் மனுதாரர் தரப்பு சட்டத்தரணி கே.என்.ரட்ணவேல், சரணடைந்தவர்கள் தொடர்பான பட்டியல் இராணுவத்தினரிடம் இருந்தால், அதனை மன்றில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார். இதன் போது குறுக்கிட்ட அரச தரப்பு சட்டத்தரணி, தம்மால் கொண்டு வரப்பட்ட சாட்சியிடம் சான்றுப் பொருள்கள் கேட்க முடியாது என்று வாதிட்டார்.

பட்டியல் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என மனுதாரர் தரப்புச் சட்டத்தரணி கே.என்.ரட்ணவேல், இது முக்கியமான விடயம். சர்வதேசசமூகத்தினராலும், பல தரப்பட்டவர்களாலும் சரணடைந்தவர்கள் தொடர்பான பெயர்ப் பட்டியலை வெளிப்படுத்துமாறு பல தடவைகள் கேட்கப்பட்ட போதும், அது இல்லை எனக் கூறப்பட்டது. அத்துடன் இவ்வாறான சரணடைவுச் சம்பவம் எதுவுமே இடம்பெறவில்லை எனவும் கூறப்பட்டது. இவ்வாறானதொரு நிலையில், பயிற்றப்பட்ட இராணுவத்தினர் உயர் நிலையில் உள்ள அதிகாரி, சரணடைந்தவர்கள் தொடர்பான பட்டியல் இருக்கின்றது என்ற தகவலை வெளிப்படுத்தியுள்ளார். சரணடைந்து காணாமற்போனோர் விவகாரம் முக்கியமானது என்பதனால், அந்தப் பட்டியலை மன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இதன் பின்னர் நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன், இராணுவத்தினரிடம் உள்ள சரணடைந்தவர்கள் தொடர்பான பெயர்ப் பட்டியலை ஏப்ரல் 19 ஆம் திகதி மன்றில் சமர்பிக்குமாறு, பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி நடந்த வழக்கில் உத்தரவிட்டார்.

**அரச தரப்பு சட்டத்தரணிகள் வரவில்லை**

ஏப்ரல் 19 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது அரச தரப்புச் சட்டத்தரணிகள் மன்றில் முன்னிலையாகி இருக்கவில்லை. இதனால் வழக்கு மே 19 ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டது. நேற்றைய தினம் வழக்கு மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, அரச தரப்பு சட்டத்தரணிகள் மன் றில் முன்னிலையாகவில்லை. இதனால் நீதிவான் வழக்கை ஜூலை மாதம் 14 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

(து-வ-5)

## ஏமாற்றி பணம், நகைகள் பறித்த யுவதி சிக்கினார்

பல ஆண்களுடன் பழகி, காதலிப்பதாகக் கூறி, அவர்களிடமிருந்து பணம், நகைகளை அபகரித்து ஏமாற்று நடவடிக்கையில் ஈடுபட்டார் என்ற குற்றஞ்சாட்டில் தேடப்பட்டுவந்த இளம் யுவதியைக் கைதுசெய்துள்ளதாகச் சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த யுவதி கடந்த 2014 ஆம் ஆண்டுதாவடியில் உள்ள இளைஞரின் வீட்டில் தங்கி நின்று யாரும் அற்ற வேளையில், 20 பவுண் தங்க நகைகளைக் களவாடிச் சென்றதாக சுன்னாகம் பொலிஸில் முறையிடப்பட்டிருந்தது. குறித்த முறைப்பாட்டின் பிரகாரம் யுவதியை நீண்டகாலமாகத் தேடி வந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் குறித்த யுவதி தொடர்பில் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி கொழும்பு மொறட்டுவப் பகுதியில் வைத்துக் குறித்த யுவதியைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் கூறினர். (து-வ-4-101)

## நீர் நிலைகளுள் விழுந்து 2 பேர் நேற்று உயிரிழப்பு

சாவகச்சேரி, மே 20
பெருமழையினால் நிரம்பிக் காணப்பட்ட நீர் நிலைகளுக்குள் தவறி விழுந்து இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதடி மத்தி மற்றும் நாவற்குளியில் இந்தச் சம்பவங்கள் நேற்று இடம்பெற்றுள்ளன.

கைதடி மத்தி குமரநகரைச் சேர்ந்த சின்னப்பொடியன் பாறி (வயது-90) கிணற்றில் தவறி வீழ்ந்தும் நாவற்குளி வடக்கைச் சேர்ந்த ஆசைமுத்து செல்லத்துரை (வயது - 66) மழை வெள்ளம் தேங்கி நின்ற குழிக்குள் தவறி விழுந்தும் உயிரிழந்துள்ளனர்.

இவர்களின் உயிரிழப்புத் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் நீதிமன்றில் நேற்று அறிக்கை தாக்கல் செய்தனர். விசாரணையின் பின்னர் நீதிவான் திடீர் சாவு விசாரணை அதிகாரி மூலம் விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

(ற-4,9,288)

## திருட்டுக் குற்றச்சாட்டில் மூவர் கைது

பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் சிறுகுற்றத் தடுப்பு பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். நாவாந்துறை ஐந்து சந்தியில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட மூவரும், யாழ்.ஓட்டுமடத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழில் பல இடங்களிலும் இடம்பெற்ற 21 திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கிரனைட் மற்றும் கத்தி, இரு மோட்டார் சைக்கிள்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

அரியாலையில் வெற்றுக்காணி ஒன்றினுள் மோட்டார் சைக்கிள் நிறுத்தப்பட்டுள்ளது என்று பொது மக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் பிரகாரம், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். அந்த விசாரணையின் போதே குறித்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(ற-ஐ-4,106)

## வடக்கு – மத்திய அரசுகள் இணைந்து செயற்படுவதிலுள்ள தடைகள் என்ன?

### வடக்கு முதலமைச்சர் விக்கியிடம் விரிவாக கேட்டறிந்தார் ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர்



வடக்கு அரசும், கொழும்பு அரசும் இணைந்து செயற்படுவதற்கு என்ன தடைகள் இருக்கின்றன என்பதை ஆராயும் நோக்குடன் இலங்கைக் கான ஐரோப்பியத் தூதுவர் டேவிட் டேலி, வடக்கு முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனுடன் நேற்றுச் சந்திப்பு நடத்தியுள்ளார்.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் டேவிட் டேலி, யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டார். இதன் போது, வடக்கு மாகாண ஆளுநர் கூரேயைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர், வடக்கு மாகாண முதலமைச்சரை, அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார். சுமார் ஒரு மணி நேரம் வரை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்ததாவது:-

மத்திய அரசுடன், மாகாண அரசு இணைந்து செயற்படுவதற்கு என்ன பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை ஆராய்வதற்கே ஐரோப்பிய ஒன்றி யத் தூதுவர் வருகை தந்திருந்தார். வடக்கு மாகாண அரசும், கொழும்பு அரசும் இணைந்து செயற்பட வேண்டும் என்ற எண்ணம் இருக்கின்றது. [illegible] தடையாக இருக்கின்றன என்று கேள்வி எழுப்பினார்.

இதற்குப் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளை எடுத்துக் கூறினேன். அந்த குறைபாடுகளின் நிமித்தம் எமது உறவுகள் பலவிதத்திலும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அவருக்கு விளக்கினேன்.

கொழும்பு அரசினால் தரப்படும் வேலைத் திட்டங்கள், தான்தோன்றித்தனமாக இருக்கின்றன. எம்முடன் கலந்துரையாடுவதில்லை. அவர்கள் எம்மீது தமது திட்டங்களைத் திணிக்கின்றனர். இதற்கு அவர், கொழும்பு அரசுடன் பேசுவதாகத் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் நிலவும் வீடில்லாப் பிரச்சினைகள் தொடர்பிலும் அவரிடம் எடுத்துக் கூறினேன். மீள்குடியேற்ற அமைச்சினால் அமைக்கப் படவுள்ள 65 ஆயிரம் வீட்டுத் திட்டம் தொடர்பிலும் அவரிடம் பிரஸ்தாபித்தேன். ஒவ்வொரு வீடும் 2.1 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. ஆனால் சூழலுக்குப் பொருத்தமானது இல்லை என்று தெரிவித்தேன். அதனை அவர் ஏற்றுக் கொண்டார்.

இறுதியில், எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், அரசுடன் கலந்துரையாடித் தீர்வைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார் - என்றார். (து-வ-5-106)

## மின்தடை அறிவிப்பு

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ். பிரதேசத்தில் நாவற்குழி, மறவன்புலோ, தனங்களப்பு, கோயிலாக்கண்டி, கேரதீவு வீதி ஆகிய இடங்களிலும், வவுனியா பிரதேசத்தில் குட்செட்வீதி பிரதேசம், கோவில்குளம் சிவன் கோவிலடி பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ற-ரி)

## மல்லாவியில் யுவதி சாவு

மல்லாவி பாரதி நகர் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை கிணற்றிலிருந்து யுவதி ஒருவர் மீட்கப்பட்டு, உறவினர்களால் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும், குறித்த யுவதி ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதில் மல்லாவி பாரதி நகரைச் சேர்ந்த பரராஜசிங்கம் ரஜனகா (வயது 25) என்ற யுவதியே உயிரிழந்தவராவார்.

இந்தநிலையில் நேற்றுக் காலை முல்லைத்தீவு நீதிவான், சடலத்தைப் பார்வையிட்டு, அதனை கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைத்து உடற்கூற்றுப்பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் இது கொலையா? தற்கொலையா? என்ற கோணத்தில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (து-வ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரம் தாக்கி இளைஞன் சாவு; கேபிள் இணைப்பு வழங்குநர் கைது

நெல்லியடி, மே 20

அல்வாயில் மின்சாரம் தாக்கி இராசநாயகம் அஜந் (வயது -20) என்பவர் நேற்று பரிதாபமாக உயிரிழந்தார்.

இவரது இறப்புக்கான காரணம் குறித்த சந்தேகத்தில் நெல்லியடியைச் சேர்ந்த கேபிள் இணைப்பு வழங்குநர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த நிலை யில் சந்தேகநபர் இன்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் திரைப்படம் பார்ப்பதற்காகத் தொலைக்காட்சியை அஜந் இயக்கிய போது, அது சரிவர வேலைசெய்யவில்லை. கேபிள் இணைப்பு சரியாக வேலை செய்யவில்லை என்று நினைத்த அவர், அதனைச் சரிய செய்யமுற்பட்டபோது, மின்சாரத்தால் தாக் குண்டார்.

இதனால் மயக்கமடைந்த அவரை, உடனடியாக மந்திகை ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டு சென்று, தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட போதும், நேற்று அதிகாலை 5.15 மணியளவில் அஜந் உயிரிழந்தார்.

அவரது இறப்புத் தொடர்பாக மந்திகை வைத்தியசாலைக்குச் சென்று விசாரணை நடத்திய பருத்தித்துறை நீதிவான் பொ.சிவகுமார், இளைஞரின் சாவுக்கான காரணத்தைக் கண்டறியுமாறு நெல்லியடிப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதனையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், அந்தப் பிரதேசத்துக்கு கேபிள் இணைப்பு வழங்குநரைக் கைது செய்தனர். கேபிள் ஊடான பரிவர்த்தனையைக் கட்டுப்படுத்தும் அம்பிலிபயருக்கு மின்சார சபையின் மின் விநியோகக் கம்பிகளிலிருந்து நேரடி மின் இணைப்பை சட்டவிரோதமாகக் கொடுத்திருந்தமையே, அஜந் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்கான காரணம் என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாகக் கூறினர்.

மின்சார சபை பொறியியலாளர்களினால், இது உறுதிப்படுத்தப்பட்டும் இருக்கிறது. எரிந்து போன நிலையில் குறித்த அம்பிலி பயரையும் மீட்டிருக்கின்றோம்.

இதனை யடுத்து அந்தப் பிரதேசத்துக்கு கேபிள் இணைப்பை வழங்கும் நபரைச் சந்தேகத் தில் கைது செய்துள்ளோம். அவரை நாளை (இன்று) நீதிமன்றில் முற்படுத்து வோம் எனவும் நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பியந்த தெரிவித்தார். (உ-26,106)

அச்சகத்துறையில் நியாய விலை உயரியதரம்
விசிட்டிங்காட்
பில்புத்தகம்
லேபல்கள்
நினைவுமலர்கள்
பருவகால மலர்கள்
சஞ்சிகைகள்
போஸ்டர்கள்
லெட்டர்பாட்
சான்றிதழ்கள்
அழைப்பிதழ்கள்
CD கவர்கள்
CD ஸ்ரிக்கர்கள்
சகலவிதமான பிறிண்டிங் வேலைகளுக்கும்
கொழும்பு பிறிண்டேர்ஸ் கே.கே.எஸ் வீதி. 077 1974 875

# விலைக்கேள்விக்கானகோரல்

## முதலமைச்சரின் அமைச்சு

## வடக்குமாகாணம்.

### குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி கொடை (PSDG – 2016)

1. தவிசாளர் மாகாண அமைச்சின் பெறுகைக்குழு உள்ளூராட்சிமன்றங்களின் சார்பில் வடக்கு மாகாணத்திற்காக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கட்டுமாண வேலைகளுக்கான தகவுடையோரும், தகைமை பெற்ற வருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.
2. விலைக்கேள்வியானதுதேசியபோட்டிவிலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள் நிர்மாணகைத் தொழில் அதிகாரசபையில், (CIDA/ICTAD) கீழே அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள தரத்தினை அல்லது அதற்கு மேல் கட்டட அமைப்புக்கான துறையில் பதிவுசெய்யப்பட்டதும் கறுப்பு பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றியதேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி4 இல் குறிப்பிடப் பட்டுள்ளது. மேலதிக விவரங்கள் பகுதி 5 இல்**(Schedule / Bidding Data & Contract Data)**உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை சுற்றுலாத்துறை, முதலமைச்சரின் அமைச்சு, வடமாகாண சபை, A9வீதி, கைதடி எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அலுவலக நாள்களில் மேற்படி முகவரியில் 9.00 மணியிலிருந்து 16.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
6. எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை செயலாளர், முதலமைச்சரின் அமைச்சு, வடமாகாணம், A9வீதி,. கைதடி எனும் முகவரிக்கு சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான ஒரு முழுமையான கேள்வி ஆவணத்தினை 19.05.2016 ஆந் திகதியிலிருந்து 10.06.2016 ஆந் திகதிவரை எந்த ஒரு வேலை நாள்களிலும் காலை 9.00 மணியிலிருந்துமாலை 3.00 மணிவரை மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா2000/= செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். (கொடுப்பனவு முறை காசாக இருக்கும்)
7. விலைக்கேள்வியானது இரு பிரதிகளில் ((மூலப், பிரதி, இணைப்பிரதி) தயாரித்து 10.06.2016 ஆந் திகதியன்று 15.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தவிசாளர், மாகாண அமைச்சின் பெறுகைக்குழு, முதலமைச்சரின் அமைச்சு, வடமாகாணம், **A9**வீதி, கைதடி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொருவேலைக்குமானகேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடனேயே மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதியிலிருந்து 77 நாள்கள் (எழுபத்தேழு–26.08.2016) வரை செல்லுபடியாகும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| Se. No | ஒப்பந்த இலக்கம் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணைவிவரம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தொகை | தேவைப் படும் காலம் |
| 1 | NP/CMM (LG)/JA/ PSDG/ W/2016/1(KRNPS) | காரைநகர் கசூரினா கடற்கரைக்கு அடிப்படை வசதிகளை வழங்கல் (மலசல கூடங்கள், ஓய்வுகுடில்கள், குடிநீர் வசதிகள் அடங்கலாக ) | 3.30 | 3மாதம் | C8 அல்லது அதற்குமேல் (கட்டடம்) | 33,000.00 | 23.09.2016 வரை |
| 2 | NP/CMM (LG)/JA/ PSDG/ W/2016/2(PPPS) | மன்னார் கீரிகடற் கரைக்கு அடிப்படை வசதிகளைவழங்கல் (மலசல கூடங்கள், ஓய்வு குடில்கள், குடிநீர்வசதிகள் அடங்கலாக) | 3.40 | 3மாதம் | C8 அல்லது அதற்குமேல் (கட்டடம்) | 34,000.00 | 23.09.2016 வரை |
| 3 | NP/CMM (LG)/KI / PSDG/ W/2016/3(KRCPS) | வவுனியா சிதம்பரபுரம் கலாசார சுற்றாடலில் உள்ள ஓய்வு நிலையத்தை விரிவாக்கம் செய்தல் (மலசல கூடங்கள், மற்றும் குடிநீர் வசதிகள் அடங்கலாக.) | 2.40 | 3மாதம் | C8 அல்லது அதற்குமேல் (கட்டடம்) | 24,000.00 | 23.09.2016 வரை |
| 4 | NP/CMM (LG)/KI/ PSDG/ W/2016/4 (POOPS) | கல்நட்டகுளம் பொழுதுபோக்கு நிலையம் அபிவிருத்தி செய்தல். | .4.35 | 4மாதம் | C7 அல்லது அதற்குமேல் (கட்டடம்) | 44,000.00 | 23.09.2016 வரை |
| 5 | NP/CMM (LG)/MU/ PSDG/ W/2016/5(MRPS) | திருவடிநிலை கடற்கரைக்கு அடிப்படை வசதிகளை வழங்கல் (மலசல கூடங்கள், ஓய்வு குடில்கள், குடிநீர் வசதிகள் அடங்கலாக) | 3.45 | 3மாதம் | C8 அல்லதுஅதற்குமேல் (கட்டடம்) | 35000.00 | 23.09.2016 வரை |
| 6 | NP/CMM (LG)/MN/ PSDG/ W/2016/6(MNUC) | பண்ணைக் கடற்கரை ஓய்வு நிலைய சுற்றாடலில் உணவகத்தை நிர்மானித்தல் மற்றும் அடிப்படை வசதிகளை வழங்கல். | 8.90 | 3மாதம் | C8 அல்லது அதற்குமேல் (கட்டடம்) | 89,000.00 | 23.09.2016 வரை |
| 7 | NP/CMM (LG)/VA/ PSDG/ W/2016/7(VSTPS) | தேக்கம் கலாசார சுற்றாடலில் உள்ள ஓய்வு நிலையத்தை விரிவாக்கம் செய்தல் (மலசல கூடங்கள், மற்றும் குடிநீர்வசதிகள் அடங்கலாக.) | 1.70 | 3மாதம் | C8 அல்லதுஅதற்குமேல் (கட்டடம்) | 17,000.00 | 23.09.2016 வரை |
| 8 | NP/CMM (LG)/ MU/ PSDG/ W/2016/12 (PHUPS) | திருமுறுகண்டி கலாச்சாரச் சுற்றாடலில் ஓய்வு நிலையத்தை நிர்மாணித்தல் மற்றும் மேலதிக வசதிகளை வழங்கல். | 1.80 | 3மாதம் | C8 அல்லது அதற்குமேல் (கட்டடம்) | 18,000.00 | 23.09.2016 வரை |

10. கேள்விகோரல் தொடர்பானமுன்னோடி கூட்டம் மாநாட்டுமண்டபம், முதலமைச்சின் அமைச்சு, வடமாகாணம், A-9 வீதிகைதடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 02.06.2016 ஆந் திகதி அன்று மாலை 2.30 மணிக்குநடைபெறும்.

தவிசாளர்,
மாகாண அமைச்சு பெறுகைக்குழு
முதலமைச்சரின் அமைச்சு
வடக்குமாகாணம்.
021 205 7114

18.05.2016

# சுண்டிக்குளம் கடலில் மிதந்தன 2 சடலங்கள்

## மீனவர்களால் தெரிவிப்பு; தேடும் பணி இன்று தொடரும்

யாழ்ப்பாணம், மே 20

யாழ்ப்பாணம் - சுண்டிக்குளம் கடற்பரப்பில் இரு சடலங்களைக் கண்டதாக, அந்தப் பகுதி மீனவர்களால் தெரிவிக்கப்பட்ட போதும், அவற்றைத் தேடி நேற்று முன்னிரவு வரை மேற்கொண்ட தேடுதலின் போது மீட்க முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் நேற்று முற்பகல் இரண்டு சடலங்கள் கடலில் மிதப்பதைக் கண்டுள்ளனர். இந்த நிலையில் கரை திரும்பிய அவர்கள், சடலங்கள் தொடர்பில் தகவலை கடற்படையினருக்குத் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து கடற்படையினரும், மீனவர்களும் நேற்றுமுன்னிரவு வரை மேற்கொண்ட தேடுதல் பணியில், அந்தச் சட லங்கள் காணப்பட்ட பகுதியில் அவற்றை மீட்க முடியவில்லை. இதனால் குறித்த இரண்டு சடலங்களைத் தேடும் பணி இன்று இடம் பெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(து-வ)

வேலை ஆள்கள்தேவை
வானிஸ் வேலை, தச்சு வேலை தெரிந்தவர்கள் தேவை.
தொடர்பு: 076 807 9378

வீடு வாடகைக்குத் தேவை
யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மித்த நல்லூர். திருநெல்வேலிப் பகுதிகளில் நான்கு பேர் கொண்ட ஆசிரியர் குடும்பத்திற்கு சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குத் தேவை.
076 883 6991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாவை கொல்லங்கலட்டி கேணிக்கரை
# வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
## ஸ்ரீமத் சிதம்பரேஸ்வரர் திருக்கோயில்
## தேர்த்திருவிழா சிறப்பிதழ்
## இன்று (20.05.2016) வெள்ளிக்கிழமை



### வரலாறு

சோழ இராசகுமாரியான மாருதப்புரவீகவல்லி குன்மநோயும் குதிரைமுகமும்மாறவேண்டி மாவிட்டபுரத்தில் கந்தசாமியார் திருவுருவைப் பிரதிஷ்டை செய்து பிறர் பார்வைக்கு மாறியும் தன் பார்வைக்கும் மாறாதிருத்தல் கண்டு விநாயகப் பிரதிஷ்டை செய்யாதகுறை என உணர்ந்து கன்னி மூலையில் ஏழு விநாயகர் திருவுரு பிரதிஷ்டை செய்வதாக சங்கற்பித்து முதன் முதலாக தேனுலவு தண் பொழில் சூழ் கொல்லங்கலட்டிப் பதியில் ஆலமரத்தடியில் சோழ நாட்டிலிருந்து கலைத் திறன் மிக்க உடுக்குப் பீடத்துடன் கூடிய திருவுருவை வரவழைத்து பிரதிஷ்டை செய்யப் பட்டது. அத்திருவுருவில் இன்றும் மூலத்தானத்தில் வீற்றிருந்து மெய்யடியார்களுக்கு அருள்பாலிக்கின்றார்.

பிரதிஷ்டை செய்யப்பெற்ற விநாயகப்பெருமானின் முதலாவது தலமாக கொல்லங்கலட்டிப் பதியில் மந்திர சிம்மாசனத்தில் அருளாட்சி செய்கின்ற ஸ்ரீ வீரகத்தி விநாயகப்பெருமான் புதிய சித்திரத்தேரில் வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருளாசி நல்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**தேவஸ்தான சிவாச்சாரியார்**
**கணேசலிங்கம் ஐயா**

சோழதேசத்து இராசகுமாரியால் பிரதிஸ்டை செய்த ஆலயமாகிய கொல்லங்கலட்டி ஸ்ரீவீரகத்தி விநாயகப்பெருமான் புதிய சித்திரத்தேரில் வலம் வந்து மெய்யடியார்களுக்கு அருளாசி வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**மஹோற்சவக்குருக்கள்**
**சோமாஸ்கந்த குருக்கள்**

வரலாற்று தொன்மையுடன் கூடிய மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் வரலாற்றுடன் 1200 வருடங்கள் பழமை வாய்ந்த தலமாகிய மாவை கொல்லங்கலட்டி ஸ்ரீவீரகத்தி விநாயகப்பெருமான் புதிய சித்திரத்தேரில் வலம்வந்து அடியார்களுக்கு அருளாசி கிடைக்க மாவைக்கந்தனை வேண்டி ஆசீர்வதிக்கின்றேன்.

**மஹாராஜஸ்ரீ து.ச. இரத்தினசாபதிக்குருக்கள்**
**ஆதீனகர்த்தா, மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசாமிகோயில்**

அருள் மிகு கொல்லங்கலட்டி ஸ்ரீவீரகத்தி விநாயகப்பெருமான் புதிதாக அமைக்கப்பட்ட திருத்தேரில் வலம் வந்து அடியார்களுக்கு அருள் வழங்க எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆலயப்புனருத்தாரணசபை**
**ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்**

எமது இஷ்ட தெய்வமாகிய வீரகத்தி விநாயகப்பெருமான் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேரில் வீதிவலம்வந்து அடியார்களுக்கு அருள்பாலிக்க எம்பெருமானை வேண்டுகின்றேன்.

**எஸ்.வி. ஹரிகரன்**
**தேர் உபயகாரர்**

வரலாற்றுச்சிறப்பு மிக்கமாவை கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகப் பெருமான் புதிதாக அமைத்த சித்திரத்தேரில் பவனிவந்து விநாயகர் அருள் கிடைக்க வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**சிற்பகலாமணி ப.சதீஸ்வரன்**
**திருநெல்வேலி.**

கொல்லங்கலட்டியில் வீற்றிருக்கும் ஸ்ரீ வீரகத்தி விநாயகப்பெருமானுக்கு மூர்த்தி, தலம், தீர்த்தம் அமையப்பெற்றதோடு புதிதாக அமைக்கப்பட்ட சித்திரதேரில் எம்பெருமான் வலம் வர பிரார்த்திக்கின்றோம்.

**கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம்**
**பிரித்தானியா**

ஈழத்திருநாட்டின் வடபால் அமைந்த மாவை கொல்லங்கலட்டி வித்தகனாம் வீரகத்தி விநாயகமூர்த்தி அழகிய புதிய சித்திரத்தேரில் வலம்வர விநாயகப் பெருமானது சிதம்பரரேஸ்வர சுவாமியினதும் திருவருள் கிடைக்க வேண்டி வணங்குகிறேன்.

**கு.புரந்தரனி**
**சட்டத்தரணி**
**போசகர் - ஆலய புனருத் தாரணசபை**

மெய்யடியார் வடம்பிடிக்க
நாயகனே வருகின்றான்
சோழ இராசகுமாரியின் மாமுகம்
நீக்கிய எங்கள் நாதா
மாவை கொல்லங்கலட்டி கேணிக்கரை
உறையும் தேவா
வெந்துயரம் தீர்த்தருள தேரேறி
வீதி வலம் வருக

**தேர்த்திருவிழா உபயகாரர்**

**தேரினிலே ஏறி வலம் வந்து அருள்வாய்**
கொல்லங்கலட்டியில் கோயில் கொண்டருளும்
வீரகத்தி விநாயகனே
வல்லமை தந்தெம்மை ஆண்டருள்புரியும்
வல்லமை நாயகனே
மாமுகவல்லியின் பிணி கலைந்திடவே
மாண்புற வந்தவனே
மகிழ்வுடன் தேரினில் ஏறியே வலம்
வந்தருள் தாருமையா

**கவிஞர் சு.குகதேவன்**
**கொல்லங்கலட்டி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்து பயணிகள் விமானம் நடுக்கடலில் விழுந்து விபத்து

## அதிலிருந்த 66 பேரும் உயிரிழந்திருக்கலாம்

கெய்ரோ, மே 20

பாரிசில் இருந்து கெய்ரோ நோக்கி 66 பயணிகளுடன் சென்ற எகிப்து விமானம் மத்திய தரைக்கடலில் விழுந்து விபத்துக்குள்ளானது. இதில் பயணித்த 66பேரும் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.



பிரான்ஸ் தலைநகர் பாரிசில் இருந்து எகிப்தின் தலைநகர் கெய்ரோ நோக்கி எகிப்து எயார் நிறுவனத்துக்குச் சொந்தமான விமானம் நேற்று புறப்பட்டுச் சென்றது. இதில் பிரான்ஸ், பிரிட்டன், பெல்ஜியம், குவைத், சவூதி, சூடான், போர்த்துக்கல், அல்ஜீரியா, கனடா ஆகிய வெளிநாடுகளைச் சேர்ந்த 26 பயணிகளும், 10 சிப்பந்திகள், 30 எகிப்தியர்கள் உட்பட 66 பேர் இருந்தனர். விமானம் 37 ஆயிரம் அடி உயரத்தில் பறந்தபடி, எகிப்து நாட்டின் வான் எல்லைக்குள் நுழைந்தபோது திடீரென ராடர் கண்களில் இருந்து மறைந்தது. இதனால் பதற்றம் அடைந்த விமான நிலைய அதிகாரிகள், விமானத்தைத் தொடர்பு கொள்ள முயற்சித்தனர். ஆனால், எகிப்தின் துறைமுக நகரமான அலெக்ஸாண்டிரியா அருகே மத்திய தரைக்கடலில் அந்த விமானம் விழுந்து விபத்துக்குள்ளானது. இதில் பயணித்த 66 பேரும் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

விபத்தில் சிக்கிய விமானத்தைத் தேடும் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. விமானம் விபத்துக்குள்ளானதை எகிப்து பிரதமர் ஷெரீப் இஸ்மாயில் உறுதி செய்துள்ளார். தொழில்நுட்பக் கோளாறா? அல்லது தீவிரவாதச் செயலா? என்பது குறித்து விசாரணைக்குப் பிறகே தெரியவரும் என கெய்ரோ விமான நிலையத்தில் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (இ)

# அக்கரைக் கிராமத்துக்கு குடி தண்ணீர் விநியோகம்

தொண்டமானாறு, அக்கரை கிராமத்துக்கான குடி தண்ணீர் விநியோகம் நேற்று உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கோப்பாய் பிரதேசசெயலர் மருதுலிங்கம் பிரதீபன் குடிதண்ணீர்க் குழாய் நீரை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

அக்கரை கிராமம் கடலோரக் கிராமமாகக் காணப்படுவதால் அங்குள்ள மக்கள் குடி தண்ணீரைப் பெறுவதற்கு நீண்ட தூரம் சென்றே பெற வேண்டிய நிலை காணப்பட்டது. இந்தக் கிராமத்துக்குத் தொடர்ச்சியாக குடி தண்ணீர் விநியோகம் செய்ய வேண்டிய தேவை குறித்து, பகுதி மக்களால் கோப்பாய் பிரதேச செயலரிடம் கோரிக்கை விடப்பட்டது. அதையடுத்து தொண்டமானாறில் அமைந்துள்ள தண்ணீர்த் தாங்கியில் இருந்து குடி தண்ணீர் விநியோகம் செய்து தருவதாகத் தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபை உறுதி அளித்திருந்தது.

53 குடும்பங்கள் நிரந்தரமாக வாழும் இந்தக் கிராமத்துக்குத் தண்ணீர் விநியோகிப்பதற்குரிய ஏற்பாடுகள் கடந்த பெப்ரவரி மாத இறுதியில் மேற்கொள்ளப்பட்டு, தற்போது விநியோகம் தொடர்ச்சியாக வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கிராமமக்கள் மீள்குடியமர்ந்த நிலையில் மிகவும் வறுமைக் கோட்டுக்கு மத்தியில், வாழ்ந்து வருவதைக் கவனத்தில் கொண்ட அரச அதிபர், தண்ணீர் விநியோகம் செய்வதற்குரிய இணைப்பு வேலைப்பாடுகளை இலவசமாகப் பெற்றுக்கொடுத்துள்ளார்.

இங்குள்ள 53 குடும்பங்களுக்கும், முன்பள்ளி ஒன்றுக்கும் பொதுநோக்கு மண்டபம் ஒன்று உட்பட 55 இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. (ற-ஜ-107)

# குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறி விலைகள் உயர்வு

சாவகச்சேரி, மே 20

கடந்த வாரம் பெய்த பெருமழையால் குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறி வகைகள் மற்றும் வெங்காயம், பச்சை மிளகாய் போன்றவற்றின் விலைகள் திடீரென அதிகரித்துள்ளன.

மழை வெள்ளத்தில் பயிர்கள் மூழ்கியதால் சந்தைகளுக்கு விளைபொருள்களின் வரவும் பெருமளவில் குறைந்துள்ளது. பெரும்பாலான இடங்களில் விதைக்கப்பட்ட வெங்காயப் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அதனால் வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளது. பச்சை மிளகாய் கிலோ 400 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

இதேவேளை- மழையுடன் வீசிய கடும் காற்றால் பெருமளவு முருங்கை மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன. அதனால் பல பகுதிகளிலிருந்து பெருமளவு முருங்கைக்காய்கள் சந்தைக்குக் கொண்டு வரப்படுகின்றன. இதனால் அவற்றின் விலை கிலோ 100 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது. (ற-ஜ-9)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு பிரிட்டன் தமிழர் பேரவையால் அனுஷ்டிப்பு

கொழும்பு, மே 20

முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட மக்களை நினைவு கூரும் வகையிலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி கோரியும் பிரிட்டன் தமிழர் பேரவையால் நேற்று முன்தினம் புதன்கிழமை நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்பட்டுள்ளது.

நினைவேந்தல் நிகழ்வில் பெருந்திரளாக ஒன்று கூடிய மக்கள், முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வுக்குச் சமுகமளித்திருந்த பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் பொது மக்கள் நீதி வேண்டிப் போராடும் தமிழ் மக்களுக்கான தமது முழு ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர். தொடர்ச்சியாக அரசால் மேற்கொள்ளப்படும் நில அபகரிப்பு, தமிழர்களின் பூர்வீக நிலங்களை மற்றும் அடையாளங்களை அழிக்கும் வகையில் புத்த விகாரைகள் அமைத்தல் மற்றும் இறுதிப் போரில் கைது செய்யப்பட்டோர் மற்றும் காணாமற்போனோர் தொடர்பான தகவல்களைச் சர்வதேச சமூகத்துக்கு தெரிவிக்கும் வகையில் பதாகைகளும், இந்த நினைவேந்தலில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

(ற-ஜ-5)

ஏழாலை அத்தியடி

அருள்மிகு விநாயகர் திருக்கோயில்

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேர் பெருவிழா - 2016



காலம்:
19.05.2016 வியாழக்கிழமை
முற்பகல் 11.00 மணிக்கு தேர்
வெள்ளோட்டம் நடைபெற்றது.

தேர் நிர்மாணிப்பு:
லக்ஷன்
சிற்பக் கலைக்கூடம்
கொழும்பு-15

இன்று (20.05.2016) வெள்ளிக்கிழமை
முற்பகல் 10.00 மணிக்கு
எம்பெருமான் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட
சித்திரத்தேரில் விசேட மேளக்கச்சேரியுடன்
திருவீதி வலம் வருவார்.

விசேட மேளக்கச்சேரி
1. உதயநாதன் குழுவினர் - இனுவில்
2. பஞ்சமூர்த்தி மகன் குமரன் குழுவினர்-கோண்டாவில்
3. விநாயகமூர்த்தி குழுவினர் - கைதடி.
4. இந்தியாவின் விஷேட மேளக் கூட்டம்

அனைவரும் வாரீர் ! அருள் பெறுவீர்!

தேர் உபயம்:
அமரர் குணரத்தினம் குடும்பம்
சார்பாக-பிள்ளைகள்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர் சீனியப்பு சிவாயினி

இவ்வுலகை விட்டுப் பிரிந்தாலும் என்றும்
எம் மனங்களை விட்டுப் பிரியாமல் எனது
நினைவில் வாழும் எம் பாசம் நிறைந்த பொக்கிஷமே
ஆண்டு ஒன்று உருண்டோடினாலும் நாள்தோறும்
உன் நினைவுகள் எங்களுடனே!
உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
அன்பு அம்மா அன்பு உள்ளங்கள்
இன்று அன்னாரது வீட்டில் நடக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மலர்வு 29.10.1975
உதிர்வு 01.06.2015

சீ.நாகேஸ்வரி–தாய்,
077 006 5940 (சி.21033)
செப்பியன்பற்று. (18.13)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 20 . 10 . 1929
உதிர்வு 01 . 06 . 2015

அமரர் திருமதி அற்புதம் சிதம்பரப்பிள்ளை

கடந்த 01.06.2015 இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் திருமதி அற்புதம் சிதம்பரப்பிள்ளை அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல.35,B.A. தம்பிலேன்,
வண்ணார்பண்ணை.
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவில்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(v 19)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் கிருஷ்ணன் மகாதேவன்
(ஓய்வுபெற்ற அதிபர்)
திதி: சதுர்த்தசி (20.05.2016)



மண்ணுலகில் 08.06.1940
விண்ணுலகில் 31.05.2015

எமது குடும்ப விருட்சத்தின் ஆணி வேராக இருந்து எம்மை வழிநடத்தி வாழ வைத்தீர். ஆனால் இன்று ஆணி வேரின்றி ஆறாத்துயரில் மூழ்கித் தவிக்கின்றோம்.
தங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கோட்டைக்காடு,
மல்லாகம்.

என்றும் தங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மாவிட்டபுரத்தைப்
பிறப்பிடமாகவும்
வசாவிளானைப் புகுந்த
இடமாகவும் நடேஸ்வராக்
கல்லூரி பழைய
மாணவியுமான
திருமதி மங்களேஸ்வரி வடிவேலன்

தாய் மடியில் 23.09.1938
சிவனடியில் 20.04.2016

கடந்த 20.04.2016 புதன் கிழமை சிவனடி சேர்ந்த செய்தி கேட்டு எமது துயரில் பங்குபற்றி அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், இன்று (20.05.2016) வெள்ளிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக் கேணியில் நடைபெறும். அந்தியேட்டிக்கிரியையிலும் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.

22/02, புனித அந்தோனியார் வீதி,
சுன்னாகம்.

(70258)
(12.17.20)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

# காலநிலை சீரடைந்ததையடுத்து மீனவர்கள் மீண்டும் தொழிலுக்கு

யாழ்ப்பாணம்,மே 20
காலநிலை ஓரளவு சீரடைந்ததை அடுத்து வடமராட்சி கிழக்கு மீனவர்கள் நேற்று கடலுக்குச் சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டனர்.
கடல் கொந்தளிப்பு மற்றும் காலநிலை சீரின்மையாலும் கடந்த சில நாள்களாக மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லவில்லை.
தற்போது கடல்கொந்தளிப்பு சற்று குறைவடைந்ததை அடுத்து, நேற்றுக்காலை மீனவர்கள் ஆழ் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர்.
கடந்த சில நாள்களாக மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்லாததனால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது.
இதே சமயம் கடும் காற்று மற்றும் கடல் கொந்தளிப்பால் மணற்காட்டு கடற்பகுதியில் நங்கூரம் இட்ட நிலையில் இருந்த படகு ஒன்று கடலில் மூழ்கி சேதமாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
(ற-ஜ-17)

# நீங்காத நினைவில் 26 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி நர்மதா கனகரட்ணராஜா
(முன்னாள் ஆசிரியை - யா/மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)



வையத்துள் அறிமுகம் 26.03.1964
தெய்வத்துள் சங்கமம் 07.06.1990

திதி : சதுர்த்தசி (20.05.2016)


எங்கள் அன்பின் திருவுருவே! பாசதீபமே!
ஆசையின் மணி விளக்கே!
பாசத்தின் பிறப்பிடமே! குடும்பத்தின் ஒளி விளக்கே!
எங்கள் குடும்பத்தில் முதல் பிறந்த முத்தான முத்தே!
எம்மை எல்லாம் ஆறாத் துயரில்
விட்டு விட்டு மீளாத் துயில்
கொண்ட எம் அன்புத் தெய்வமே!
எத்தனையோ உறவுகள் இருந்தாலும்
அம்மா என்று சொல்ல
உங்கள் உயிர் இல்லையம்மா!
ஆண்டுகள் இருபத்து ஆறு சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்
நெஞ்சை விட்டகலாதம்மா!

சந்தையடி,மானிப்பாய்.

உங்கள் பிரிவால் துயருறும்
அம்மா, மாமாமார்,
மாமிமார்,சித்திமார், சித்தப்பா,
தம்பிமார், தங்கைமார்.

(J1433) 13.18)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 04 . 09 . 1936
உதிர்வு 22 . 04 . 2016

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட
அமரர் முத்துத்தம்பி ஸ்ரீவிக்னேஸ்வரன்
(இளைப்பாறிய உப அதிபர் யாழ் தொழில் நுட்பக் கல்லூரி)

கடந்த 22.04.2016 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர் முத்துத்தம்பி ஸ்ரீவிக்னேஸ்வரன் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (20.05.2016) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலைக்கடற்கரையிலும், வீட்டுக்கிரியைகள் நாளை மறுதினம் (22.05.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அன்னாரின் வீட்டிலும் (ஈஸ்வர இல்லம் மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை) அதனைத் தொடர்ந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் அன்று 10.30 மணியளவில் ஆனைக்கோட்டை துரைஐயா மண்டபத்தில் (நவாலி வீதி, ஆனைக்கோட்டை) நடைபெறும்

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

ஈஸ்வர இல்லம்
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.

(v 19)(12.17)

குடும்பத்தினர்.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 20
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் உயர்தர மாணவர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு கல்லூரியில் இடம்பெறவுள்ளது.
அதில் இந்த வருடம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற உள்ள மத்தியகல்லூரியைச் சேர்ந்த அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கல்லூரியின் பிரதி அதிபர் பாலபவன் தெரிவித்துள்ளார். (ற-ஜ)

## வீட்டுக்குள் புகுந்து ஐ போன் திருட்டு

யாழ்ப்பாணம், மே 20
வீட்டில் எவரும் இல்லாத நேரம் பார்த்து வீட்டுக்குள் புகுந்த திருடர்கள், மேசையில் வைக்கப்பட்டிருந்த 39 ஆயிரம் ரூபா பெறுமதியான ஐ போன் கைபேசியைத் திருடியுள்ளனர் என்று பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் மானிப்பாய், இணுவில் வீதி பகுதியில் கடந்த திங்கட்கிழமை பகல் இடம்பெற்றுள்ளது.
வீட்டிலிருந்தவர்கள் அருகில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்ற நேரம், யன்னல் கம்பி வழியாக கையை நுழைத்து கதவைத் திறந்த திருடர்கள் ஐ போன் கைபேசியைத் திருடியுள்ளனர் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
(ற-ஜ-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத் திட்டங்களின் ஊடாக முல்லைத்தீவுக்கு 1,000 வீடுகள்

## மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு,மே 20

முல்லைத்தீவு மாவட்டத்தில் வீட்டுத் திட்டம் ஊடாக ஆயிரம் வீடுகள் அமைப்பதற்கான அனுமதி மீள் குடியேற்ற அமைச் சால் வழங்கப்பட்டுள்ளது. குறித்த வீடுகள், தற்காலிக வீடுகளில் வசிப்பவர்களுக்கு புள்ளிகள் அடிப்படையில் வழங்கப்பட உள்ளன. - இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி வில்வராஜ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மீள் குடியேற்ற அமைச்சின் இந்த ஆண்டுக்கான திட்டத்தின் படி, ஒவ்வொரு மாவட்டத்துக்கும் வழங்கப்பட்டுள்ள வீட்டுத் திட்டங்களில், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஆயிரம் வீட்டு திட்டங்களை அமைப்பதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த வீடுகள் ஒவ்வொன்றும் ரூபா 8 லட்சம் பெறுமதியானவை.

> "முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், பாண்டியன்குளம் மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்படும் இந்த வீட்டுத் திட்டங்கள், தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு புள்ளி அடிப்படையில் வழங்கப்படவுள்ளன."

முல்லைத்தீவு, கரைதுறைப் பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், பாண்டியன்குளம் மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்படும் இந்த வீட்டுத் திட்டங்கள், தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு புள்ளி அடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

தற்போது கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள மக்களுக்கு 320 வீடுகள் அமைப்பதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய பிரதேச செயலகங்களுக்கான வீட்டுத் திட்டங்கள் எத்தனை என்பது இது வரையும் முடிவாகவில்லை. அத்துடன் 50 ஆயிரம் ரூபா பெறுமதியிலான ஆயிரம் மலசலகூடங்களும், ஒரு இலட்சம் ரூபாவுக்கான வாழ்வாதார உதவித் திட்டம் என்பனவும், பொதுக் கிணறு அமைப்பதற்கு நூறு மில்லியன் ரூபா என்பவையும் மீள் குடியேற்ற அமைச்சால் வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டங்கள் யாவும் விரைவில் ஆரம்பிக்கப்படும்.- என்றார்.

(ற-ஜ-101,21,ரி7)

### இறுவட்டு வெளியீடு

சாவகச்சேரி, மே 20

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் குறித்து பாடப்பெற்ற 'மருதடி விநாயகர் மலரடி போற்றி' என்னும் இறுவட்டு வெளியீடு இன்று முற்பகல் 11 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக் கழக கணக்கியற்றுறைத் தலைவர் பேராசிரியர் பா.நிமலதாசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், இறுவட்டு அறிமுக வுரையை பிரம்மஸ்ரீ குமார சுவாமிநாதக் குருக்களும், வெளியீட்டுரையைப் பேராசிரியர் க.தேவராசாவும் நிகழ்த்தவுள்ளனர். (ற-ஜ-9)

### தேர்த் திருவிழா

சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலயத் தேர்த் திருவிழா இன்று முற்பகல் 10 மணிக்கும், தீர்த்தத் திருவிழா நாளை முற்பகல் 9 மணிக்கும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-9)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 20

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. நாளை சனிக்கிழமை தீர்த்தத் திருவிழா இடம்பெறவுள்ளது.

(ற-ஜ-17)

### சகோதரர்களால் தாக்கப்பட்ட இளைஞன் சிகிச்சையில்

யாழ்ப்பாணம், மே 20

சகோதரர்கள் இருவர் மண்வெட்டிப் பிடியால் தாக்கியதால் தலையில் காயமடைந்த இளைஞரொருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காட்டுக் கந்தோர் வீதி, சுண்டுக்குளி பகுதியைச் சேர்ந்த இளைஞரே இவ்விதம் காயமடைந்தவராவார். (ற-ஜ-107)

## ராணுவ பஸ் மோதி மீனவர் படுகாயம்

யாழ்ப்பாணம், மே 20

வல்வெட்டித்துறைச் சந்தியில் இராணுவ பஸ்ஸும், மீனவரொருவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதிவிபத்துக்குள்ளானதில் மீனவர் படுகாயமடைந்து வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இந்த விபத்து நடந்துள்ளது. விபத்தில் பழைய நீதிவான் முகாமைச் சேர்ந்த ம.குணலிங்கம் (வயது 60) என்பவரே படுகாயமடைந்துள்ளார். அவர் கொண்டு சென்ற சுமார் 8 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்களும் இதன் போது வீணாகியுள்ளன என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ பஸ் வேகக்கட்டுப்பாட்டை இழந்து பயணித்தது என்றும் விபத்துச் சம்பவத்தைத் தாம் நேரில் கண்டதாகவும் மக்கள் தெரிவித்தனர். விபத்தை அடுத்து அங்கு மக்கள் ஒன்று கூடினர். இராணு வத்தினரும் ஒன்று கூடினர். பொலிஸாரும் அங்கு வரவழைக்கப்பட்டு விசாரணைகளை மேற்கொண்டனர். பின்னர் பஸ்ஸைப் பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். குறித்த பஸ் சாரதியிடம் சம்பவம் நடக்கும் போது சாரதி அனுமதிப்பத்திரம் இருந்ததா, இல்லையா என்பது பற்றி அங்கிருந்தவர்கள் வினவியபோதும் பதில் கிடைக்கவில்லை என்று தெரிவித்தனர். எனினும் விபத்துத் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-ஜ-4,26)



## தேசிய சுற்றாடல் வாரம் தொடர்பான கூட்டம் மாவட்ட செயலகத்தில் இன்று

### யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 20

தேசிய சுற்றாடல் தினம் எதிர் வரும் ஜூன் ஐந்தாம் திகதி முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள தேசிய சுற்றாடல் வாரம் தொடர்பான கலந்துரையாடல் இன்று பி.ப. 2 மணிக்கு யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் திணைக்களத் தலைவர்களைக் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட செயலர் நா.வேதநாயகன் அறிவித் துள்ளார்.

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 5 ஆம் திகதிவரையான நாள்களை தேசிய சுற்றாடல் வாரமாக முன்னெடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. அபேகோன் அனைத்துத் திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார். தேசிய சுற்றாடல் வாரத்தினுள் அனைத்து அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புடன் விசேட சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறும் கேட்டுள்ளார்.

வனஜீவராசி வளங்களைச் சட்டவிரோதமாக விற்பனை செய்வதற்கு எதிராக எழுவோம் என்னும் மகுட வாசகத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டின் உலக சுற்றாடல் தினம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள தேசிய சுற்றாடல் வாரம் தொடர்பாக இன்று யாழ்.மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடப்படவுள்ளது. (ற-9)

### வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மே 20

யாழ்ப்பாண மாவட்ட கலாசாரப் பேரவையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட செயலர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தப் பொதுக்கூட்டத்தில் கலாசாரப் பேரவையின் புதிய நிர்வாகத் தெரிவு மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ)

### தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மே 20

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, யாழ். மாவட்டத்தில் உள்ள யாழ்ப்பாணம் மற்றும் கைதடி தொழிற்பயிற்சி நிலையங்களில் புதிய பகுதி நேர கற்கை நெறிகளை ஆரம்பிக்கவுள்ளது என்று இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் கு. நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர், குளிர்சாதன இயந்திர திருத்துநர் மற்றும் டீசல் வாகன இயந்திர திருத்துநர் போன்ற கற்கை நெறிகளே ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்தக் கற்கை நெறிகளை கற்க விரும்புவர்கள் தங்களது பதிவுகளை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் இல. 12, கே.கே.எஸ். வீதி, வீரசிங்கம் மண்டபம் முதலாம் மாடியில் அமைந்துள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ற-ஜ-ரி)

### விசாகப் பொங்கல்

யாழ்ப்பாணம், மே 20

புங்குடுதீவு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் விசாக தினத்தை முன்னிட்டு நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் அம்பாளுக்கு விசேட ஸ்நபன அபிசேக நிகழ்வும் விசாகப் பொங்கல் நிகழ்வும் நடைபெறவுள்ளன. (ற-ஜ-ரி)

### திறப்பு விழா

கரணவாய், மே 20

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றிய பிரித்தானியக் கிளை மற்றும் கட்டைவேலி சனசமூக நிலையம் ஆகியவற்றின் நிதிப்பங்களிப்புடன் புதிதாக அமைக்கப்பட்ட கட்டைவேலி ஆரம்ப சுகாதார நிலையம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத் தலைவர் சி.உபாலி பொன்னம்பலம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ் வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சர் கலந்து கொள்ளவுள்ளார். (ற-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் முதற்கட்டமாக 1,016 வீடுகள் அமைக்க அனுமதி

## மாவட்ட செயலர் அருமைநாயகம் தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 20

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள் குடியேற்ற அமைச்சின் நிதியுதவியுடன் முதற்கட்டமாக ஆயிரத்து 16 வீடுகள் மற்றும் ஆயிரம் மலசல கூடங்கள் அமைக்கப்படவுள்ளன. அதற்கான அனுமதி கிடைத்துள்ளது என்று கிளிநொச்சி மாவட்ட செயலர் சு.அருமைநாயகம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-


மீள்குடியேற்ற அமைச்சின் இந்த ஆண்டுக்கான திட்டங்களின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்துக்கு முதற் கட்டமாக ஆயிரத்து 16 வீடுகளும், ஆயிரம் மலசல கூடங்களும் அமைப்பதற்கான அனுமதி கிடைத்துள்ளது.

குறித்த வீடுகள் ஒவ்வொன்றும், 8 லட்சம் ரூபா பெறுமதியானவை. அத்தோடு மாவட்டத்தில் அமைக்கப்படும் ஆயிரம் மலசல கூடங்கள் ஒவ்வொன்றும் 55 ஆயிரம் ரூபா நிதியுதவியில் அமைக்கப்படவுள்ளன.

கிடைத்துள்ள அனுமதிகளின் பிரகாரம், மாவட்டத்தின் பிரதேச செயலகங்களின் ஊடாக உடனடியாகவே திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. குறித்த திட்டங்களுடன் மீள் குடியேற்ற அமைச்சால் அனுமதிக்கப்பட்ட மேலும் பல திட்டங்களுக்கான அனுமதிகளும் கிடைத்துள்ளன.

அதற்கான முன்னேற்பாடுகள் அனைத்தும் இடம்பெறுகின்றன. மீள் குடியேற்ற அமைச்சால் இந்த ஆண்டுக்காக அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் அடுத்த மாதமளவில் முன்னெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது- என்றார். (ற-ஐ-10)

> “கிடைத்துள்ள அனுமதிகளின் பிரகாரம், மாவட்டத்தின் பிரதேச செயலகங்களின் ஊடாக உடனடியாகவே திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. குறித்த திட்டங்களுடன் மீள்குடியேற்ற அமைச்சால் அனுமதிக்கப்பட்ட மேலும் பல திட்டங்களுக்கான அனுமதிகளும் கிடைத்துள்ளன.”



# தருமபுரம் பொலிஸார் அதிரடி 56 போத்தல்கள் கசிப்பு மீட்பு

கிளிநொச்சி, மே 20

தருமபுரம் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையால் புளியம்பொக்கணை பகுதியில் 56 போத்தல்கள் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் கசிப்பு காய்ச்சப்படுகின்றது என்று தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து, அங்கு சென்ற பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சதுரங்க தலைமையிலான குழுவினர்கள் 56 போத்தல்கள் கசிப்பை மீட்டனர். குறித்த பகுதிக்குள் பொலிஸார் வருவதை அறிந்து கொண்ட சந்தேக நபர்கள் தப்பித்துச் சென்றுள்ளனர்.

இதன்போது கசிப்புக் காயச்சும் இடத்தில் இருந்த ஒரு மோட்டார் சைக்கிள் மற்றும் ஒரு அலைபேசியை என்பவை மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவித்த பொலிஸார், இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக் கப்படுகின்றன என்றும் தெரிவித்தனர். (ற-ஐ-ரி3,21)

## தேர்த்திருவிழா

அளவெட்டி, மே 20

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. நாளை சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ற-36)

***

அளவெட்டி, மே 20

தெல்லிப்பழை கோயிற்புலம் ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத சந்திர மௌலீஸ்வரர் தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்த உற்சவமும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறவுள்ளன. (ற-ஐ-36)

***

அளவெட்டி, மே 20

கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்த உற்சவமும், நாளை மறுதினம் பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ற-ஐ-36)

***

யாழ்ப்பாணம், மே 20

சிறுப்பிட்டி மேற்கு ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தில் இன்று வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும், நாளை சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ற-ஐ-ரி)

# பெண்களின் தலையிடிக்கான காரணத்தை அறிந்து சிகிச்சை

## சுகாதார அமைச்சு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மே 20

வைத்தியசாலைகளில் தலையிடிக்குச் சிகிச்சை பெறச் செல்லும் பெண்களுக்கு தலையிடிக்கான காரணத்தைக் கண்டறிந்து சிகிச்சை வழங்கவும், தேவையேற்படின் பெண்களுக்கு ஏற்படும் தலையிடி தொடர்பாக உளநல சிகிச்சை உட்பட மருத்துவ ஆலோசனைகளும் (கவுன்சிலிங்) நடத்தவும் சுகாதார அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

பெண்களுக்குத் தலையிடி வருவதற்கு பல காரணிகள் உள்ள போதிலும், வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற வருவோரிடம், அதற்கான காரணங்கள் கேட்கப்படாமல் சிகிச்சையளிக்கப்படுகிறது என முறைப்பாடுகள் கிடைத்துள்ளதை அடுத்தே இந்த நடவடிக்கையை சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இடப்பெயர்ந்து சொந்த இடங்களில் மீளக்குடியமராமல் வேறு இடங்களில் வசிப்பதால் ஏற்படும் மன அழுத்தம், இயற்கை இடர்களால் பாதிப்பு, வீடுகளில் தனிமையில் இருக்கும் பெண்கள் பாதுகாப்பற்ற நிலையில் வாழ்வது, தலையில் தாக்குதல் நடத்தப்படுகின்றமை, போன்ற காரணங்களால் பெண்களுக்கு இவ்வாறான பாதிப்பு ஏற்படுகின்றது.

அத்துடன் துயரங்களையும் துக்கங்களையும் தாங்கிக் கொள்வது, மதுபோதையில் வரும் தந்தை மற்றும் சகோதரர்கள், குடும்ப உறவினர்களைத் தாக்குவது, கணவனால் அளவுக்கு மீறிய தாக்குதல் கொடுமைகள், சிறு வயதில் ஏற்பட்ட பாதிப்புக்கள், சீதனப் பிரச்சினை, விருப்பமில்லாத திருமணம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் பெண்களுக்குத் தலையிடி ஏற்படுவதற்கான காரணங்கள் இருக்கலாம்.

இவை பற்றிய எந்தவொரு தகவலும் பெறப்படாமல், சிகிச்சை வழங்கப்படுவதால் ஒரு பெண் மேலும் நோயாளியாக வாய்ப்புக்கள் உள்ளன. தலையிடி என சிகிச்சைக்கு வரும் பெண்களைத் தனியான வைத்தியர் ஒருவர் மூலம் தலையிடிக்கான காரணத்தைக் கண்டறிந்து சிகிச்சை வழங்க வேண்டும். இல்லையேல் பெண்கள் உடல் தாக்கம் மட்டுமல்ல மனத் தாக்கத்துக்கும் உள்ளாகின்றனர்.

தேவைப்படின் பரிசோதனைகள் மேற்கொண்டு பெண்ணுக்கு தலையிடி ஏற்படுவதற்கான காரணத்தைக் கண்டறிய அயலவர்களின் உதவியை நாட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-9)

# வலி.கிழக்கில் பயிரழிவு விவரம் திரட்டும் நடவடிக்கை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 20

வலி.கிழக்கில் ஏற்பட்ட பயிரழிவுகள் குறித்த விவரங்களைத் திரட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை கொட்டித் தீர்த்த கடும் மழையுடன் கூடிய காற்றால் இந்தப் பிரதேசத்தில் விவசாயப் பயிர்கள் அழிந்து நாசமாகின.

விவசாயப் பயிர்களை மூடி, மழை வெள்ளம் சூழ்ந்து கொண்டதால் பயிர்கள் முழுவதுமே அழிந்தன. இந்தப் பயிரழிவால் விவசாயிகள் பெரும் நட்டமடைந்தனர். அத்துடன் வாழைகள் கடும் காற்றால் முறிந்து நாசமாகின.

இவ்வாறான பயிரழிவுகளின் விவரங்களை விவசாயப் போதனாசிரியர்கள் திரட்டி வருகின்றனர். இதே சமயம் இந்தப் பயிரழிவுகளுக்கு நிவாரணங்களைப் பெறுவதற்கும் விவசாயிகள் முயற்சித்து வருகின்றனர்.

இதற்காகப் பயிரழிவு விவரங்களைத் திரட்டுவதற்கு விவசாய சம்மேளனங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. (ற-ஐ-17)

# உடைப்பெடுக்கவிருந்த அணைக்கட்டு அதிகாரிகள், மக்களால் சீரமைப்பு

வவுனியா,மே 20

கடந்த சில நாள்களாக பெய்த அடைமழை காரணமாக வவுனியாவில் குளம் ஒன்றின் அணைக்கட்டு உடைப்பெடுக்க இருந்த நிலையில் அதிகாரிகள், மற்றும் பொதுமக்களுடைய செயற்பாட்டால் ஏற்படவிருந்த இடர் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை வவுனியா மகிழங்குளத்தில் இடம்பெற்றுள்ளது.

கடந்த சில நாள்களாக நாடு முழுவதும் பெய்த அடை மழை காரணமாக வவுனியா தாண்டிக்குளத்தை அண்மித்த பகுதிகளில் உள்ள பத்தினியார் மகிழங்குளத்தின் கட்டு உடைவதற்கான வாய்ப்பு உள்ளது என்று நேற்றுமுன்தினம் குறித்த



பகுதிக்கு [illegible] திணைக்கள சிரேஷ்ட பொறியியலாளர் தெரிவித்திருந்தார். அதையடுத்து குளம் உடைப்பெடுக்குமானால் அதைத் தடுத்து நிறுத்துவதற்கான ஆயத்தங்களை பொதுமக்களும், அதிகாரிகளும் மேற்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றுக் காலை குறித்த குளக்கட்டு உடைப்பெடுத்த போது, பொதுமக்கள் மற்றும் அதிகாரிகள் இணைந்து அந்தப் பகுதியில் உள்ள மேட்டு நிலத்தில் மண்ணை வெட்டி மண் மூடைகளாகக் கட்டி, அந்த மண் மூடைகளை போட்டு தண்ணீர் வெளியேற்றத்தை தடுத்துள்ளனர்.

அதிகாரிகளுடைய இந்தச் செயற்பாட்டால் நிகழ இருந்த இடர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது என்று அந்தப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் தெரிவித்திருந்தனர். (ற-ஐ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருடாந்த பெருந்திருவிழா

வரணி, மே 20
வரணி சுட்டிபுரம் அம்மன் ஆலயத்தின் வருடாந்த பெருந் திருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை பொங்கல் வைபவத்துடன் ஆரம்பமாக வுள்ளது.
தொடர்ந்து 14 தினங்கள் இடம் பெறும் திருவிழாவில் எதிர் வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழா வும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (ரு-ஜ-122-9)

## காட்டா விநாயகர் ஆலயப் பொங்கல்

முல்லைத்தீவு, மே 20
முள்ளியவளை காட்டா விநா யகர் ஆலய வருடாந்த பொங் கல் விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெறும் என ஆலயப் பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.
கடந்த திங்கட்கிழமை தொடக் கம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமைவரை கொண்ட ஏழு நாள்களும் உப்பு நீரிலே விளக்கேற்றி விசேட பூசைகள், ஆராதனைகள் இடம்பெற்று வருகின்றன.
அனைத்து மாவட்டங் களிலிருந்தும் மக்கள் வருகை தருவதால் அவர்களுக்கான சுகாதாரக் குடிதண்ணீர் வசதி கள் ஏற்படுத்தும் வேலைகளும், பொங்கல் நிகழ்வுக்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன என்றும் - ஆலய பரிபாலன சபையினர் அறி வித்துள்ளனர். (ரு-ஜ-500)

## பொங்கலும் தீ மிதிப்பும்

யாழ்ப்பாணம், மே 20
மல்லாகம் நீலியம்பனை திரு மருதச்சோலை பெரியநாயகி சமேத பெரியதம்பிரான் கோயில் பொங்கல் விழா நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.
மல்லாகம் கோயில் வீதியில் உள்ள சாடியடியில் இருந்து பாரம்பரிய முறைப்படி நாயக வழுந்துப்பானை, மடைப் பண்டம், கும்பம் எடுத்தல், பூசைப் பொருள்களுடன் மேலாக்குப்பிடித்த வண்ணம் பெரிய தம்பிரான் ஆல யத்துக்கு, மல்லாகம் சந்தி ஊடாக ஊர்வலம் வரும் காட்சியும், மறுநாள் ஞாயிற்றுக் கிழமை அதிகாலையில் வழுந்துப்பானை வைக்கும் பூசையும், பொங்கலும் மடை பரவுதலும் நடைபெற்று, நண் பகல் 12 மணிக்கு விசேட பூசையும், தீமிதிப்பு வைபவ மும் நடைபெறவுள்ளன. (ரு-ஜ)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், மே 20
யாழ்ப்பாணம் திரு வண்ணை நகர் மகாமாரி அம்பாள் ஆல யத்தின் அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 17 நாள்கள் நடைபெறவுள்ளது.
எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு தேர் உற்சவமும் நடைபெறவுள்ளது. (ரு-ஜ-ரி)

# நகர சபையின் சட்ட விதிமுறைகளால் வீட்டுத்திட்ட பயனாளிகள் இக்கட்டில்

> தென்மராட்சி பிரதேச செயலகத்தால் கடந்த வாரம் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீடமைப்புத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் அழைக்கப்பட்டு உடனடியாக வீட்டுத் திட்ட வேலைகளை ஆரம்பிக்குமாறும் மூன்று மாத காலத்தில் கட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்படாவிடில் வீட்டுத்திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் செல்லும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சாவகச்சேரி, மே 20
சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் மீள்குடியேற்ற அமைச்சின் 8 லட்சம் ரூபா வீட் டுத்திட்டத்துக்குத் தெரிவு செய் யப்பட்டவர்கள் நகரசபையின் விதி முறைகளால் உரிய காலத் துக்குள் வீட்டை கட்டி முடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று கவலை வெளியிட்டுள் ளனர்.
நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் காணியைக் கொள் வனவு செய்தவர்கள் அல்லது நன்கொடையாகப் பெற்றவர்கள் காணியைத் தமது பெயருக்கு மாற்ற வேண்டும்.
காணி பகுதியாக வாங்கப் பட்டிருப்பின் அந்தக் காணிக்கு தனியாக இலக்கம் பெறப் பட்டிருக்க வேண்டும். புதிய இலக்கம் பெறப்பட வேண்டுமா யின் பிரிவிடல் படிவம் மூலம் காணியின் வரைபட உறுதிக்கு விண்ணப்பித்து நகர அபிவிருத்தி அதிகார சபையால் அங்கீகரிக் கப்பட்ட பின்னரே பெயர் மாற் றல் படிவம் வழங்கப்படும்.
அதன் பின்னர் யாழ். விலை மதிப்பீட்டுத் திணைக்களம் மூலம் காணி வாங்கியவரின் பெயருக்கும் படிவம் மாற்றப் படும். இந்த நடைமுறை பல வருடங்களாக நகர சபையால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.
உரிமை மாற்றம் செய்யப்பட்ட பின்னர் வீடமைப்பு தொடர்பான வீட்டு வரைபடம், காணி வரை படம் ஆகியவற்றை சமர்ப்பித்து உரிய விண்ணப்பப் படிவம் பெற்று, நகர அபிவிருத்தி அலு வலர்களால் பரிந்துரை செய் யப்பட்டபின்னரே கட்டம் அமைக்க நகர சபையால் அனுமதி வழங் கப்படும்.
தற்போது காணி கொள்வனவு செய்துள்ளவர்கள் இவ்வாறான நடைமுறைகளை மேற்கொள் வதற்கு குறைந்தது மூன்று மாதங் கள் தேவையாகவுள்ளது.
இந்த நிலையில் தென்மராட்சி பிரதேச செயலகத்தால் கடந்த வாரம் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீடமைப்புத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் அழைக்கப்பட்டு உடனடியாக வீட்டுத் திட்ட வேலைகளை ஆரம் பிக்குமாறும் மூன்று மாத காலத் தில் கட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்படாவிடில் வீட்டுத்திட் டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி திரும் பிச் செல்லும் எனவும் அறி வுறுத்தப்பட்டுள்ளது.
நகர சபையின் சட்ட திட்டங் களை இதுவரை அறிந்திராத இந்த மக்கள் அதனால் பெரி தும் தாம் பாதிக்கப்பட்டுள்ளோம் என்று தெரிவித்துள்ளனர்.
காணி உரிமைத்தைப் பெறு வதற்கு காலதாமதம் ஏற்படு வதால் வறுமைக்கோட்டுக்குட் பட்ட மக்களின் நலனைக் கருத் தில் கொண்டு விரைவாக அதற் கான நடவடிக்கை எடுத்து தரு மாறும் பொதுமக்கள் கேட்டுள் ளனர்.
இது தொடர்பாக சாவகச்சேரி நகரசபையின் செயலாளரிடம் கேட்டபோது–
கட்டடம் தொடர்பான எந்தவொரு நடவடிக்கையாயினும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி பெறப்பட்ட பின்புதான் நகரசபையால் அனுமதி வழங்கப்படும். இது நகரசபைச் சட்டத்தின் பிரகாரம் நடைமுறை யில் உள்ள ஒரு செயற்பாடு.– என்று தெரிவித்தார். (ரு-ஜ-ரி.9)

## அதிக மழை வீழ்ச்சி கிளிநொச்சியில்

கிளிநொச்சி,மே 20
இலங்கையில் பெய்த அதிகபட்ச மழை வீழ்ச்சிகளில் ஒன்றாக கடந்த திங்கட் கிழமை கிளிநொச்சியில் பெய்த மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
கடந்த சில நாள்களாக இலங்கையில் கடும் மழை பெய்து வந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த திங் கட்கிழமை 24 மணி நேரத்தில் அதிக பட்சமாக 373.3 மி.மீ மழை கொட் டியுள்ளது. இது இலங்கையில் பதிவாகிய அதிகபட்ச மழைவீழ்ச்சிகளில் ஒன்று என்ற சாதனையைப் படைத்துள்ளது.
இதற்கு முன்னர் 2010 ஆம் ஆண்டு கொழும்பில் 440.2 மி.மீ மழை 24 மணி நேரத்தில் பெய்தது. அதற்கு முன்னர் 1992ஆம் ஆண்டு கொழும்பில் 493.92 மி.மீ மழை வீழ்ச்சி பதிவானது.
இவையே இலங்கையில் ஒரே நாளில் பதி வான அதிகபட்ச மழை வீழ்ச்சியாகும் எனவும் வளிமண்டலவியல் திணைக் களம் தெரிவித்துள்ளது. (ரு-ஜ-2I)

## மழையால் பாதிக்கப்பட்டோருக்கு சிவன் அறக்கட்டளையால் உதவி



கிளிநொச்சி, மே 20
கடந்த சில நாள் களாக பெய்த கடும் மழையால் கிளி நொச்சி மாவட்டத் தில் பாதிக்கப்பட்ட மக் களுக்கு சிவன் அறக் கட்டளைநிறுவனத்தி னரால் உதவிப் பொருள்கள் வழங் கப்பட் டுள்ளன.
இவை கடந்த செவ் வாய்க்கிழமை சிவன் அறக்கட் டளை நிறுவுநர் கணேஸ்வரன்வேலா யுதத்தால் வழங்கப் பட்டன. வெள்ளத் தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட் டத்தை சேர்ந்த இரத்தினபுரம் மற்றும் ஆனந்தபுரத்தைச் சேர்ந்த நூறு குடும் பங்களுக்கே இவ்வாறு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.
நிகழ்வில் சிவன் அறக்கட்டளையின் நிறுவுநரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத் தின் பரப்புரைச் செயலாளருமான கணேஸ்வரன் வேலாயுதம், தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல் வம் அடைக்கலநாதன், கிளிநொச்சி மாவட் ஒருங்கிணைப்பாளர் பொன். காந்தன் மற் றும் சிவன் அறக்கட்டளையின் நிர்வாகிகள் ஜெ.ஜெயசுலக்சன், சுதர்சன் உட்பட்ட பலர் கலந்துகொண்டனர். (ரு-ஜ-2I)

# எரிபொருள் நிலையத்தின் தாங்கிகளுக்குள் வெள்ளம்

## கரைச்சி வடக்கு ப.நோ.கூட்டுறவுச் சங்கத்துக்கு 15 லட்சம் ரூபா நட்டம்

கிளிநொச்சி,மே 20
பரந்தன் சந்தியில் உள்ள கரைச்சி வடக்கு ப.நோ.கூ. சங்கத்துக்குச் சொந்தமான எரிபொருள் விற்பனை நிலை யத்தின் அனைத்துத் தாங்கி களுக்குள்ளும் வெள்ளம் புகுந் துள்ளது. அதனால் 15 லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என கூட் டுறவுச் சங்கத்தினர் தெரிவித்தனர்.
கிளிநொச்சி ஏ - 9 வீதியில் பரந்தன் சந்தியில் உள்ள கரைச்சி வடக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந் தமான எரிபொருள் விற்பனை நிலையம் அமைந்துள்ள பகுதி யில் கடந்த இரு நாள்களாக பெய்த கடும் மழை காரணமாக சுமார் ஒரு அடி உயரத்துக்கு வெள்ளம் தேங்கி நின்றது.
அதையடுத்து எரிபொருள் விற்பனை நிலையத்தின் பெற் றோல், டீசல், மண்ணெண் ணெய் ஆகிய மூன்று சேமிப்பு தாங்கிகளுக்குள்ளும் வெள்ளம் உட்புகுந்துள்ளது.
இதனால் 3 ஆயிரத்து 500 லீற் றர் பெற்றோலையும், 8 ஆயிரம் லீற்றர் டீசலையும், 5 ஆயிரம் லீற்றர் மண்ணெண் ணெயை யும் பாவனைக்கு உட்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
எரிபொருள்களை வெளியேற்றி குறித்த எரிபொருள் தாங்கி களைச் சுத்தம் செய்து மீள இயக்குவதற்கு சுமார் ஒரு வார காலம் எடுக்கும் எனவும், அது வரை எரிபொருள் விற்பனை நிலையம் மூடப்பட்டுள்ளதாக வும் தெரிவிக்கப்பட்டது. (ரு-ஜ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூர் அனல் மின் நிலையம் அமைக்கப்படாது போகலாம்

## அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித தெரிவிப்பு



கொழும்பு, மே 20
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வைத்த கோரிக்கை பரிசீலிக்கப்படும் என இந்தியப் பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ளார். எனவே சம்பூர் அனல் மின் நிலையம் அமைக்கப்படாது என்றே கூறலாம். - இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.
அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது இந்தியப் பயணத்தின்போது, பிரதமர் மோடியிடம் சம்பூர் மின் நிலையம் அமைவதை விரும்பவில்லை என்று தெரிவித்திருந்தார். இந்தியப் பிரதமர் மோடி அதைப் பரிசீலிக்கின்றேன் என்று தெரிவித்திருந்தார்.
சம்பூர் அனல் மின் நிலையத்துக்குப் பதிலாக வேறு ஏதாவது முறைமையிலான மின் திட்டத்தை உருவாக்குவது குறித்து ஆராயுமாறும் இந்தியப் பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். சுற்றாடல் அமைச்சராக ஜனாதிபதியே இருப்பதால், இதற்கு அனுமதி வழங்க முடியாது என்று மைத்திரிபால சிறிசேன மோடியிடம் குறிப்பிட்டுள்ளார்.
சுற்றாடல் துறை சார் நிபுணர்கள், அனல் மின் நிலையத்தால், சுற்றாடலுக்கு தீங்கு ஏற்படும் என்று வலியுறுத்துகின்றனர். இதனையும் கவனத்தில் கொண்டே ஜனாதிபதி, இந்தியப் பிரதமரிடம் மேற்படி விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார் - என்று ராஜித குறிப்பிட்டுள்ளார்.
இதன்போது ஊடகவியலாளர்கள், சம்பூர் அனல் மின் நிலையம் அமைக்கப்படாதா? என்று எழுப்பிய கேள்விக்கு, அமைக்கப்படாத நிலையே காணப்படுகின்றது என்று பதிலளித்தார் அமைச்சரவைப் பேச்சாளர்.
இதன் ஒரு பகுதியை ஜப்பானும் அமைக்கவுள்ளதே, அதுவும் நிறுத்தப்படுமா என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, அதுவும் நிறுத்தப்படக் கூடும். அனல் மின் நிலையத்தை அரசு விரும்பவில்லை. எமது நிலைமையை இந்தியா புரிந்து கொண்டுள்ளது - என்றார் ராஜித.
(ற-ஜ-5)

## இடர் நிலைமை சரியாகும்வரை அரச ஊழியர் விடுமுறை இரத்து

கொழும்பு, மே 20
சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதால் அரச ஊழியர்களின் விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.
இடர் நிலைமை முடிவுக்கு வரும் வரையில் இது நடைமுறையில் இருக்கும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.
அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இதனைக்கூறியுள்ளார்.
நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சேவையானது சரியாக முன்னெடுக்கப்படவில்லை என்றால், அது குறித்து 1905 என்ற தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறியத் தருமாறும் அமைச்சர் பொது மக்களிடம் கேட்டுள்ளார்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய நிவாரணச் சேவைகளை முன்னெடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் வஜிர அபேவர்த்தன இதன்போது குறிப்பிட்டுள்ளார்.
(ற-ஜ-5)

## போர் வெற்றியை அரசு இழிவுபடுத்த முயற்சியாம்

### குற்றஞ்சாட்டுகின்றார் தினேஷ் குணவர்த்தன எம்.பி.

கொழும்பு, மே 20
அரசு போர் வெற்றியை இழிவுபடுத்துகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன குற்றஞ் சுமத்தியுள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
உலகின் பயங்கரமான பயங்கரவாத அமைப்பைத் தோற்கடித்த நாளைக் கொண்டாடுவதில் தவறில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 3 லட்சத்து 10 ஆயிரம் சாதாரண மக்களை படையினர் மீட்டு எடுத்திருந்தனர்.
இந்தப் போரில் ஆயிரக் கணக்கான படையினரும், பொலிஸாரும் உயிர்த்தியாகம் செய்திருந்தனர். எதிர்காலச் சந்ததியினருக்காக நாட்டைப் பாதுகாக்கவே இவ்வாறு உயிர்த்தியாகம் செய்யப்பட்டது.
தற்போதைய அரசு படை வீரர்களை அதிகம் நினைவு கூர்வது சரியில்லை என்று கூறுகின்றது. போர் வெற்றியை இழிவுபடுத்த அரசு முயற்சிப்பது வெளிச்சமாகியுள்ளது.
தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் தரப்புக்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே, அரசு இவ்வாறு படை வீரர்களுக்கு கௌரவம் செலுத்துவதைத் தவிர்க்கின்றது.
விளக்குகளை ஏற்றி படைவீரர்களை நினைவு கூருமாறு நாம் கோருகின்றோம் - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
(ற-ஜ-5)

## இத்தாலிய அமைச்சர் இலங்கைக்கு வருகை



கொழும்பு, மே 20
இத்தாலியின் பிரதி வெளிவிவகார அமைச்சர், பெனெடேரோ டலா வெடோவா இலங்கைக்கு பயணம் மேற் கொண்டு வந்துள்ளார்.
2006 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இத்தாலிய வெளிவிவகார அமைச்சர், இலங்கை வருவது இதுவே முதல் முறையாகும்.
இலங்கைக்கு நேற்றுமுன்தினம் வந்துள்ள இத்தாலிய பிரதி வெளிவிவகார அமைச்சர், இலங்கை வெளி விவகார அமைச் சர் மங்கள சமரவீர மற்றும் அமைச்சர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
இத்தாலிய பிரதி வெளிவிவகார அமைச்சருடன், நான்குபேர் கொண்ட வர்த்தக குழு வொன்றும் கொழும்பு வந்திருந்தது.
(ற-5)

## முகநூல் நண்பரான இளைஞனை திருமணம் செய்ய கடத்திய யுவதி

கொழும்பு, மே 20
23 வயதான இளைஞர் ஒருவரைக் கடத்தி திருமணம் செய்து கொள்ள பலவந்தப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மாத்தறையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
இவர்கள் இருவருக்கும் இடையில் முகநூலின் ஊடாக ஏற்பட்ட நட்பை அடுத்தே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த யுவதி இராணுவ வீரர் ஒருவர் உட்பட 6 பேரைக் கொண்டு இந்த இளைஞனைக் கடத்தியுள்ளார். இது தொடர்பில் இளைஞனின் நண்பர் ஒருவர் வழங்கிய முறைப்பாட்டை அடுத்து, பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு யுவதியைக் கைது செய்துள்ளனர்
(ற-ஜ-5)

# அமெ. வெளிநாட்டு உதவிகளுக்கான பணிப்பாளர் இலங்கைக்குப் பயணம்



கொழும்பு, மே 20
அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், வெளிநாட்டு உதவிகளுக்கான பணியகத்தின் பணிப்பாளர் ஹரி சாஸ்திரி இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.
இலங்கைக்கான உதவிகளை வழங்குவது தொடர்பாக அரச மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்களில் அவர் ஈடுபட்டுள்ளார்.
சபாநாயகர் கரு ஜெயசூரியவைச் சந்தித்த, ஹரி சாஸ்திரி, அரசமைப்புச் சபையின் நிலை தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.
அதேவேளை, அமைச்சர்கள் சாகல ரத்நாயக்க மற்றும் தயா கமகே ஆகியோரைச் சந்தித்து, இலங்கைக்கான உதவிகள் மற்றும் இருநாட்டு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாக பேச்சு நடத்தியுள்ளார்.
அமைச்சர் மனோ கணேசனுடனான சந்திப்பில், நல்லிணக்க முயற்சிகளின் தற்போதைய நிலை தொடர்பாக, கேட்டறிந்த ஹரி சாஸ்திரி, சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்து, தற்போதைய அரசியல் மற் றும் பிற சூழ்நிலைகள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடியுள்ளார்.
இலங்கைக்கான உதவிகளை வழங்குவது தொடர்பாக ஆராயவே, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், வெளிநாட்டு உதவிகளுக்கான பணியகத்தின் பணிப்பாளர், ஹரி சாஸ்திரி இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.
(ற-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ந்து பெய்யும் கன மழையால் வெள்ளத்தில் மூழ்கியது கொழும்பு






கொழும்பு, மே 20
கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாகப் பெய்து வரும் கன மழையால், களனி கங்கையின் நீர் மட்டம் 7 அடி வரையில் உயர்ந்துள்ளது. அதனால் கொழும்பு உட்பட பல்வேறு பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மழை வெள்ளம் பாய்ந்தோடுவதால் களனி கங்கையின் நீர் மட்டம் சில நாள்களுக்குள் சடுதியாக, அதிகரித்துள்ளது. இதனால், களனி கங்கையின் கரையோரமாக வசிக்கும் மக்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அதேவேளை, களனி கங்கையில் பெருக்கெடுத்த வெள்ளத்தால் கொழும்பு நகரின் பகுதிகளான வெல்லம்பிட்டிய, கொலன்னாவ, கொட்டிகாவத்தை மற்றும் அதனைச் சுற்றிய பகுதிகளில் வீடுகள், வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வெள்ளத்துடன் முதலைகளும், வீடுகளுக்குள் புகுந்துள்ளதால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். வெள்ளத்தால் இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (ற-ஐ-5)

## ஐ.நா. அதிகாரிகளின் சந்தேகத்தாலேயே எலும்புகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன

### மாணவர் காணாமற்போன வழக்கில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவிப்பு

கொழும்பு, மே 20
திருகோணமலை கன்சைட் கடற்படை முகாமை பார்வையிட்ட ஐ.நா. அதிகாரிகள், அங்கு காணப்பட்ட எலும்புக் கூடுகள் தொடர்பில் சந்தேகப்பட்டனர். அதனாலேயே அந்த எலும்புக் கூடுகள் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டன என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் கடத்தப்பட்டு காணாமற்போன 5 மாணவர்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆள்கொணர்வு மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்றது. இதன் போதே குற்றப் புலனாய்வு அதிகாரிகள் மேற்படி தகவலை வெளியிட்டனர்.

மனுதாரர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணிகளான கே.வி.தவராசா, ஜே.சி.வெலியமுன, அச்சலா செனவிரத்ன ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். சட்டமா அதிபர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி துஷித் முதலிகே முன்னிலையாகியிருந்தார். அத்துடன் இது தொடர்பில் விசாரணை செய்யும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் நிஸாந்த சில்வாவும் முன்னிலையாகியிருந்தார்.

திருகோணமலை கன்சைட் கடற்படை முகாமில் வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு தொகை எலும்புத் துண்டுகளின் சட்ட வைத்திய அறிக்கை மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையில், எலும்புத் துண்டுகள் மிருகங்களினுடையவை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன் பின்னர் அறிக்கையைச் சுட்டிக்காட்டி சட்டத்தரணி கே.வி. தவராசா மிருகம் ஒன்றின் எலும்புத் துண்டுகளாக இருப்பின் அதனை மேலோட்டமாகப் பார்க்கும்போதே அறிய முடியுமாக இருக்கும். இருப்பினும் ஏன் அதனை வீணாக பகுப்பாய்வுக்கு அனுப்ப வேண்டும் என்று கேள்வி எழுப்பினார்.

இதன் போது குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி, திருகோணமலை கன்சைட் முகாமை பார்வையிட்ட ஐ.நா. அதிகாரிகள் சந்தேகப்பட்டதைத் தொடர்ந்தே அதனை ஆய்வுக்கு அனுப்பினோம் என்று தெரிவித்தார்.

ஆள்கொணர்வு மனு மீதான விசாரணைகள் நிறைவுற்றிருப்பின் அதன் தீர்ப்பை மேன் முறையீட்டு மன்றுக்கு அனுப்புமாறு சட்டத்தரணி கே.வி.தவராசா கோரிக்கை விடுத்தார்.

அரச சட்டத்தரணி துஷித் முதலிகே, கோட்டை நீதிவான் நீதிமன்றில் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவியல் வழக்கு நிலுவையில் உள்ளது. அதன் தீர்ப்புக்கு முன்னர் ஆள்கொணர்வு மனுவில் தீர்ப்பு வழங்குவது பொருத்தமாக அமையுமா என்று கேள்வி எழுப்பினார்.

ஆள்கொணர்வு மனு மீதான விசாரணையில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு இந்த மூவரும் காணாமற் போனமைக்கு யார் பொறுப்பு என்பது மன்றில் நிரூபணமாகியுள்ளது. குற்றவியல் வழக்கின் தீர்ப்பை மன்று எதிர்பார்க்க வேண்டியதில்லை என்று கே.வி.தவராசா தெரிவித்தார்.

இது குறித்து கருத்தை முன்வைக்க அரச சட்டத்தரணி துஷித், கால அவகாசம் கோரினார்.

விசாரணை விடயங்களை தவிர்த்து, குற்றவியல் வழக்கின் தீர்ப்புக்கு முன் தீர்ப்பு வழங்க முடியுமா? முடியாதா? என்ற சட்டச் சிக்கல்கள் தொடர்பில் மட்டும் கருத்து தெரிவிக்க இரு தரப்பு சட்டத்தரணிகளும் இணக்கப்பாட்டுக்கு வந்தனர்.

இதனையடுத்து தீர்ப்பை மேன் முறையீட்டு மன்றுக்கு அனுப்ப முன்னர் சட்டமா அதிபரின் சமர்ப்பணத்துக்காக வழக்கானது எதிர்வரும் ஜூலை மாதம் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ற-ஐ-5)

## மகிந்தானந்தவுக்கு எதிராக ஆளுந்தரப்பு ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மே 20
சிறிலங்கன் எயார் லைன்ஸ் விமான சேவை நிறுவனம் தொடர்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை நாடாளுமன்றில் இடம்பெற்ற விவாதத்தில், மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஆளுந் தரப்பினர் பதாகைகளுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் சபையில் பெரும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.

நாடாளுமன்றத்தில் இரண்டாவது நாளாக இடம்பெற்ற சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவை நிறுவனம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை, விவாதத்தில் மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினரான மகிந்தானந்த அளுத்கமகே உரையாற்றிய போதே ஆளுந் தரப்பினர் எதிர்ப்பை வெளியிட்டனர்.

சிறிலங்கன் விமான சேவை நிறுவனத்துக்கு 46 ஆயிரத்து 100 கோடி ரூபா நட்டம். திருடர்கள் எங்கே? என்று எழுதப்பட்ட பதாகைகளுடன் ஆளுந்தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் எழுந்து நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், கோஷங்களையும் எழுப்பினர்.

அதனால் மகிந்த அணிக்கும், அரச தரப்பினருக்கும் இடையே கடும் தர்க்கம் ஏற்பட்டது. பெரும் கூச்சல் குழப்பத்துக்கு மத்தியில் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே உரையாற்றி முடித்தார்.

இதன் பின்னர் அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ உரையாற்ற ஆரம்பித்த போது, மகிந்த ஆதரவு அணியினர் கூச்சலிட இரு தரப்பினரும் மாறி மாறி கூச்சலிட்டதால் சபையில் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. சுமார் அரை மணித்தியாலங்களுக்கு சபையில் நீடித்த சர்ச்சை பின்னர் வழமைக்குத் திரும்பியது. (ற-ஐ-5)

## மோசடி விசாரணைகளின் முன்னேற்றம் குறித்த அமைச்சரவை பத்திரம் நிராகரிப்பு

கொழும்பு, மே 20
முன்னைய ஆட்சிக் காலத்தில் முக்கிய பிரமுகர்களால் மேற்கொள்ளப்பட்ட மோசடிகள், முறைகேடுகள் குறித்து நடத்தப்படும் விசாரணைகளின், முன்னேற்றம் குறித்து விளக்கமளிக்குமாறு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட மூன்று அமைச்சர்கள் இணைந்து இந்த அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்திருந்தனர்.

எனினும், இந்த விவகாரம் குறித்துக் கலந்துரையாடுவதற்கு அமைச்சரவை பொருத்தமான இடம் அல்ல என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதனை நிராகரித்துள்ளார் என்று கூறப்படுகிறது.

எனினும், இந்த விவகாரம் தொடர்பாக வேறொரு இடத்தில் கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணக்கம் தெரிவித்துள்ளார் என்று அமைச்சர் மகிந்த அமரவீர குறிப்பிட்டார்.

அதேவேளை, இது சம்பந்தமான அமைச்சரவைப் பத்திரம் நிராகரிக்கப்படவில்லை என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (ற-5)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் கனகம்மா தர்மலிங்கம்

திதி: சதுர்த்தசி (20.05.2016)

உதயம்
28.10.1924

அஸ்தமனம்
01.06.2015



வானுறையும் தெய்வத்தினுள் சங்கமமாகிய
எங்கள் குடும்பத்தின் தலைவியே!
பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
இப்பாரினில் வாழ்ந்த எம் பாசமிகு தெய்வமே!
எம்மையெல்லாம் துன்பக்கடலிலே தவிக்கவிட்டு
நின்னுயிர் நீத்த மாயம் தான் என்ன?
நிம்மதியாய் நீர் இறைபதம் சேர்ந்தீர்
நமக்கோ! நின்கனவு அதுவும் நித்தியம், நிரந்தரம்
உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

இல [illegible]/58,
[illegible]ரம் வீதி, திருகோணமலை

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பாதிப்புற்றோருக்கு நீதி கிட்டாவிடில் நல்லிணக்கம் வெறும் வாய்ப்பேச்சே!

எமது நாட்டில் இருபதாம் நூற்றாண்டில் இருந்தே இனமுரண்பாடு இருந்து வருகிறது. நாம் நிலையான நல்லிணக்கத்தைத் தேடும் பயணத்திலேயே இப்போது உள்ளோம். நிலையான நல்லிணக்கம் உருவாக்கப்பட்ட பின்னரே ஆத்ம திருப்தி அடைய இயலும்.

எத்தகைய எதிர்ப்புகள் வந்தாலும், எமது அரசின் மீது எத்தகைய விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும், நல்லிணக்கத்தை நோக்கிய எங்கள் பயணம் தொய்வின்றித் தொடரும்.

மேற்கண்ட கருத்துக்களை அள்ளி வீசியுள்ளார் நல்லாட்சி அரசின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

சிமெந்து, கல், இரும்பு கொண்டு நல்லிணக்கத்தைக் கட்டி எழுப்ப இயலாது. அது மிகவும் கடினமான பணி. எனினும் நாட்டில் மீண்டும் போர் தலைதூக்காது இருக்க, அரசு செயற்பட்டு வருகிறது--

துப்பாக்கி வேட்டுகள் மௌனித்த கையோடு, சமாதான முழக்கத்தை உண்டாக்குவது பெரும் சவால் மிக்க பணி. எனினும் அனைத்துலக ஒத்துழைப்புடன் அதனை நாம் முன்னெடுத்து வருகிறோம்--என்றும் ஜனாதிபதி மொழிந்துள்ளார்.

போர் வெற்றி ஒரு புறத்தில் மகிழ்ச்சியைத் தந்தாலும் கூட, அதனால் உண்டான உயிர் இழப்புகள் வேதனையைத் தருவதை மனதில் இருந்து நீக்க இயலாது--எனவும் அவர் மனம் திறந்து நொந்துள்ளார்.

ஜனாதிபதி வெளியிட்டுள்ள கருத்துக்களின் மை காய்வதற்கு முன்னர், வடக்கின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் வெளியிட்ட கருத்துக்கள் தொட்டுக் காட்டப்பட வேண்டியவை:

போர்க்குற்ற விசாரணை வேறு, நல்லிணக்கம் வேறு என்ற அவரது கருத்தும், ஆழ்ந்து அலசி ஆராயப்பட வேண்டியது. தேசிய நல்லிணக்கத்தின் பொருட்டு, போர்க் குற்ற விசாரணையைத் தியாகம் செய்ய வேண்டும் என்று எம்மில் சிலர் கருத்துக் கூறுகிறார்கள்.

✸ ஆனால், போர்க்குற்ற விசாரணை வேறு; நல்லிணக்கம் வேறு. நடைபெற்ற அரச அட்டூழியங்களுக்காகவே போர்க்குற்ற விசாரணை நடைபெறுகின்றது.

✸ மறுபுறத்தில், இனி நாம் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்தே நல்லிணக்க ஆராய்வு தேவை என்று அவர் தெளிவுபடுத்தி இருக்கிறார். அவற்றைப் பண்டமாற்றுச் செய்வது போரின்போது உறவினர்களை இழந்த, எமது மக்களுக்குத் துரோகம் செய்வதாகவே அமையும்.

✸ வேண்டுமென்றே கட்டவிழ்த்து விடப்பட்ட வெறித்தனமான செயற்பாடுகளுக்கு பச்சைக் கொடி காட்டுவதாகவே முடியும். மீண்டும் அவை போன்ற அக்கிரமங்கள் நடந்தேறும்.

✸ அதாவது தாம் எதனையும் செய்யலாம் என்ற மனோநிலை படைத்தரப்புக்கு மேலுயரும்.

✸ அதனால் ஒருபோதும் நல்லிணக்கம் உண்டாக வாய்ப்பு என்ற ஒன்று இருக்கவே இருக்காது.

✸ உண்மையான நல்லிணக்கம் முகிழ்க்க வேண்டுமெனின், பாதிப்புற்ற மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்--என்று முதலமைச்சர் அர்த்தம் மிகுந்த கருத்தை எடுத்துரைத்து உள்ளார்.

மொத்தத்தில்--

நல்லிணக்கம் என்பது நிலை பேறானது. வெறுமனே வார்த்தை மாய்மாலம் சார்ந்தது அல்ல.

அதனை மனதிற்கொண்டு, நல்லாட்சி அரசு தனது சொந்தக் காலில் நின்று, சுயபுத்தியுடன் செயற்படாவிடில் எல்லாமே 'அம்போ' என்று ஆகிவிடுமே...! அவ்வளவுதான்.

# மகிந்தவின் ஜனாதிபதிக் கனவு கலைந்தாக வேண்டும்

சிங்கள மூலம்
மவ்பிம
தமிழில் வீ.எஸ்.ரீ

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஆதரவாளரான ஓட்டோ சாரதியொருவருக்கும், அவரது ஓட்டோவில் பயணம் மேற்கொண்ட நல்லாட்சி அரசின் ஆதரவாளரான பயணியொருவருக்கும் இடையே அண்மையில் இடம்பெற்ற உரையாடல் சுவாரஸ்யம் மிக்கதொன்று.

உகண்டா ஜனாதிபதியின் பதவியேற்பு வைபவத்தில் கலந்து கொள்ள மகிந்த உகண்டாவுக்குப் போகிறாராம் என்றார் அந்தப் பயணி. அப்படியானால் தனக்கும் தன்னுடைய குடும்பத்தவர்களுக்கும் இந்த அரசு செய்யும் இடையூறுகளை உகண்டா ஜனாதிபதிக்கு மகிந்த ஐயா எடுத்துச் சொல்வார் தானே என்றார் அந்த ஓட்டோ சாரதி. உகண்டா ஜனாதிபதிக்கு அதை யெல்லாம் சொல்ல அவருக்கென்ன பைத்தியமா? என்றார் அந்தப் பயணி.

உண்மையில் அந்த ஓட்டோச் சாரதிக்கு உகண்டாவைப் பற்றி ஏதுவும்பெரிதாகத்தெரியாது. உகண்டா என்றால் அது இடிஅமீன் ஆண்ட நாடென்று உமக்குத் தெரியுமா? என்று கூறிய பயணியைப் பார்த்து ஒருவித அச்சத்தோடு ஐயோ, மகிந்த ஐயா இடிஅமீனின் நாட்டுக்கா போகப்போகிறார் என்றார் அந்த ஓட்டோச் சாரதி.

### இடி அமீனை ஆட்சியிலிருந்து அகற்றியவர் முசவெனியே

உண்மையில் இடிஅமீனது சர்வாதிகார ஆட்சியிலிருந்து உகண்டாவை விடுவிக்கப் போராடி அதில் வெற்றி கண்டவரே இன்றைய உகண்டாவின் ஜனாதிபதி முசவெனி. ஆனால் உகண்டாவில் ஆட்சியைக்கைப்பற்றிய முசவெனி பின்னர் இடிஅமீன் போன்றே தாமும் சர்வாதிகாரப் போக்கில் உகண்டாவை ஆட்சி செய்ய ஆரம்பித்தார். உலகின் சர்வாதிகார அரசியல் தலைவர்களில் முசவெனிக்கு ஆறாவது இடம் வழங்கிக் கணிப்பிட்டுள்ளது 'போபர்ஸ்' சஞ்சிகை. 1980 களில் உகண்டாவின் ஆட்சியைக் கைப்பற்றிய முசவெனி, கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக அந்த நாட்டின் ஜனாதிபதியாக ஆட்சியில் நீடித்து வருகிறார். ஜனநாயக நடைமுறைக்கு முற்றிலும் விரோதமான விதத்தில் ஊழல் நிறைந்த தேர்தலை நடத்தித் தாமே ஜனாதிபதிப் பதவியில் தொடர்ந்தும் இருப்பை நிலை நிறுத்தி வருகிறார் முசவெனி. ஆபிரிக்கக் கண்டத்தின் ஊழல், மோசடிகள் நிலவும் நாடுகளில் ஒன்றாக உகண்டா அடையாளப் படுத்தப்பட்டு வருகின்றது. இந்த முசவெனியின் மகன் உகண்டா இராணுவத்தின் பிரிகேடியர் தரப் பதவியை வகித்து வருகிறார். ஜனாதிபதி முசவெனியின் பாதுகாப்புக்கான பொறுப்பு அவரது மகனான அந்த இராணுவப் பிரிகேடியர் வசமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமக்குப் பின்னர் தமது மகனை அரசியலுக்குக் கொண்டு வரும் விதத்தில் நாட்டின் அரசமைப்பில் மாற்றம் மேற்கொண்டு தொடர்ந்தும் தாமே ஜனாதிபதிப் பதவியில் நீடித்திருக்க ஜனாதிபதி முசவெனி ஏற்பாடு செய்து கொண்டுள்ளார். நாட்டுமக்களது கோரிக்கைக்கு அமையவே, அரசமைப்பில் மாற்றம் மேற்கொள்வதாகக் கூறிவந்த முசவெனி, தனது மகனை நாட்டின் ஜனாதிபதியாக்கி விட அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

### தாமும் சர்வாதிகார ஆட்சியைத் தொடர்பவர் முசவெனி

அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலையும் ஊழல் மோசடி மிக்க விதத்திலேயே நடத்தி அதில் தாம் வெற்றி பெற்றதாக முசவெனி பிரகடனப்படுத்தியிருந்தார்.

உகண்டாவின் ஜனாதிபதியாக முசவெனி மீண்டும் பதவியேற்றமை குறித்து ஏ.எப்.பீ. சர்வதேச செய்திச் சேவை கீழ்க்கண்டவாறு செய்தி வெளியிட்டிருந்தது.

உகண்டாவின் புதிய ஜனாதிபதியாகக் கடந்த 12 ஆம் திகதி ஐந்தாவது தடவையாக யுவெரி முசவெனி பதவியேற்றபோது அவருக்கு எதிரான தரப்பினரால் நாட்டில் குழப்ப நிலையொன்று ஏற்படுத்தப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவரான கிசா பெசிகாய், முசவெனிக்கு எதிரான தரப்பினர்களை ஒன்றுகூட்டி தலைநகர் கம்பாலாவில் முசவெனிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் மேற்கொண்டதையடுத்து அவர் கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். முசவெனி ஜனாதிபதியாகப் பதவி ஏற்றமையைத்தாம் ஒருபோதும் ஏற்கப்போவதில்லை என எதிர்த்தரப்பினர்கள் தெரிவித்து வருகின்றனர்.

நாட்டின் குழப்பநிலை குறித்து வெளியுலகுக்குத் தகவல் செல்லாத விதத்தில் தொலைபேசிச் சேவை, இணையத்தளச் சேவைகளை முசவெனி நிர்வாகம் தற்காலிகமாகத் தடை செய்துள்ளது. முசவெனி நிர்வாகத்தின் இந்தச் செயற்பாடுகளை மேற்குலக நாடுகள்கடுமையாகக்கண்டித்துள்ளன.

### ஆச்சரியமளிக்கும் மகிந்தவின் போக்கு

மகிந்த, ஜனாதிபதி முசவெனியின் பதவியேற்பு வைபவத்தில் கலந்து கொள்வது குறித்த அறிவிப்பில், குறித்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அமெரிக்க ஜனாதிபதி, பிரித்தானியப் பிரதமர் ஆகியோருக்கும் முசவெனியால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர்களில் எவரும் குறித்த அழைப்பை ஏற்றுக்கொள்ளாது புறக்கணித்திருந்தனர். இந்த நிலையில் மகிந்த, முசவெனியின் பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொண்டதேன் என்பது குறித்துவிமர்சனங்கள் எழுந்துள்ளன. உண்மையில் மகிந்த உகண்டாவின் எதிரணியினருக்கே ஆதரவுவழங்கியிருந்திருக்க வேண்டும்.

முன்பொரு சமயம் அனுர பண்டாரநாயக்க எதிர்க்கட்சியில் இருந்த வேளை தென்னாசிய நாடுகளின் எதிர்க்கட்சிகளது தலைவர்களை ஒன்றுகூட்டி மாநாடொன்றை நடத்தியிருந்தார். அந்த நாடுகளில் அரசுகளால் எதிர்க்கட்சிகளுக்கு ஏற்படுத்தப்படும் இடையூறுகளை வென்றெடுக்கும் வழிவகைகள் பற்றி அந்த மாநாட்டில் ஆராயப்பட்டது. இன்று அரசுக்கு எதிராக செயற்படும் மகிந்தவும் இத்தகைய விதத்திலல்லவா பிரச்சினைகளை அணுக முயல வேண்டும். சர்வாதிகாரப் போக்கில் இயங்கும் அரசுகளால் மகிந்தவின் ஜனநாயகப் போக்கிலான போராட்டத்துக்கு உதவி ஒத்தாசை கிட்டப்போவதில்லை. அத்தகைய அரசுகளுக்கு, தமக்கு எதிராகச் செயற்பட முனையும் எவரையும் கண்ணிலும் காட்ட இயலாது.

இவையெல்லாம் மகிந்தவுக்குப் புரியாதவைகளா? அத்தனை தூரம் அவர் அரசியல் அனுபவம் அற்றவரா?

இல்லை; இல்லவே இல்லை. இன்றும் மகிந்த தாமே இந்த நாட்டின் ஜனாதிபதி என்ற மாயையின் வசப்பட்டே இயங்கி வருகிறார். இவர் தமது அந்த ஜனாதிபதிக் கனவினின்றும் வெளியேறாத வரையில் கூட்டு எதிரணி ஒருபோதும் பலம் பெறப்போவதுமில்லை. ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற அதற்கு வாய்ப்பமையப் போவதுமில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.ஈழத்தமிழ்மணி



# தமிழர்களால் நிராகரிக்கப்படப்போகும் புதிய கட்சி

பத்துஅமைப்புகளைக் கொண்ட புதிய கட்சியொன்று கொழும்பில்வைத்துஉருவாக்கப்பட்டுள்ளது. தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்டவர்கள் ஒன்றிணைந்தே புதிய கட்சியை உருவாக்கி, ஜனநாயக தமிழ்த் தேசிய முன்னணி என்ற நாமத்தையும் சூட்டியுள்ளனர். இதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு, கொழும்பு பம்பலப்பிட்டியிலுள்ள விடுதியொன்றில் இடம்பெற்றது. புதிய அமைப்புக்குத் தலைவரோ செயலாளரோ தெரிவு செய்யப்படவில்லை. ஊடகப் பேச்சாளராக முன்னாள் பிரதியமைச்சரும் அமைச்சர்மனோ கணேசனின் சகோதரரான பிரபா கணேசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் கட்சி எதற்காக அமைக்கப்பட்டுள்ளது என்ற விளக்கத்தை அங்குரார்ப்பண நிகழ்வின்போது ஆனந்தசங்கரி எடுத்துக் கூறியிருக்கின்றார்.

இந்தக் கட்சி எவருக்கும் எதிராக ஆரம்பிக்கப்பட்டதல்ல. எவரையும் நாம் சேர்த்துக் கொள்வதற்குத் தயாராக இருக்கின்றோம். மலையகத் தமிழர்கள், வட கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழர்கள், முஸ்லிம்மக்கள் என அனைவருக்குமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள முன்னணி என அவர் தெரிவித்துள்ளார். விரும்பினால் எதிர்க்கட்சித்ததலைவர் இரா.சம்பந்தன் கூட இதில் சேரலாம் என்றும் கூறியிருக்கின்றார்.

ஜனநாயக தேசிய முன்னணியில் இணைந்து கொண்ட கட்சிகளும், கட்சித்தலைவர்களும், ஏனையவர்களும் தமிழ் மக்களால் முற்றாகவே நிராகரிக்கப்பட்டவர்களாவர். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா மட்டுமே நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பவராவார். ஆனந்தசங்கரி லங்கா சமசமாஜக் கட்சி அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிகளில் அங்கம் வகித்து 1976 ஆம் ஆண்டு கிளிநொச்சித் தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். 1976 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாகியபோது அதன் சார்பில் 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினரானார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு இணைய மறுத்தவர். இவர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகளுக்கும் தமிழ்த் தேசியத்துக்கும் எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டு தமிழ் மக்களால் முற்றிலும் நிராகரிக்கப்பட்ட ஒரு மனிதராகவே தனது அரசியலை தொடர்கின்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற கட்சியைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு தேசியத்துக்கெதிரான அறிக்கைப் போரை விடுத்துக் கொண்டிருப்பதில் சகலகலாவல்லவராகத் திகழ்கின்றார். வயது முதிர்ந்த அரசியல்வாதியான ஆனந்தசங்கரி வடக்கு மாகாண சபைத் தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டும் படுதோல்வியடைந்திருந்தார்.

ஆனந்த சங்கரி, டக்ளஸ் தேவானந்தா, பிரபாகணேசன் சிறிரெலோ உதயகுமார் தலைமையிலான கட்சிகள் மற்றும் உதிரிக்கட்சிகள் உட்பட பத்து அமைப்புகள் ஒன்று சேர்ந்து தமிழ்த் தேசியத்தின் பெயரை உச்சரித்துக்கொண்டு புதிய கூட்டுக் கட்சியை தொடங்கியிருக்கின்றனர். இதிலுள்ள அமைப்புகள் யாவும் பலம் பெற்றவையாக இல்லை. ஈழமக் கள் ஜனநாயகக் கட்சியிலிருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சந்திரகுமார் தமிழ்த் தேசியத்துக்கு எதிரான கட்சியென கூறிக்கொண்டு கடந்த மாதம் விலகியிருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2004 ஆம் ஆண்டு பொது தேர்தலில் போட்டியிட்டு 22 நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுக்கொண்டது. அன்றிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தமிழ் மக்களின் காப்பரணாக விளங்கி வருகின்றது. மகிந்த ராஜபக்ச தனது ஆட்சிக் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத்தனது வலைக்குள் சிக்கவைக்க முயற்சி செய்தும் இறுதியில் ஏமாந்த பல சம்பவங்களு முண்டு. சில நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கவும் சதி செய்தார் மகிந்த. அந்த முயற்சியும் பலிக்காது, தமிழ்த் தலைவர்களைத் திட்டவும் செய்தார். 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும், 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டு பெரும் வெற்றியீட்டிய வரலாறுண்டு.

தமிழ் மக்களால் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கு என்றைக்குமே தமிழர்கள் தமது பலத்தையும், ஆதரவையும் வழங்கிக் கொண்டேயிருக்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது தமிழ் மக்களுக்கான ஐயப்பாடுகள், வினாக்கள் என்பன நீண்டகாலமாகவே இருந்து வருகின்றன.

இன்றைய அரசிலும் மறைமுகமான ஆதரவை வழங்கினாலும் அரசுக்குள் மூழ்கித் தமிழ் மக்களை நடுக்கடலில் விடவில்லை. தமிழ் மக்களுக்கெதிராகவும் செயற்படவுமில்லை என்பதை ஈழத் தமிழர்கள் நன்குணர்ந்துள்ளனர். தமிழ் மக்கள் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றுதான் நம்பிக்கையுடன் செயற்படுகின்ற கட்சியாகும். இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸ், தமிழ்முற்போக்குக் கூட்டணி என்பன மலையகத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகளாகும்.

இவ்வாறு இருக்கத் தேர்தலில் முற்றாகத் தூக்கியெறியப்பட்டவர்களின் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஜனநாயக தமிழ்த் தேசிய முன்னணியை உருவாக்கியிருப்பதால் இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிர்காலத்தில் ஏதேனும் நன்மைகள் உண்டாகுமா? பிரயோசனம் இருக்குமா? இந்தக் கட்சியினால் தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்துள்ள கட்சிகளைத் தமிழ் மக்கள் நிராகரிப்பார்களா? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமஷ்டிக் கோரிக்கையை அர சுக்குத் தெளிவாக விளக்கியிருக்கின்றது. தமிழ் மக்களுக்கான இறுதித் தீர்வானது சமஷ்டியே. இதிலிருந்து விலக முடியாது.

ஆனந்த சங்கரி, டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் மகிந்த அரசுக் காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குக் குரல் கொடுக்காமல் போனது ஏன்? போராட்டங்களை நடத்தாமல் போனது ஏன்? ஏனைய உதிரிக் கட்சிகளும் சரி ஒரு சிலரோடு அரசியலை நடத்துகின்றவர்களுக்கு மக்களின் ஆதரவு எப்படிக் கிடைக்கும்.

## சுரண்டப்படும் விவசாயிகள்

ஐயா, அனலாகத் தகிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது இரத்தம் சிந்தி உற்பத்தி செய்யும் மரக்கறி வகைகளை கிளிநொச்சிச் சந்தைக்கு எடுத்துச் சென்றால் அங்கு பல இடர்ப்பாடுகளை சந்திக்க வேண்டியுள்ளது. பேசிய விலைக்கு அந்த இடத்தில் வைத்துப் பணம் வழங்கப்படுவது இல்லை.

அவர்களின் வியாபார நிலையத்துக்கு எடுத்துச் சென்று பொருள்களைத் தரம்பிரிப்பது, பேசிய விலையில் ஒரு பகுதியைக் குறைத்துக் கொண்டு பணத்தைக் கொடுப்பது மட்டுமல்ல சந்தை வாயிலில் வாகனங்களுக்கு வரி அறவிடுவோர் அதற்குப் பெரும்பாலும் பற்றுச் சீட்டும் கொடுப்பதில்லை.

சைக்கிளுக்கு ஐந்து ரூபா சில்லறைக்காசு இல்லாத நிலையில், பத்து ரூபா கொடுத்தால் அதற்கும் மிகுதிப் பணம் கொடுப்பதில்லை. இந்தக் கொடுமைகளை நாம் எவரிடம் சொல்லி அழுவது? பிரதேச சபைகள், மாகாண சபைகள் எல்லாம் தேர்தல் முடியும் மட்டுமே. சிவ பெருமான் தான் எம்மைக்காக்க வேண்டும் . அவரும் பக்கச்சார்பாக நடந்து கொண்டால் விவசாயிகளின் கதி அதோகதிதான்.

*– பாதிக்கப்பட்ட விவசாயி*

## அரசியல் அறிக்கைகளுக்காக மதங்களைத் திரிவுபடுத்துவதா?

ஒவ்வொரு மதத்துக்கும் ஒரு புனித நூல் உண்டு. இந்து சமயத்துக்கு பகவத்கீதையும், கிறிஸ்தவ சமயத்துக்கு திருவிவிலியமும், இஸ்லாம் மதத்துக்கு குர்ஆனும், பௌத்த மதத்துக்கு திரிபீடகமும் புனித நூல்களாக விளங்குகின்றன.

அவற்றில் கூறப்படும் வரலாறுகளையும், சம்பவங்களையும் போதனைகளையும் நம்பி, விசுவாசித்து அதனை அடியொற்றியே மக்கள் தத்தமது ஆன்மிக ஈடுபாட்டை முன்னெடுத்துச் செல்கின்றனர். இந்தப் புனித நூல்களில் வரும் வார்த்தைகளை கற்பனை என்றோ பொய்யுரை என்றோ விமர்சிப்பது மதங்களை இழிவுபடுத்தும் செயலாகும்.

இப்போது விடயத்துக்கு வருகிறேன். அண்மையில் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் அரசியல் தீர்வு இழுத்தடிக்கப்பட்டால் பிரபாகரன் மறு அவதாரம் எடுக்கக்கூடும் என்று தெரிவித்திருந்தார்.

அதனைக் கண்டித்து மறுத்துரைத்த வடமாகாண ஆளுநர் றெஜிலோல்ட் கூரே இயேசு மீண்டும் வருவார். நபிகள் வருவார் என்பது போல் பிரபாகரன் வருவார் என்பதும் கற்பனையே என்று கூறியிருந்தார்.

இங்கே அரசியல் நிலைப்பாட்டை நிறுவுவதற்கு சமய உண்மைகளை, விசுவாச சத்தியங்களை கையாண்டமை வேதனை அளிக்கின்றது. அவரது கருத்துப்படி இயேசு மீண்டும் வருவார், நபிகள் வருவார் என்பது கற்பனை என்ற விளக்கத்தை ஏற்படுத்துகிறது.

இஸ்லாம், கிறிஸ்தவ மக்களின் மனங்களை புண்படுத்தும் கருத்தாக அது அமைந்துள்ளது. கிறிஸ்தவர்கள் அன்றாடம் திருப்பலிகளில் கிறிஸ்து இறந்தார், கிறிஸ்து உயிர்த்தார், கிறிஸ்து மீண்டும் வருவார் என்று செபிக்கின்றனர். இந்த மறை உண்மையை அதுவும் ஒரு கத்தோலிக்கராக இருந்தும் விசுவாச உச்சாரணத்தைஆளுநர் கற்பனை என்ற சாரப்பட கூறியிருப்பது கவலையளிக்கிறது. வேதாகமத்தில் பல இடங்களில் கிறிஸ்துவின் மறு வருகை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இதுபோன்று குர்ஆனிலும் காணப்படுகின்றது. தவறான மதக்கருத்துக்கள் மக்களை குழப்பமடையச் செய்யும். தமது இந்த கருத்தை ஆளுநர் மீளப்பெறுவாரா? இது மதத் தலைவர்களுக்கு சமர்ப்பணம்.

*கொழும்புத்துறையான்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுழிபுரம் – பறாளாய் ஸ்ரீ சிவ

# தேர்த்திருவிழ

## இன்று (20.05.2



அருள் மழை பொழியும் ஆறு திருமுகங்களும், ம
களும், மணமுடைய குவளை மலர்மாலை பொலிவுற
களும், பெரும் வரங்களை அடியார்க்கு அருளவேண்
திருக்கரங்களும் மயக்கத்தால் வரும் இரு வினையை
போன்ற திருவடிகளும் உடைய கங்கையின் ஒப்பற்ற
கண்ணின் மணியே!கருணையே குடி கொண்டவ
ஒளியே! மயில் வாகனனே! கடப்ப மாலை அணிந்த வ
பயப்பவனே! தமிழின் அழகே! பழனிப் பதியின் தலை
லிருந்து நீர்பெருக உன்னைத் தொழு கின்ற அடியா
தீவினைகளும் ஏனைய தீவினைகளும் பொடிபடும்படி
வாகனமாகக் கொண்ட கடவுளே! வாசனை வீசுகி
பொய்கையும்! கந்தபுரியும் கந்த வெற்பும் சங்கமு
காஞ்சி புரத்துக் குமரகோட்ட மும், திருவேரகமும், சோ
திரு ஆவினன்குடியும், திருவேங்கடமலையும் குற்றா
காமமும் ஏனைய குன்றுகள்தோறும் விளையாடி திரு
பெருமானே! முருகா! கருணைக்கடலே! அந்தமில்
ஆண்டவா! அன்பின் வடிவே! அருட்பெருஞ் சோதி!
முதே பேரானந்தப் பெருங்கடலே! பிறப்பறுக்கும் பெ
வள்ளலே! தேனமுதாகிய தித்திக்குந் தீந்தமிழ்! தே
கோபுரத்தினின்றும் வீழ்ந்த அருணகிரியாரை ஆட்
திலகமே! சிவனார் தம்திருவே வேதம் நான்கினும்
தீர்க்கும் வேலவா குன்று தோறாடும் குமரா! கந்தா!
ணாகரா! கார்த்திகேயா! கண்ணின் மணியே! கலியு
மீட்ட அண்ணலே! எண்ணுதற்கரிய வண்ணக் கொழு
இன்பத்தின் எல்லையே! ஏழிசைப் பயனே அ

### ஆனந்தம் தந்திட தேர் ஏறிவருகின்றான்

சகல செல்வங்களும் நிறைந்த சுழிபுரப் பதியில் வந்த வினையும் வருகின்ற வல்வினையும் போக்கவல்ல பறாளா யம்பதி முருகன் இன்று தேர் ஏறி வருகின்ற கண் கொள்ளாக் காட்சி ஆனந்தத்தைத் தருகின்றது.

இந்த ஆலயத்தில் எமது தொண்டர் சபையினர் சகல தொண்டுகளையும் செய்து வருகின்றனர். குறிப்பாக மஹோற்சவ காலங்களில் அன்னதானம் சகல அடியார்களுக்கும் சிறப்பாக வழங்கப்படுகின்றது. தாக சாந்தியும் சிறப்பாக நடைபெறுகின்றது.

எமது தொண்டுக்கு சகல வழிகளாலும் அடியார்கள் உதவி செய்து வருகின்றார்கள். சகல அடியார்களும் பறா ளாய் முருகன் அருள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வேண்டுகின்றோம்.

தொண்டர் சபையினர்,
தலைவர்-க.கமலநாதன்
பறாளாய், சுழிபுரம்.

### மஹோற்சவ குருவின் ஆசியுரை



"தேரோட்டத் திருநாள் நல்லாசிகள்"

பாரில் பேரருள் பொலிவுடன் ஸ்கந்தத்தலங்களில் எழுந்தருளும் குஹன் தொன்மைமிகு பறாளாய் பதியில் கோயில் கொண்டு பழம்பெரும் சிவாச்சார்யார்கள் பக்திமான்களின் ஆராதனைக்கு அகப்பட்டு அருள் சொரிந்துவரும் திருத்தோற்றமும் அலங்காரக்கந்தன் அபிஷேகக்கந்தன். அன்னதானக் கந்தன் என்றெல்லாம் பெயர் தாங்கி அருட் காட்சி தரும் ஸ்கந்தப்பெருமான் பறாளாய் ஸ்தலத்தின் கண்ணே அர்ச்சனைக்கந்தனாக இருப்பது ஸ்தலப்பெருமை ஆகும். வேறெங்கும் காண முடியாதவாறு ஆறுமுகருக்கு ஆறுவகை நிவேதனங்களுடன் நிகழும் ஷண்முகார்ச்சனைக்கு நிகரில்லை. எங்கும் இல்லாதவாறு சில பாரம்பரிய முறை தழுவிய வழிபாடுகள் இங்கே உயர்வு பெற்று விளங்குகின்றன. இவற்றுக்கெல்லாம் காரணகர்த்தாவாக விளங்கும் ஸ்தானீக சிவாச்சாரிய திருக்குடும்பத்தினர்கள் போற்றுதலுக்குரியவர்கள் அவர்களது குருவருளுடனும், திருவருட் பொலிவோடும் இன்று மஹோற்சவத் திருவிழா உயர்வு பெறுகிறது. முருகப்பெருமானின் அறுபடை வீடுகளின் அலங்காரத் திருத் தோற்றங்களைத் தன்னகத்தே தாங்கிய திவ்ய ஸ்தலத்திலே ஸ்கந்தப்பெருமான் தேரேறி வருவதைத் தரிசிக்கின்ற அடியார்கள் பாக்கியம் பெற்றவர்கள். திருக்கோவிற் திருப்பணியாளர்கள் போற்றுதலுக் குரியவர்கள்.

மேலும் ஆன்மாக்களுக்கு அகத் தூய்மையை ஏற்படுத்த எம்பெருமான் தேரேறி வருகிறார். இதனால் ஆன்மாஈடேற்றம் கிடைக்கப்பெறுகிறது. இப்பெருவிழாவை நிகழ்த்துவிப்பவர்கள். அடியார்கள். தொண்டர்கள் அனைவருக்கும் முருகப்பெருமான் கிருபை கிடைக்கட்டும். எல்லோரும் புண்ணிய சீலர்களாக வாழ்ந்திருப்பார்கள். பக்த கோடிகள் அனைவருக்கும் தேரோட்டத் திருநாள் நல்வாழ்த்துக்களையும். ஆசிகளையும் தெரிவித்து மகிழ்கிறேன்.

" ஸ்ர்வ ஸாதக ப்ரயோக ரத்னா"
சிவஸ்ரீ ந.பிரசாந்தக்குருக்கள்-வட்டுக்கோட்டை.



ஆ

வே
தே

பற
பக்
கா

தெய்வயானை சகிதம்
வியப்பினைத்தரும். அழ
காட்சிதரும் இப்பெருமா
யாழ்ப்பாணம் வரும்போ
சந்நிதியில் தியானம் செ
உட்பிரகாரத்தில் எவ்வித
அடியார்கள் அங்கப் பிரத
இவ் ஆலயத்தின் சிறப்பா
எழில்மிது தோற்றத்துடன்
மிக்க வெள்ளரச மரம் 
கீழ் பைரவர் பற்றும் வட
நாகதம்பிரான் என்பவை
கொண்டு விளங்கும் பற
தரும் பக்தர்கள் வேண்
சமேத கலியுவரதன் முரு

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!
வெற்றி வேல் முருகா அரோஹரா
ஸ்ரீ அம்பாள் குறோசறிஸ்
எங்களிடம் சகல பொருள்களும்
தரமாகவும் மலிவாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
பண்டத்தரிப்பு

உங்களை அழகுபடுத்தும்
நகைகளுக்கு நாடவேண்டிய இடம்
S.K.T
மகாலட்சுமி
ஜுவலர்ஸ்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பாக்கியரத்தினம்
ஹாட்வெயர்
ஸ்ரோர்ஸ்
163, 165 பிரதான வீதி,
சங்கானை.
கிளை : தரன் றேடர்ஸ்
130, 132 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2664

கணேசா அழகு
(உரிமையாளர் :க.ர
பிரதான வீதி, பண்ட

புத்தம் புதிய புடைவை வகைகளுக்கும்
அழகு சாதனப் பொருள்களுக்கும்
நீங்கள் நாடவேண்டிய இடம்
முத்துமாரி
புடைவை பான்சி பலஸ்
பண்டத்தரிப்பு.

சகல வகையான புடைவை
வகைகளையும் பெற்றுக்கொள்ள
விநாயகர்
பட்டுச்சோலை
பிரதான வீதி, சங்கானை.

பலசரக்குப்பொருள்களை
நியாய விலையில் பெற்றிட...
கந்தசாமி அன்சன்ஸ்
பல்பொருள் வணிக நிலையம்
பிரதான வீதி, சங்கானை.

நவநாகரிக பட்டுப்புடைவைகளை
மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
புதிய அபிராமி
புடைவை மாளிகை
பிரதான வீதி, சங்கானை.

VI
றேட்
பிரதான வீ

கந்தசாமி அன் சன்ஸ்
(காந்திகடை)
பிரதான வீதி, சுழிபுரம்.

ஈஸ்வரா
நெற் கபே
ஈஸ்வரா பல்பொருள் வாணிபம்
பிரதான வீதி, சுழிபுரம்.

கலைமகள் விலாஸ்
சைவ உணவகம்,
பிரதான வீதி, சங்கானை.

பாபு
களஞ்சியம்
சுழிபுரம் மேற்கு, பெரியதம்பிரான்
கோவில் வீதி, சுழிபுரம்.

கலைவாணி
நகைமாளிகை
111 - B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


E.S. Perampal
Importer, Distributors of Bicycle &
50, Kasthuriyar Road
T.P: 021 222 2988 Email: es

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசுப்பிரமணிய தேவஸ்தானம்

# ழா சிறப்பிதழ்

# 2016) வெள்ளிக்கிழமை




## ழில் மிகு பறாளாய் முருகனை காண வாரீர்

, மலர்ந்த பன்னிரு விழித் தாமரை பிவுற்ற மலை யொத்த திருத்தோள் ண்டி நீண்டுள்ள அழகிய பன்னிரு யையும் மிதித் தலால் சிவந்தமலர் ற்ற திரு மகனே! குகனே! கனியே! வனே! ஜோதியாய் சுடர் விடும் வனே! துதிச் சொற்களுக்கு இனிமை தலைவனே! பக்தியினால் கண்களி டியார்களுக்கு அமுதே! முன்னைத் ம்படியாக நடம் பயில்கின்ற மயிலை வீசுகின்ற தாமரையுள்ள சரவணப் கமுநீர் க்கின்ற திருத்தணியும், சோலைமலையும், திருபரங்குன்றும், ற்றால மலையும், இலஞ்சியும், கதிர் திருச்செந்தில் நகரில் அரசு புரியும் ல் அரசே! அன்பர் மனத்துறையும் ாதி! ஆருயிர்த் துணையே! ஆராவ பெருமானே! வானவர் போற்றும் தேவாதி தேவா! திருவருணைக் ட்கொண்ட ஐயனே! செந்தமிழ்த் றும் மெய்பொருளானவா! வினை தா! கடம்பா! கதிர்வடிவேலா! கரு பியுகவரதா! விண்ணவரைச் சிறை காழுந்தே!

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே! சிவகுருபரா, சிலம்பா! தேசிகா! பாலசுப்பிரமணியா! கோல மயில் வீரா! சூர்பகைவா! சரவணபவா! குன்றெறிந்தோனே. குகா! சண்முகா! முன் னான்கு தோளா! முக்கண்ணி மைந்தா!

அரிமருகா! திருமுகா! வேல்முருகா வள்ளி மணவாளா! பாபசங்காரா! மன்னுயிர் அனைத்தும் போற்றும் மாதவா! காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பவா! மும்மல மறுக்கும் மூர்த்தியே!

எண்ணரிய பிறவிகளில் அரிதாகிய மானிடப் பிறவியை எனக்களித் தாய்! அதிலும் கூன் குருடு செவிடு நீங்கிப் பாங்குறப் பிறக்க அருள் செய்தாய் பிறந்தேன். வளர்ந்தேன் கல்வி பயின்றேன் கற்றதனால் ஆய பயன் நின்திரு வடிகளைப் பற்றுவதன்றி வேறென்றுளதோ? வீணே உண்ணு வதற்கும் உறங்குவதற்கும் எதையாவது உளறித் திரிவதற்குமா இப் பிறவியை எனக் களித்தாய்.

ஈசா! நின் பொன்னார் திருமேனியைக் கண்ணாரக்கண்டு களிக்கவும், என் கரங்களால் நாளும் நன் மலரெடுத்து நின்மின்னார் பொன்மேனியில் சாத்தி வணங்கவும் அல்லும் பகலும் அகமுருகி நின் பெருமை மிகு திருநாமங்களை என் வாயால் இசைக்கவும் நின் கோயில் வலம் வந்து ''முருகா முருகா'' என்று உருகா நற் சிந்தையுடன் ஆனந்தக் கூத்தாடி வணங்கி நற்கதி பெற்று உய்ய பச்சை மயில் வாகனமும் பன்னிரண்டு திண்தோளும், அச்சம் அகற்றும் அயில் வேலும் - கச்சைத் திருவரையும் சீறடியும் செங்கையும் ஈராறு அருள் விழியும் மாமுகங்கள் ஆறும் விரிகரணம் சிந்தப்புனைந்த திருமுடிகள் ஓராறும் எந்தத்திசையும் எதிர் தோன்ற எழுந் தருளி நேரும் இடர்களை யெல்லாம் தூளாக்கி எவ்வரம்கேட்பினும் அவ் வரத்தை தந்து மகிழ்ச்சியோடு என் உள்ளத்தில் புகுந்திருந்து எனது பற்றுக்களை நீக்கி மும்மலத் தொடர்புகளையும் அகற்றி, அடியேனை நின் திருவடித் தொண்டனாக ஆட்கொண்டு அடியேனுக்கு முன்னின்று திரு அருள் புரிவாயாக! உன் ஆனந்த நடனத்தை காண பறாளையம்பதி வாருங்கள் அவன் திருத்தேர் வடம் பிடித்து வினைதீர்க்கவாரீர்.

முருகன் அடியான் Dr. க. சிவராஜா (வாகை)

## ஆலய ஸ்தானீக பரம்பரை குருவின் ஆசிச்செய்தி

பறாளாயம்பதியிலே வீற்றிருந்து தம்மை நாடிவரும் பக்தர்களுக்கு வேண்டும் வரந்தந்து காத்தளும் ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமி பெருமானின் தேரோட்ட பெருவிழா இன்றைய தினம் நடைபெறுகின்றது.

வயலும் வயல் சார்ந்த தலமாக விளங்கும் தொன்மைமிகு இப் பறாளாயம்பதியிலே அண்ணல் ஈசுவர விநாயகருடன் இணைந்து பக்தர்கள காத்தருள்புரியும் முருகன் இங்கே அர்ச்சனைப் பிரியனாக காட்சிதரு றார். அழகிய மயில் மீது அமர்ந்து இன்முகத்துடன் வள்ளி ம் மூலவர் வீற்றிருக்க தெற்கு வாசலில் ஷண்முகர் காட்சிதரும் கோலம் அழகிய வதனங்கள் ஆறுடன் பன்னிருதிருக்கரங்கள் கொண்டு அபய வரதராக ானுக்கு இப் பூவுலகில் இணை ஏது? திருமுருககிருபானந்தவாரியார்சுவாமிகள் போதெல்லாம் இங்கே வந்து இந்த ஷண்முகப் பெருமானை வணங்கி அவன் செய்வது வழமையாகும். அடியார்கள் அங்கப்பிரதிஷ்டை செய்வதற்கு வசதியாக வித சந்திதியும் கிடையாது. மகோற்சவ காலங்களில் நூற்றுக்கணக்கான ஆண் பிரதிஷ்டை செய்வதும் பெண் அடியவர்கள் அடி அழித்து வழிபாடு செய்வதும் ப்பாகும். ஆலயத்தின் வட பகுதியில் அமைந்திருக்கும் தீர்த்தக்கேணி மிகவும் டன் காட்சி அளிக்கின்றது. அதன் கரையினில் 2000 ஆம் ஆண்டு பழமை வேம்புடன் இணைந்து பிரம்மாண்டமாகக் காட்சி தருகின்றது. இம் மரத்தின் வட இந்தியாவின் காசி ஷேத்திரத்தில் இருந்து கொண்டு வந்து ஸ்தாபித்த லிங்கம் லை அழகுற அமைந்துள்ளது. இப்பெருமை மிகு சிறப்புக்களைத் தன்னகத்தே பறாளாய் முருகப்பெருமான் தேர்த்திருவிழா சிறப்புற நடைபெறவும். வருகை ண்டும் வரம்பெற்று சிறப்புடன் வாழவும் எல்லாம்வல்ல வள்ளி தேவசேனா முருகப்பெருமான் திருவடி பணிந்து வாழ்த்தி ஆசி கூறுகின்றோம்.

குகசேவாரத்னா பிரம்மஸ்ரீ மு. பாலகுருசுவாமி சர்மா -
ஆலயகுரு - பறாளாய் சுழிபுரம்

## சிவபரம்பொருளின் அருளுருவாம் முருகனின் அருட்தலமே பறாளாயம்பதி

பரம்பொருளின் கருணையைப் பெறும் பெருநெறியே சைவம். சைவ மாம் சமயம் சாரும் ஊழ்பெறலரிது என்பது சைவத்தின் மேன்மையைப் பறைசாற்றுவது. அன்பின் முழுமைதான் முழுமுதற்பொருளான சிவம். சிவத்தின் கருணை வடிவில் ஒன்றே ஆறுமுகன். ஆறுமுகன் விருப்புடன் அமர்ந்து அருள் பொழியும் இடங்களில் சுழிபுரம் பறாளாயம்பதியும் ஒன்று. ஆறுபடை வீடுடைய முருக பிரான் விரும்பி உறையும் பதியாக பறாளாய் திருத்தலம் உள்ளது. முருகன் அடியார்கள் நிறைந்த தலம் பறாளாய்த் தலம். முருகன் அடியார்கள் நேர்த்திக் கடனாகக் காவடி எடுத்தும், கர்ப்பூரச் சட்டி எடுத்தும். ஆண்கள் அங்கப் பிரதட்சணம் செய்தும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்தும் வழிபாடாற்றி முருகனுடைய அருளுக்குப் பாத்திரமாகிச் சிறப்புடன் வாழுகின்றனர். மூர்த்தி, தல சிறப்புடைய பறாளாயானுக்கு ரதோற்சவம் கண்கொள் ளாக் காட்சி. ஊர்மக்கள் மாத்திரமல்லாமல் அயலூரவரும், முருகபக்கதர் களும் ரதோற்சவத்தில் பங்குகொண்டு முருகனருளில் திளைத்து இன்பம் பெறுகின்றனர்.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது மூதாட்டி ஔவையாரின் முதுமொழி. ஆலய வழிபாடு சிவபுண்ணியச் செயல். இறையருள் இல்லை யேல் வாழ்க்கை சூனியமாகிவிடும். இறையருளைப் பெறும் அருள் நிதியங்கள் ஆலயங்கள். ஆலயத்தில் இடம்பெறும் நித்திய நைமித்திய வழிபாடுகள் அருளைப் பெறும் சாதனங்கள். அதிலும் ரதோற்சவம் மிகவும் உயர்ந்தது. அனைத்துயிர்களும் அருள்பெறும் சாம்பவி தீட்சையாகும். எங்கள் முன் னோர்கள் வழிபட்டு அருட்செல்வம் பெற்ற பறாளாய் சிவசுப்பிரமணியர் ஆலயப் பெருவிழாவாம் ரதோற்சவத்தில் கலந்து கொள்ளும் அடியவர்கள் அனைவரும் மேன்மை பெறுவர்.

நாச்சியார் செல்வநாயகம்
முதுநிலை விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

## துன்பங்கள் போக்கிட காத்தருள் முருகா

பறாளாயம்பதியில் கோயில் கொண்டு அருள் பாலிக்கும் கந்தவேற் பெருமான் இன்று அழகிய சித்திரத் தேரில் வீதி யுலாவருகின்றார். இந்த அருமையான நன்நாளில் அடி யார்கள் அனைவரும் சகல செல்வங்களைப் பெற்று பல் லாண்டு காலம் சீரும் சிறப் புடனும் வாழ எல்லாம்வல்ல எம்பெருமான் சண்முகப் பெரு மானை வேண்டி நிற்கின் றோம்.

வேலாயுத இரத்தினசபாபதி
தலைவர், தர்மகர்த்தாசபை,

## குமரவேள் திருமுன்னுற்றால் தூயவராவோம்

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றைத் தன்னகத்தே பெற்றுக் கொண்டது சுழிபுரம் என்னும் தொல்பதியாகும். இஃது யாழ்ப்பாணத்தில் வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ளது. இப்பதியின் கண்ணேயுள்ள பறாளாய் ஈசுவர விநாயகர் ஆலயமும் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி ஆலயமும் மிகப் பிரசித்தி பெற்றவை. நாற்பாலும் மருதநிலம் சூழ வீற்றிருக்கும் இத்திருத்தலத்திலுள்ள ஸ்ரீசுப்பிரமணிய சுவாமிக்கு இன்று தேர்த்திருவிழா நடைபெறுகின்றது.

வேண்டுவார் வேண்டும் வரம் யாவும் இத்திருத்தலத்துக்குச் சென்றால் பெற்றுக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடன் பக்தர்கள் அரோகரா ஒலி யெழுப்பி மெய்மறந்து வழிபடுகின்றனர். எங்கள் இருகண்களாகவும், கருமணி களாகவும், மணியொலியாகவும் விளங்குகின்ற ஆறுமுகப் பெருமான் தமது ஆறு முகங்களாலும், பன்னிரண்டு கண்களாலும், பன்னிரு திருக்கரங்களா லும் மெய்யடியார்களுக்கு அருளமுதத்தை அள்ளி வழங்கிக் கொண்டிருக் கின்றார். வடந்தொட்டுத் தேர் இழுக்கும் அடியார் பெருமக்கள் அருணகிரி நாதருடன் சேர்ந்து பறாளாய் முருகனைக் கண்டு தொழ அந்த நான்முகன் நாலாயிரங்கண் படைத்திலனே என இறும்பூதெய்தி ஏக்கமுறுகின்றனர். குமரவேள் திரு முன்னுற்றால் தூயவராகி மேலைத் தொல்கதியடை வோம் என்ற நம்பிக்கை யுடன் அவனருளாலே அவன் தாள் அடைவோம்.

பண்டிதை திருமதி பொன்.பாக்கியம், சுழிபுரம்.

## இராமரின் கால் பதியப்பட்ட திருவடிநிலையில் தீர்த்தோற்சவம்

மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் சிறப்புக்களுடைய நாற் புறமும் வயல் களினால் சூழப்பட்ட சுழிபுரம் பறாளாய் எனும் பதியில் வள்ளி தேவ சேனா பதியாக விளங்குகின்ற முருகப் பெருமானுக்கு வைகாசி மாதத்தில் மஹோற்சவம் நடைபெறுகின்ற இந்நாளில் அவனுடைய பெருமையை நினைப்பதில் அகம் மகிழ்கின்றேன். இராமரின் கால் பதியப்பட்ட திருவடிநிலையில் தீர்த் தோற்சவம் நடை பெறுகின்ற இவ் வாலயத்தில் 11 ஆம் நாள் தேர்த் திரு விழாவும் நாளை திருவடி நிலையில் தீர்த்தத் திரு விழாவும் நடைபெறும். இத்தினத்தில் அவனுடைய அடியார் களுக்கு எம் பெரு மானுடைய திருவருள் கிடைக்க வேண்டும் என்று அவனை வேண்டி நிற்கின்றோம்.

அப்புத்துரை மனுநீதி.
நிர்வாக உறுப்பினர், தர்மகர்த்தா சபை.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது மூதாட்டி

கு மாடம்
.ரவீந்திரன்)
டத்தரிப்பு.

நகுலேஸ்
ஹாட் வெயர் ஸ்ரோர்ஸ்
சித்தன்கேணி வீதி, பண்டத்தரிப்பு.

VRV
சென்ரர்
வீதி, சுழிபுரம்.

இ.ராசநாயகம்
பறாளாய் வீதி,
சுழிபுரம்.

சகல வணிகப் பொருள்களையும்
மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
கணேஸ்ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

alam & Co
cle & Bicycle Spare Parts
oad, Jaffna.
: espco50@gmail.com

அருள் மோட்டோர்ஸ்
அன் சேவிஸ்
வழக்கம்பரை, சுழிபுரம்.

க.தம்பு அன் சன்ஸ்
பிரதான வீதி, சுழிபுரம்.

குமார் கடை
பறாளாய் வீதி, சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்சத்திரப் பொதுப் பலன்கள்

**நட்சத்திரப் பொதுப்பலன்கள் என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் அனுசம், கேட்டை நட்சத்திரங்களது பலன்களைப் பார்த்தோம். இன்று மூலம், பூராடம் நட்சத்திரங்களது பலன்களைப் பற்றிப்பார்ப்போம்.**

## மூலம்

மூலம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் ஆள் பாதி ஆடைபாதி என்பதற்கு முழு உதாரணமாய் உங்களது உடைகளையும் ஆபரணங்களையும் பேணிக்காப்பீர்கள்.

மற்றவர்களைக் கவரும் விதமாய் உங்களது செயற்பாடுகளை அமைத்துக் கொள்வீர்கள். மனதுக்குப் பிடித்தமான உணவு வகைகளை ருசித்துச் சாப்பிடுவீர்கள். மற்றவர்களால்புகழப்படும்காரியங்களைச் செய்வதில்அதிக ஆர்வம் கொண்டிருப்பீர்கள். பயணம் செய்வதிலும் அதிக நாட்டம் உடையவராய் இருப்பீர்கள். வருங்காலத்துக்கான சேமிப்பை மேற்கொள்வதில் அனைத்து வழிகளையும் பின்பற்றுவீர் கள். மிக்க நித்திரைப்பிரியர், புறங்கால் அழகுடையவர், செய்யும் கருமங்களைக் குற்றம் இல்லாமல் செய்பவர், பக்திமான், தாய், தந்தையருக்குப்பிரியர், தவநெறி உடையவர், சிறுதீனி தின்பவர், லோபி, கண் சிறுத்து சிவந்து இருக்கும், கல்விமான், கொடுமையே செய்பவர், பந்துக்களைச் சேராதவர், முன்கோபி.

சோம்பல் என்பதே இல்லாமல் மிகவும் சுறுசுறுப்பாகச் செயற்படுவர். கல்வி கேள்விகளில் ஆர்வம் நிறைந்திருக்கும். பார்ப்பதற்கு லட்சணம் பொருந்தியவர்களாக இருக்கும் இவர்கள். பழங்களை விருப்பத்தோடு உண்பர். உடல் வலிமையோடு திகழ்வர்.

1. மூலம் முதல் பாதத்தில் பிறந்தவர் கிழங்கு வகைப் பொருள்களில் விருப்பம் உள்ளவர், விவசாயத்தொழில்களையே செய்பவர், ரோகி பித்தம் கொண்டவர்.

2. மூலம் இரண்டாம் பாதத்தில் பிறந்தவர் வயிற்று நோய் உடையவர், பொய் பேசுபவர், நல்ல புத்தி உள்ளவர், எல்லோரிடமும இன்பம் உடையவர்.

3. முலம் மூன்றாம் பாதத்தில் பிறந்தவர் பில்லி, சூனியம், இவற்றில் ஆர்வம் உள்ளவர், புதிய கலைகளைக் கற்றுக் கொள்பவர், அழகுள்ளவர், சோம்பேறி, கருமி, நல்லபழக்கங்களில் விருப்பம் உள்ளவர்.

4. மூலம் நான்காம் பாதத்தில் பிறந்தவர் நல்ல பலவான், காரியத்தில் வல்லவர், சாது, கோபத்தை அழித்தவர், ஞானி பகைவரை வெல்லுபவர், கழுத்தில் நோய் உள்ளவர்.

## பூராட்டம்

பூராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் அனைத்து வகையான புத்தகங்களைப் படிப்பதிலும் ஆர்வத்துடன் இருப்பீர்கள். சுத்தத்துக்கு முதலிடம் கொடுப்பீர்கள்.

எந்த நேரத்திலும் சுத்தமாக இருக்க வேண்டும் என்ற எதிர்ப்பார்ப்புடன் உங்களது செயல்களை அமைத்துக் கொள்வீர்கள். மற்றவர்களிடம் நயமான முறையில் பேசி சிக்கலான சமயங்களிலும்திறமையாகச்சமாளித்து விடுவீர்கள். திறமையாக மற்றவர்களிடம் வேலை வாங்குவதில் சமர்த்தராய் இருப்பீர்கள். குறுகிய நெற்றி உடையவர், உயரமானவர், விசனம் உள்ளவர், வாசனைப்பிரியர், மன்னருக்கு நண்பர், உயர்ந்த பதவியை வகிப்பவர், சிற்றுண்டிப்பிரியர், தாய்க்கு விருப்பமானவர், தன்னை வந்தடைந்தவரை இரட்சிப்பவர், சிறிய சிவந்த கண்கள் உடையவர், நீண்டகை, கால்களை உடையவர், அழகுடையவர், விசால மனம் உடையவர், வலிமையான கரங்களையும் தோள்களையும் உடையவர், பொய் சொல்லாதவர், பயணம் செய்வதில் விருப்பம் உடையவர், பெண்களுக்கு இனியர், தரும சிந்தனை உடையவர்.

சுகபோகங்களை அனுபவிப்பதில் விருப்பம் கொள்வர். நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் செல்வாக்கோடு வாழ்வர். பிடிவாத குணத்தோடு மிக கடுமையாகப் பேசும் சுபாவம் இருக்கும். வாக்குவாதங்களில் அடிக்கடி ஈடுபடுவர்.

1. பூராடம் முதல் பாதத்தில் பிறந்தவர் மிகுந்த வணக்கத்துக்கு உடையவர், குழந்தைபேறு இல்லாதவர், சச்சரவு உண்டாக்குபவர், நடுவயது வரை ஆயுள் இருப்பவர்.

2. பூராடம் இரண்டாம் பாதத்தில் பிறந்தவர் யோகி, அழகுள்ளவர், நண்பர்கள் இல்லாதவர், அறிவற்றவர்.

3. பூராடம் மூன்றாம் பாதத்தில் பிறந்தவர் சுகவாளி, செல்வம் உடையவர், வாலிப வயதில் தாயை இழப்பவர், பெரிய வியாதி உடையவர், நற்குணவான், தெளிவான சிந்தனை உடையவர்.

4. பூராடம் நான்காம் பாதத்தில் பிறந்தவர் பலமில்லாதவர், முதுகுநோய் உள்ளவர், பலவான், தந்தையைச் சிறு வயதிலேயே இழப்பவராயும் இருப்பார்.

(தொடரும்)

# அளவையின்(ல்) அளவற்ற இசை ஒலியும் அருள் ஒளியும்..!

செ.உமாசுதன்

அதிகாலை 4.30 மணி. இருளின் சுவீகரிப்பினுள் இருந்து, விடியல் எனும் மகள் புலர்வு என்ற சுகந்தத்தின் பாதையை அண்மிக்கின்ற தருணம்.அளவையூர் துயில் எழும்புகின்ற கோலம் அற்புதம்.கிராமத்தின் நடுநாயகமாக விளங்கி அருளாட்சிபுரியும் அளவெட்டி கும்பழாவளை விநாயகப்பெருமான், சந்திரசேகரனாய் மிளிரும் சொரூபம்; கருணையின் வடிவம்.கோபுர தரிசனமாய் அந்த அதிகாலைப் பொழுதின் ரீங்காரமாய் எல்லோரது செவிகளிலும் அலைபாயும் ஒரு கீதம். விக்கினங்கள் தீர்க்கும் விக்னேஸ்வரனின் மீது ஸ்வரங்கள் பூக்களாய்ச் சொரியும் திருப்பள்ளியெழுச்சியின் சந்தம் அற்புத நர்த்தனம்.கிராமத்தின் வாசிகளாய். அவன் அருகிருக்கும் அடியவர்களாய்.அன்பு கொண்டு பக்த நர்த்தனம் புரியும் அன்(நண்)பர்களாய், அவன் அருகாய் வதியும் மக்கள் புண்ணியம் செய்தவர்கள்.அவன் அருள் பெறக் கொடுத்து வைத்தவர்கள்.

யாழ் குடாநாட்டின் வடக்காக அமைந்த மிகப் பரந்த பிரதேசம் வலிகாமம். எப்போதும் வலிகளையே சுமந்து நிற்கின்ற ஊர்களை அரவணைத்துள்ள ஓர் பிராந்தியம். இருந்தும் மண்வளம், கடல் வளம்,கலை வளம் கொழிக்கும். அதில் மூழ்கித் திழைக்கும் கலை ரசிகர்களையும், கலைஞர்களையும் கண்களாய்க் கொண்ட ஆத்மம் அது. யாழின் இசையை பெருமிதம் செய்யும் சொர்க்கம் அது. அந்த வகையிலே அளவெட்டிக் கிராமம் கலை வளங்கள் செழித்துக் கொழிக்கும் களஞ்சியம். எப்போதும் சிவந்திருக்கும் செம்மண் பூமி.வயல் நிலங்களும்,தென்னம்தோப்புகளும், வானை முட்டும் தமிழன் குலச் சின்னங்களான பனை மரங்களும்,அதனிடை வடலிகளும் பச்சையமாய் சூழ்ந்திருக்கும் செழுமையது. என்ன குறையிருக்கிறது





அவ்வூரில்? எல்லாமே நிறைவுதான் அங்கே! கலை எனும் பூக்கள் பூத்துக் குலுங்கும் பூந்தோப்பு அது.கரகம், காவடி, நடனம்,நாயனங்களின் குரலிசை நர்த்தனங்களும், தவிலிசையின் தாள லயங்களும், தென்றலிடை எங்கும் அசையும்; எல்லோர் மனங்களிலும் சங்கமித்து சந்தமிசைக்கும்.சிற்பங்கள்.சித்திரங்கள் புராணக் கதைகளாகி மிளிர்கின்றன. அந்தத் துறை சார்ந்து துலங்குகின்றன.இசைத் தென்றல் ஊரெங்கும் பேசுகிறது.இசை ஆசான்களும்.அவர்களது மாணாக்கரும் பொருள் துலங்க இசைத் தேனை செவிகளில் தித்திக்கச் செய்கின்றனர்.இதற்கிசைந்து ஆறறிவு ஜீவன்கள் மட்டுமல்ல, ஐந்தறிவு ஜீவன்களும் தங்கள் மொழியில் பாடி மகிழ்கின்றன.மாடுகள் சிரிக்கின்றன. விவசாயியின் உற்ற நண்பனாய் உழைக்கின்றன. [illegible] சவாரி செய்கின்றன. கலை எனும் பூக்களுக்கு நிகராக இயற்கை தந்த அழகின் வண்ணமான மலர்களும் இறையருளை எங்களிடம் கலைநயமாய் சமர்ப்பிக்கின்றன.கை வண்ணங்கள் இங்கே மலர் கொண்டு ஓவியம் செய்கின்றன. மாலை, சரம், பூசாந்திரம்,சாத்துப்படி, தண்டிகை என இறைவடிவங்களை அலங்காரம் செய் கின்றன.சப்பறம்,மணிச் சுப்பறம்,என அருளின் அழகின் பொலிவைத் தருகின்றன. மாருதப் புரவீகவல்லி தனது குதிரை முக சாப விமோசனம் நீங்கிட தில்லைநடராஜன் எழுந்தருளியிருந்து அருளாட்சி செய்கின்ற கீரிமல்லைத் தீர்த்தக் கரைதனிலே மூழ்கினாள். தன் குதிரை முகம் நீங்கப் பெற்றாள். மாவைக் கந்தனை ஸ்தாபிதம் செய்து ஆலயம் அமைத்து மாவிட்டபுரக் கந்தனை வணங்கினாள். அதன் பரிகாரமாக.பிரதி உபகாரமாக ஏழு விநாயகர் ஆலயங்களை [illegible]யின் வழியே அமைத்து வணங்கிச் சென்றாள்.அந்த விநாயகர் ஆலயங்களுள் நடுநாயகமாக அளவையம்பதியிலே அமர்ந்து அருட்கடாடசங்களை அடியவர்களக்கு வழங்கி வருகின்ற பதியே கும்பழாவளை விநாயகர் ஆலயம்.

இத்தனை சிறப்புக்களுடன் எழில் கொஞ்சும் ஊர் இப்போது திருக்கோலம் பூண்டிருக்கிறது. அளவையூர் கும்பழாவளை விநாயகனின் திருவிழாக் காலம் இந்திர விழாவாக மிளிர்கிறது.இசை ஒலிகளிடை அருள் ஒலி எங்கும் பரவுகிறது. அடியவர்களை அன்பாக ஆட்கொண்டு அருளின் நிலைத் திருப்பை ஆசீர்வாதமாய் வழங்குகிறது.பன்னிரண்டு தினங்கள் இடம்பெறுகின்ற வருடாந்த மகோற்சவம் இனிதே ஆரம்பமாகி இடம்பெற்றுவருகின்றது.

அப்பப்பா: வர்ணிக்க வார்த்தைகளில்லை. விக்கினங்கள் தீர்க்கும் விநாயகனின் அடியவராய்.அவனைப் பாடிப் பணியும் அன்பராய் நீங்களும் அந்த ஆலயம் சென்று வாருங்களேன்.அவன் அருளாட்சியையும் திருக் காட்சியையும் கண்டு அருள் பெற்றுப் போங்களேன்.வாழ்வில் சகல சௌபாக்கியங்களையும் அனுபவித்து வாழ்ந்திடுங்களேன். அளவையின்(ல்) அளவற்ற இசை ஒலியும் அருள் ஒளியும் யாழ் இசையிடை வானுயர்ந்து நிற்கிறது.அருள் பெற்றிட உங்களை அழைக்கிறது.பக்தியோடு சென்று விநாயகன் தாழ் பணிந்து அருள் பெற்றிடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




('காசி நோக்கி ஒரு பயணம்' என்ற தலைப்பில் நேற்றைய உதயனின் 17 ஆம் பக்கத்தில் பிரசுரமான கட்டுரையின் தொடர்ச்சி இது.)

# காசி விஸ்வநாதருக்கு அபிசேகம்

லிங்கபுத்ரன்

அலாரம் வைத்து விட்டுத் தூங்கினாலும் பெரிதாகத் தூங்க முடியவில்லை - தூக்கம் வரவில்லை என்றே சொல்ல வேண்டும். அடிக்கடி எழும்பிக் கடிகாரத்தைப் பார்த்தபடி இருந்து விட்டு 12.45 மணிக்கு எழுந்து குளித்து ஆயத்தமாகத் தொடங்கினோம்.

நாங்கள் தயாராகிக் கொண்டிருக்கிறோம் என்ற சத்தத்திலேயே பக்கத்து அறையில் இருந்த பப்ளுவும் தயாராகி விட்டார். எல்லோருமாக கீழே இறங்கி வந்து தங்ககத்தின் காவல் பாது காவலரையும் எழுப்பி தங்ககத்தை விட்டு வீதிக்கு வந்தோம்.

**அதிகாலை 1.50 மணி**

எங்களூரில் காலை 6 மணிக்கு இருப்பது போல அந்த நேரத்திலும் வீதியில் மனிதர்கள் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்கள். பால் வண்டிகள் சென்று கொண்டிருந்தன. எங்கள் தங்ககத்துக்கு அண்மையாக இருந்த சந்தியில் சைக் கிள் ரிக்சோவை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு முந்திய நாள் போலவே ஒரு ரிக்சோவில் இரண்டு பேர் அமர காசி விஸ்வநாதர் ஆலயத்தின் 3 ஆவது நுழைவாயிலை அடைந்தோம். நுழைவாயில் அருகே காவலில் இருந்த உத்தரப் பிரதேச பொலிஸாரின் பாதுகாப்புச் சோதனைகளை முடித்துக் கொண்டு, ஆலயத்தின் வாயிலை நோக்கி நகர்ந்தோம்.

அங்கே வாயில்கள் இன்னமும் திறக்கப்படவில்லை. எங்களுக்கு முன்னரே வந்திருந்த மற்றுமொரு குடும்பத்தினர் வாசலருகே காத்திருந்தனர். நாங்கள் போய் வரிசையில் நின்று சிறிது நேரத்திலேயே எங்களுக்குப் பின்னால் பலர் வரிசையில் இணைந்துகொண்டனர். நீண்ட வரிசை ஆலயத்துக்குச் செல்வதற்காகக் காத்திருந்தது. அந்த வேளையில் மீண்டும் பப்ளு சாஸ்திரிகளின் ஒழுங்குபடுத்தல் மிளிர்ந்தது.

ஆலய அறங்காவல் சபையின் அதிகாரிகள் வந்து அதிகாலை பூஜைக்காக வாங்கிய அனுமதி சீட்டுக்களைப் பரிசோதித்த பின்னர் உள்ளே அனுமதிக்கப்பட்டோம். உள் வாசலில் மீண்டும் உடற்சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் முண்டியடித்துக் கொண்டு ஓடிப் போய் மூலஸ் தானத்தின் கிழக்கு வாசலில் இடம் பிடித்துக் கொண்டோம்.

வாசலில் மூலஸ்தானத்துக்கு மிக அண்மையில் அமர்ந்திருந்து சுமார் ஒரு மணி நேரமாக இடம்பெற்ற அபிசேக ஆராதனைகளைக் கண்டு களித்தோம். அதன் பின் அர்ச்சகர்களால் பிரசாதமும் ஆசீர்வாதமும் வழங்கப்பட்டன.

உள்ளே சென்று சிவலிங்கத்தைத் தொட்டு வழிபட்டு பிரதான குருக்களின் ஆசீர்வாதம் பெறுவதற்காக மீண்டும் மூலஸ்தான வாயிலில் வரிசையில் நின்றோம். மிக விரைவாக வேக வேகமாக நகர்ந்த வரிசையில் நாமும் ஒருவராகப் போய் அர்ச்சகரிடம் பணத்தைக் கொடுத்து, தலையைப் பணிந்து சிவலிங்கத்தை ஆரத் தழுவி வணங்கி எழும் போது பிரதான குருவின் கையால் நெற்றியில் திலகம் இடப்பட்டதுடன், விஸ்வநாதப் பெருமானுக்குச் சாற்றப்பட்டிருந்த செவ்வந்தி மாலை ஒன்றைக் கழற்றி என் கழுத்தில் போடப்பட்டது. அந்த நேரத்தின் ஆனந்தம் மதிப்பிட முடியாததொன்று.

என் சந்தோசத்துக்கு அளவே இல்லை. வானுக்கும் - பூமிக்குமாய் குதித்தல் என்பார்களே, அப்படி ஒரு உணர்வு.



உண்மையில் மனதில் இருந்த சில சஞ்சலங்கள் எல்லாம் போய் பக்குவமான நிலை. இதற்கு மேல் எதுவும் தேவையில்லை என்றிருந்தது.

கையில் பெற்றுக்கொண்ட பிரசாதத்தோடும், கழுத்தில் மாலையோடும் வீதியில் சுற்றி வந்த பின் ஆலய முன் மண்டபத்தில் ஓரிடத்தில் அமர்ந்து கொண்டோம். அடியார்கள் விஸ்வநாதப் பெருமானுக்குத் தங்கள் கைகளாலேயே அபிசேகம் செய்வதற்கான நேரம்.

எங்களுக்குரிய நேரம் வந்தது. மண்டபத்தில் எங்களை அமர்த்தி அர்ச்சகர் ஒருவர் சங்கல்பம் செய்து சுலோகங்களைச் சொல்லி பூசித்ததன் பின் அபிசேகத் திரவியங்கள் எங்கள் கைகளில் தரப்பட்டு அதே அர்ச்சகர் முன்னே செல்ல மூலஸ்தானத்தினுள் அழைத்துச் செல்லப்பட்டோம். மூலவரைத் தரிசிப்பதற்காக நீண்ட வரிசையில் அடியார்கள் நின்ற போதிலும், அபிசேகத் திரவியங்களோடு சென்ற எங்களுக்கு முன்னுரிமை தந்து காவலர்களால் வழி விலக்கித் தரப்பட்டது.

மீண்டும் விஸ்வ நாதரை ஆரத்தழுவி அபிசேகம் செய்வதற்கான வாய்ப்பு.

கொண்டு வந்திருந்த ஒவ்வொரு கிண்ணங்களிலுமிருந்த திரவியங்களை சிவலிங்கத்தின் மீது சாத்தி என் கைப்பட அபிசேகம் செய்து தொட்டு வணங்கினேன்.

தொடர்ந்தும் சிவலிங்கத்தைத் தொட்டபடி அமர்ந்திருக்க ஆசைப்பட்டாலும், எனக்குப் பின்னால் என்னோடு வந்த இருவர் காத்திருந்ததனால், பிரிய மனமின்றி மூலஸ்தானத்தை விட்டு வெளியேறினேன். வெளியே வந்ததும் எங்களுக்குச் சங்கல்பம் செய்த அர்ச்சகரிடம் ஆசிபெற்று பிரசாதங்களைப் பெற்றுக் கொண்டோம். எங்கள் கைகளில் அர்ச்சகர் நூல்களைக் கட்டி விட்டதையடுத்து விஸ்வநாதர் ஆலயத்திலிருந்து காலபைரவர் ஆலயம் நோக்கி புறப்பட்டோம். காசி யாத்திரை செல்பவர்கள் காசியில் அனைத்துக் கோயில்களையும் வணங்கிய பின், விஸ்வநாதர் ஆலயத்தில் வழிபாடுகளைமுடித்துக்கொண்டு காலபைரவர் ஆலயத்துக்குச் சென்று வழிபட்ட பின்னர் தான் காசியில் இருந்து வெளியேற வேண்டும் என்பது நம்பிக்கை. அதன் மூலமே காசி யாத்திரையின் முழுப் பயனும் கிடடுமாம். அத்துடன் காசி கால பைரவர் ஆலயத்தில் ராசி நட்சத்திரங்கள் சொல்லி அங்கு வழங்கப்படும் கறுப்பு நிறக் கயிற்றைக் கட்டிக்கொள்வதன்மூலம்திருஷ்டி தோசங்கள் விலகும் என்றும் நம்பப்படுகிறது.

அங்கு வழங்கப்படும் கறுப்புக் கயிற்றை காசிப் பிரசாதமாக யாத்திரிகர்கள் எடுத்து வந்து பிறருக்கும் கொடுக்க வேண்டும். காலபைரவர் திருவுருவத்தை வீட்டில் வாசலில் கட்டுவதன் மூலம் கெட்ட சக்திகள் நம்மை அண்டாமல் பார்த்துக் கொள்ளவும் முடியும் என்று பப்ளு சொன்ன விளக்கங்களோடு மிகுந்த பய பக்தியோடு காலபைரவரின் தேவஸ்தானத்துள் நுழைகிறோம். ஏற்கனவே பைரவர் என்றால் எனக்குப் பயம். ஆலயத்தினுள் சென்று வழிபாடுகள் முடித்து வெளியேறும்வரை அது விலகவில்லை.

பைரவா - பைரவா என்று உச்சரித்தவாறே மூலவரைத் தரிசித்து, சுற்றிக் கும்பிட்ட பின்னர், அருகில் இருந்த குரு ஒருவரிடம் கைகளில் கயிற்றைக் கட்டிக் கொண்டு ஊருக்கு எடுத்துச் செல்வதற்காக பிரசாதத்தையும் வாங்கிக் கொண்டோம்.

மீண்டும் சைக்கிள் ரிக்சோவில் தங்ககத்தை வந்தடைய காலை 7 மணி ஆகியிருந்தது.

கங்கைக் கரையோரம் இருக்கின்ற சில தவச்சாலைகளைப் (ஆச்சிரமங்களை) பார்த்து விட்டு வருவோம் என்று பப்ளு அழைத்த போதும் என் மனம் அதற்கு இடம் கொடுக்கவில்லை.

மனம் நிறைந்த விஸ்வநாதரின் தரிசனம் - நிறைவாக கால பைரவரின் தரிசனம், அப்படியே வீடு போய் சேர வேண்டும் என்று உள்மனம் சொன்னது. வாரணாசியை விட்டு வெளியேறுவதற்குச் சில மணிகள் இருந்த போதிலும், நான் வேறெங்கும் செல்லாமல் அறையிலேயே ஓய்வெடுத்துக் கொண்டேன்.

விமானப் பயணத்துக்கான ஏற்பாடுகள் அனைத்தையும் முதல் நாளே செய்து வைத்திருந்ததனால், பிரசாதங்களை மட்டும் பக்குவமாக கைப்பையினுள் வைத்துக் கொண்டு விமான நிலையம் செல்வதற்குத் தயாரானோம்.

வாடகைக்கு அமர்த்தப்பட்ட காரில் பப்ளுவுடன் தங்ககத்தை விட்டு வெளியேறினோம். சுமார் 35 நிமிட பயணத்தின் பின்னர் வாரணாசி விமான நிலையத் துக்கு வந்து சேர்ந்தோம். வாரணாசியிலிருந்து டெல்லிக்குச் சென்று அங்கிருந்து சென்னை வழியாகக் கொழும்புக்கு வருவது தான் எமது பயண ஏற்பாடாக இருந் தது.

குறிப்பிட்ட படி எமக்கான விமானப் பயணமும் இடம்பெற்றது. தடங்கல்கள், தாமதங்கள் ஏதுமின்றி மனம் நிறைந்த காசி யாத்திரையை நிறைவு செய்து கொண்டு வாரணாசி மண்ணிலிருந்து விடை பெற்றோம்.

(முற்றும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உதயன் சிறுவர் பகுதியில் 'வர்ணம் தீட்டுவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பிவைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாகமூட்டும் வகையில் கச்சிதமான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் வெள்ளிக்கிழமைகளில் இந்தப் பகுதியில் வெளியிடப்படும்.



க.அபிநயா,
தரம் – 4 சி,
யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்.

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



# வரலாற்றில் இன்றைய தினம்



526 - இப்போது சிரியா என அழைக்கப்படும் பிரதேசத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 250,000 மக்கள் சாவு.

1498 - போர்த்துக்கேயக் கண்டு பிடிப்பாளர் வாஸ்கோட காமா இந்தியாவுக்கான கடல் வழிப்பாதையைக் கண்டு பிடித்து, இந்தியாவின் கோழிக்கோட்டை வந்தடைந்தார்.

1882 - ஜேர்மன் பேரரசு, ஒஸ்ரியா - ஹங்கேரி, மற்றும் இத்தாலி இராச்சியம் இடையே முக் கூட்டு உருவாக்கப்பட்டது.

1883 - கறகாட்டோ எரிமலை குமுறத் தொடங்கி மூன்று மாதங்களின் பின் பு வெடித்ததில் 36,000 பேர் வரை சாவு.

1891 - சினிமா வரலாறு. தோமஸ் அல்வா எடிசனால் பொது மக்களுக்கான காட்சி 'கைன்ரோஸ்கோப்'பில் காட்டப்பட்டது.

1899 - நியூயோர்க் நகரின் லெக்ஸிகன் வீதியில் மணிக்கு 12 மைல் வேகத்தில் கார் செலுத்திய சாரதி ஜேக்கப் ஜேர்மன் என்பவருக்கு போக்குவரத்து விதியை மீறியமைக்கான தண்டம் முதன் முதலாக விதிக்கப்பட்டது.

1902 - கியூபா, அமெரிக்காவிடமிருந்து சுதந்திரம் பெற்றது. தோமஸ் எஸ்ராடா பல்மா நாட்டின் முதல் ஜனாதிபதியானார்.

1948 - ஷியாங்கே ஷேக் சீனக்குடியரசின் முதல் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1965 - பாகிஸ்தான் சர்வதேச விமான சேவை விமானம் PIA-705கெய்ரோ சர்வதேச விமான நிலையத்தில் தரை இறங்குகையில் விபத்துக்குள்ளாகி பயணிகள் மற்றும் விமானிகள் உட்பட121 பேர் சாவு.

1980 - கியூபெக்கில் இடம் பெற்ற கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் கனடாவிட மிருந்து சுதந்திரம் பெறுவதற்கு எதிராக 60 வீதமான பொதுமக்கள் வாக்களித்தனர்.

1985 - வொய்ஸ் ஒப் அமெரிக்கா சேவையின் ஒரு பகுதியாக றேடியோ மார்றி, கியூபாவுக்குக்கான தனது ஒலிபரப்பைத் தொடங்கியது.

1989 - தினமன் சதுக்க படுகொலைக்கான சூழலை ஏற்படுத்திய, ஜனநாயகத்துக்கு சார்பான ஆர்ப்பாட்டத்தை எதிர்கொள்ளும் சீன அதிகாரிகளின் மார்ஷல் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது.

1999 - அரசியல் தீர்வுக்கு 66 சதவீத மக்கள் ஆதரவு என கருத்துக் கணிப்புத் தெரிவிப்பு.

1999 - இனப் பிரச்சினைத் தீர்வுக்கு உதவ 21 நாடுகள் விருப்பம் தெரிவிப்பு.

1999- இலங்கை - தென்னாபிரிக்கா உலகக் கிண்ண கிரிக்கெட்டின்போது கிரிக்கெட் மைதானத்தை வட்டமிட்ட விமானத்தைச் செலுத்திய விமானிக்கு எதிராக லண்டன் நீதிமன்றில், இலங்கை மனு தாக்கல் செய்தது.

2002 - தீவகத்துக்குப் பரப்புரைக்குச் சென்ற தமிழர் கூட்டமைப்பினரைத் தாக்கியமை, பத்திரிகையாளர் மயில் வாகனம் நிமலராஜன் படுகொலை ஆகியவை தொடர்பாகத் தேடப்பட்ட ஈ.பி.டி.பி உறுப்பினர் நெப்போலியன் பிரிட்டனுக்குச் சென்று தலைமறைவு. கைதுசெய்ய இன்ரபோலின் உதவி கோரப்படுவதாக செய்தி தெரிவிப்பு.

2003 - சொந்த இடங்களில் மீள்குடியமர்வை வலியுறுத்தி, ஆயிரக் கணக்கான மக்கள் யாழ்.செயலகம் முன்பாக மறியல்; திடீரென கண்டி வீதியை மறித்தும் போராட்டம்.

2003 - ஈராக் புனரமைப்புத் திட்டத்தை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா சமர்ப்பிப்பு.

2003 - தமிழக முன்னாள் அமைச்சர் தா.கிருஷ்ணன் மதுரையில் ஓட ஓட விரட்டப்பட்டு வெட்டிக்கொலை.

2006 -அல்லைப்பிட்டி மக்கள் தீவகத்தை விட்டு இடம் பெயர்வு.

2006 - மன்னாரிலிருந்து இராமேஸ்வரம் புறப்பட்ட அகதிகள் படகு கவிழ்ந்ததில் 5பேர் சாவு. 9 பேர் உயிருடன் மீட்பு.

2006 - செய்தி சேகரிக்க தீவகம் சென்ற இரண்டு ஊடகவியலாளர்கள் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுதலை.

2006 - 1.8 மில்லியன் ஆடைத் தொழிற்சாலைத் தொழிலாளர்களின் மிகப் பெரிய தொடர் வேலை நிறுத்தம் பங்களாதேஷில் தொடங்கியது.

# அன்பா, செல்வமா, வெற்றியா சிறந்தது?



ஓர் ஊரில் குமரன் என்பவன் தனது தாய் தந்தையுடன் வசித்துவந்தான். ஒரு நாள் அவன் வீட்டின் முன் மூன்று வயதானவர்கள் வந்து ' உள்ளே வரலாமா' என்று கேட்டனர்.

குமரனின் தந்தை 'வாருங்கள்' – என்றார்.

'நாங்கள் மூவரும் ஒன்றாக வரமுடியாது... எங்களில் எவராவது ஒருவர் தான் வரமுடியும்...என் பெயர் பணம்...இவர் பெயர் வெற்றி...இவர் பெயர் அன்பு..எங்கள் மூவரில் ஒருவர்தான் ஒரு வீட்டுக்குள் செல்லமுடியும்...எங்கள் மூவரில் உங்களுக்கு எவர் வேண்டுமோ அவரை அழைத்துக் கொள்ளுங்கள்' என்றார் பணம் எனப்படுபவர்.

குமரனின் தந்தை 'வெற்றியை அழைக்கலாம்..நாம் எந்த வேலையைச் செய்தாலும் அதில் வெற்றியடையலாம்' – என்றார்.

ஆனால் குமரனோ ...'அப்பா பணத்தையே உள்ளே அழைக்கலாம்...நம்மிடம் பணம் சேர்ந்துவிட்டால்... வெற்றி ..உட்பட ...அனைத்தையும் வாங்கலாம்' என்றான்.

ஆனால் குமரனின் தாயோ 'வேண்டாம்...அன்பையே அழைக்கலாம்.அன்பு தான் முக்கியம்' என்றாள்.

பின்னர் மூவரும்,'அன்பு உள்ளே வரட்டும்' என்றனர்.

அன்பு உள்ளே வர, அவரைத் தொடர்ந்து வெற்றியும், பணமும் கூட உள்ளே நுழைந்தனர். உடன் குமரனின் அம்மா 'அன்பை மட்டும் தானே உள்ளே அழைத்தோம்' என்றார்.

அன்பு சொன்னார்,' நீங்கள் பணத்தையோ, வெற்றியையோ அழைத்திருந்தால்..மற்ற இருவரும் வெளியே நின்றிருப்போம். ஆனால் அன்பான என்னை வரச்சொன்னதால்..நான் இருக்கும் இடத்தில் தான் பணமும், வெற்றியும் இருக்கும்..ஆகவே அவர்களும் உள்ளே வந்து விட்டனர்'

அன்பு உள்ளம் இருந்தால்.. எமது வாழ்வில் வெற்றியும்,தேவையான வசதிக ளும் தாமாகவே வந்துவிடும்.

அன்பே சிவம்...அன்பே முக்கியம்.

இதையே வள்ளுவர்..

'அன்பின் வழிய துயிர்நிலை, அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு' என் றார்.

அன்பு நெஞ்சத்தின் வழியில் இயங்குவதே உயிருள்ள உடலாகும். இல்லையேல், ,அது வெறும் எலும்புத்தோல் போர்த்திய வெறும் உடலாகும். சுருங்கச் சொன்னால்..அன்பு மனம் கொண்டவர்களே மனிதர்கள் ஆவர், என்பது இந்தக் குறளின் கருத்தாகும்.

# பொன்மொழிகள்

1. உண்மையைக் கடைப்பிடிக்கும் மனிதன் அதிர்ஷ்டம் இல்லாதவனாக இருந்தாலும், வாழ்வில் உயர்ந்த நிலையை அடைவான் – அரிஸ்டாட்டில்
2. பொறுமையோடு இடைவிடாமல் முயற்சி செய்பவனுக்கே வெற்றி கைகட்டிச் சேவகம் செய்யக் காத்திருக்கிறது – ஹெக்டர்
3. கடினமான வேலைகளைச் செய்வதில் மகிழ்ச்சியடைபவர்களே எப்போதும் புகழ் பெறுகிறார்கள் – மகாகவி மில்டன்
4. ஒரு குழந்தை கனவானாகவோ, சீமாட்டியாகவோ இருக்கும்படி செய்வது கல்வியல்ல, நல்ல மனிதனாக இருக்கச் செய்வதே கல்வி – ஹெர்பர்ட் ஸ்பென்ஸர்
5. கல்வி என்பது தெரியாததைத் தெரியச் செய்வதன்று. ஒழுக்கத்தை முறைப்படி ஒழுகச் செய்வதும் இன்பம் அளிப்பதுமாகும் – ரஸ்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரை எம்.பி.அருளானந்தன்



# வைகாசி விசாகன் முருகப்பெருமானின் பதினாறு தோற்றங்கள்

வைகாசி விசாகன் என முருகப்பெருமான் போற்றப்படும் மூர்த்தியாக காட்சி அளித்து எம்மையெல்லாம் கலியுகத்திலிருந்து ஆட்சி செய்கின்றான். அழகன் முருகப்பெருமானின் பதினாறு வகையான தோற்றங்களை மனம் மொழி மெய்களினால் தரிசித்து இந்த வைகாசி விசாகம் கூடி வரும் நாளில் வாழ் வாங்கு வாழ்வோமாக.

**சக்திதரன்**
ஒரு முகத்துடன் இருகைகள் ஆகியவற்றை உடையவனாய் முருகன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றான். இடக்கையில் வச்சிராயுதமும், வலக்கையில் வேலும் உடையனாயிருப்பான். காத்தல், அழித்தல் ஆகிய சக்திகளைக் கொண்டவன் என்பதை இந்த வடிவம் எமக்கு நினைவூட்டுகின்றது.

**ஸ்கந்தன்**
ஒருமுகம் இரு கைகள் உடைய இந்த வடிவம் நின்ற கோலத்தில் வலக்கையில் தண்டத்தையும் பெருமான் இடக்கை தன் இடுப்பில் இருக்கும்படி காட்சியளிக்கின்றான்.

**சேனாதிபதி**
ஆறுமுகங்களுடன் பன்னிரு கரங்களோடு இடக்கை தன்னுடைய இடப்புறத்தில் அமர்ந்த நிலையில் இருக்கும் தேவ சேனாவை அணைத்தவாறிருக்க, வலக்கையானது அபய முத்திரையுடன் காட்சியளிக்க, எஞ்சியுள்ள பத்துக் கரங்களிலும் கேடயம், கத்தி, அங்குசம், குலிசம், வேல், வில், அம்பு, கதாயுதம், சேவல், தாமரை, பாசம் போன்ற பல்வேறு பொருள்கள் காணப்படும்.

**சுப்பிரமணியன்**
ஒருமுகம் இரு கைகளுடன் நின்ற கோலத்திலுள்ள அமைப்பினன். வலக்கை அபய முத்திரையைக் காட்ட இடக்கையானது இடுப்பில் வளைந்தவாறு காணப்படும்.

**கஜவாகனன்**
யானை மீது அமர்ந்த கோலத்தில் ஒரு முகம் நான்கு கைகளையும் உடையவன். இடக்கைகளுள் ஒன்று வரதமுத்திரையோடிருக்கையில், மற்றொரு கரம் சேவலைப் பற்றியபடி இருக்கும். வலக் கரங்களுள் ஒன்று வேலினையும், மற்றொன்று கத்தியையும் பிடித்தவாறிருக்கும்.

**சரவணபவன்**
ஆறுமுகங்களோடு பன்னிரு கரங்களை உடையவன். வலக் கரங்களுள் ஒன்று அபயமுத்திரை காட்ட பிறகரங்களில் வேல், மணி, கத்தி, தாமரை மற்றும் சேவல் ஆகியவை இருக்கும். இடக்கரங்களில் ஒன்று வரத முத்திரை காட்ட பிறவற்றில் கதாயுதம், உளி, வில், அம்பு மற்றும் பாசக்கயிறு ஆகிய பொருள்கள் காணப்படும். சரவணப் பொய்கையுடன் தொடர்புடையவனான இந்த முருகனின் அமைப்பு தாமரை மலர் மீது நின்ற கோலத்தில் அமைக்கப்பட்டிருக்கும்.

**கார்த்திகேயன்**
ஆறுமுகங்களையும் ஆறு திருக்கரங்களையும் உடையவன். வலக்கரங்களில் ஒன்று அபய முத்திரையைக் காட்ட மற்றவற்றில் வேலும், கத்தியும் இருக்கும் . இடக்கைகளுள் ஒன்று வரத முத்திரை காட்ட மற்றவை குலிசத்தையும் கேடயத்தையும் கொண்டிருக்கும்.

**குமரன்**
முருகன் இளமைத் தோற்றமுடையவன் என்பதைக் காட்டும் வகையில் இந்த வடிவ அமைப்பில் ஒரு முகமும் நான்கு கைகளும் இருக்கும். வலக்கையில் வில்லும் கத்தியும் இருக்க இடக்கரங்களில் சேவற் கொடியும் கேடயமும் காணப்படும். வலப்புறத்தில் வள்ளி நாச்சியார் அமர்ந்த கோலம் காணப்படும்.

**சண்முகன்**
மயில்வாகனத்தில் வலப்புறத்தில் வள்ளியுடன் இடப்புறத்தில் தெய்வயானையுடன் அமர்ந்த கோலத்தில் ஆறுமுகங்களுடன் பன்னிருகைகளோடு கூடிய உருவமைப்பை உடையவன். வலக்கை ஒன்று அபய முத்திரை காட்டும். பிற வலக்கைரங்கள் வேல் கத்தி சக்கரம் அம்பு மற்றும் பாசக் கயிறு ஆகியவற்றைக் கொண்டிருக்கும். இடக்கை ஒன்று வரத முத்திரையோடு கூடிய இடக்கரங்களில் கத்தி திரிசூலம் சக்கரம் தண்டம் மற்றும் வில் ஆகியவை காணப்படும்.

**தாரகாரி**
தாரகனை வதைத்தவனென்பதைக்காட்டும் வடிவ அமைப்பு இது. ஆறுதலைகளோடு பன்னிரண்டு கரங்களும் இருக்கும். அபய முத்திரையுடன் கூடிய வலக்கரங்களில் சேவற்கொடி கேடயம் அங்குசம், பாசக்கயிறு மற்றும் குலிசம் ஆகியவை இருக்கும். வரத முத்திரைகளோடு கூடிய இடக்கரங்களில் கத்தி, திரிசூலம், சக்கரம், தண்டம் மற்றும் வில் ஆகியவை இருக்கும்.

**சேனானி**
படைத்தளபதி என்ற அமைப்பினான இந்த முருகன். ஆறுமுகன் ஆறுமுகங்களையும் பன்னிரு கரங்களையும் உடையவன். வலக்கைகளுள் ஒன்று அபய முத்திரை காட்டும். கதாயுதம், கத்தி, திரிசூலம், வேல் மற்றும் அங்குசம் போன்ற ஆயுதங்கள் பிற கைகளில் தரப்பட்டிருக்கும். இடக்கைகளுள் ஒன்று வரத முத்திரையைக் காட்டும். பிற இடக்கரங்கள் குலிசம், அம்பு, தாமரை, தண்டாயுதம், பாசக் கயிறு ஆகியவற்றை ஏந்தியிருக்கும்.

**பிரம்ம சாஸ்தா**
ஒரு முகமும் நான்கு கரங்களும் கொண்டவன். அவனது வலக்கரங்களில் ஒன்று அபய முத்திரையுடனிருக்க மற்றொரு கையில் மாலையொன்றிருக்கும். இடக்கரங்களில் ஒன்று வரத முத்திரையுடன் இருக்க மற்றொரு கை கமண்டலத்தை ஏந்தியிருக்கும்.

**வள்ளி கல்யாண சுந்தரர்**
வலப்புறத்தில் வள்ளியைக் கொண்டுள்ள இந்த வடிவமைப்பில் ஒரு முகமும் நான்கு கைகளும் இருக்கும். வலக்கரங்களுள் ஒன்று அபய முத்திரையோடிருக்க, மற்றொன்று உருத்திராட்ச மாலையைக் கொண்டிருக்கும். இடப் புறக் கரங்களில் கும்பம் இருக்க மற்றொரு கையானது இடையில் வைக்கப்பட்டிருக்கும்.

**பாலசுவாமி**
ஒருமுகமும் இருகைகளையும் உடைய இந்த வடிவ அமைப்பில் வலக்கரத்தில் தாமரை இருக்க இடக்கை இடையில் இருக்கும்.

**கிரெஞ்ச பதன்**
கிரெஞ்ச மலையாக உருமாறிய தாரகசூரனைப் பிளந்தவன் என்ற கூற்றினை விளக்குவது இந்த அமைப்பு. ஆறுமுகங்களுடன் எட்டுக்கரங்களையும் உடையவன். இந்த வடிவில் முருகன் வலக்கைகளில் அபய முத்திரையுடன் வேல், கத்தி, கம்பு ஆகியவற்றை ஏந்தியிருப்பான். இடக்கரம் ஒன்று வரத முத்திரையைக் காட்ட பிறகரங்களில் குலிசம் கேடயம் மற்றும் வில் ஆகியவை இருக்கும்.

**மயில்வாகனன்**
மயில்வாகனன் என்ற இந்த அமைப்பில் ஒரு முகமும் நான்கு கரங்களும் இருக்கும். வலது கைகளுள் ஒன்று அபய முத்திரையைக் காட்டும். மற்றொன்றில் வேல் இருக்கும். இடக்கைகளுள் ஒன்று வரத முத்திரையைக் காட்ட மற்றொரு கையில் குலிசம் இருக்கும்.
இத்தகு தோற்றங்களில் அன்பர்களுக்கு அருள் செய்ய பதினாறு வகையில் காட்சியளித்து ஆட்கொள்கின்றான் முருகப் பெருமான்.

# நல்லிணக்கத்துக்கான சிறந்ததொரு நகர்வு

விடுதலைப்புலிகளுக்கு அஞ்சலிசெலுத்த அவகாசம் வழங்கியுள்ள அரசு, பயங்கரவாதத்தைத் தோற்கடித்து நாட்டை ஒற்றுமைப்படுத்திய படைச்சிப்பாய்களை மறந்துவிட்டது என்பது மகிந்த அணியினரின் புதிய கோபமாக மாறியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றிணைந்து உருவாக்கியுள்ள கூட்டரசுக்கு எதிராக நாட்டு மக்களை ஒன்றுதிரட்டும் கடுமையான பிரயத்தனத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் அவருக்கு ஆதரவான அணியினரும் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆதரவு அலையாகட்டும் அல்லது எதிர்ப்பு அலையாகட்டும் மக்களை உணர்ச்சியூட்டி அலையெனத் திரட்டுவதில் மகிந்த ராஜபக்ச விசேடமான திறமை கொண்டவர். தனக்குரிய ஆதரவு அலையைப் பெருக்கிக்கொள்வதற்காக மக்களை எந்தவிதத்திலும் உருவேற்றக்கூடிய திறமைமிக்கவர் அவர். ஐ.நாவுக்கு எதிராகவும் மக்களை ஒன்றுதிரட்டியவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த. தனது பத்து வருட ஆட்சிக்காலம் முழுக்கத் தென் னிலங்கைச் சிங்கள மக்களை உணர்ச்சிகரமான அரசியல் மூலமே அவர் தம்வசப்படுத்தி வைத்திருந்தார்.

இவ்வாறான அரசியல் பாணியால் ஏற்படுகின்ற பாதகமான எதிர்விளைவுகளைப் பற்றியெல்லாம் கொஞ்சம் கூடப் பொருட்படுத்தாத வித்தியாசமான அரசியல் வாதியாகவே அவரைப் பார்க்க முடிகிறது.

மகிந்த இப்போது தனது இலக்கை நோக்கி வேகமாகவே காய்களை நகர்த்தத் தொடங்கியிருக்கிறார். அரசின் மீது சிங்கள மக்களுக்கு அவநம்பிக்கையை ஏற்படுத்துவது, புலிகள் தொடர்பாகப் புரளியைத் தோற்றுவிப்பது, இனவாதத்தை வளர்ப்பது போன்ற வழிகளிலெல்லாம் தென்னிலங்கையில் இப்போது எதிரணியினர் பரபரப்பை உருவாக்கி வருகின்றனர்.

அரசு மீது சிங்கள மக்களுக்கு உருவாகும் கடுமையான வெறுப்பானது, மீண்டும் தங்களுக்கு அதிகாரத்தைப் பெற்றுத்தருமென மகிந்த அணியினர் நம்புகின்றனர். அதே வேளை, தங்களது முன்னைய ஆட்சிக்காலத்தின்போது இடம்பெற்ற மிக மோசமான ஊழல் மோசடிகளையெல்லாம் மூடி மறைப்பதற்கும், அது தொடர்பான குற்றச்சாட்டுகளெல்லாம் இன்றைய அரசு மேற்கொள்ளும் அரசியல் பழிவாங்கலென சிங்கள மக்களை நம்பவைப்பதற்கும் அவர் முற்படுகின்றார்.

இன்றைய அரசியல் சூழலானது ராஜபக்சாக்களைப் பொறுத்தவரை வாய்ப்பானதாகவே அமைந்திருக்கிறது. தற்போது அதிகாரத்தில் இருப்பது தனியொரு கட்சி உருவாக்கியிருக்கும் அரசல்ல.

அரை நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக எதிரும், புதிருமாக அரசியல் நடத்திவந்த இரண்டு பிரதான தேசியக் கட்சிகள் இணைந்தே இன்றைய அரசை அமைத்திருக்கின்றன. இவ்வாறானதொரு கூட்டரசை எவ்வாறேனும் பிளவடைய வைக்கவேண்டுமென்பதே மகிந்த அணியினரின் முக்கிய இலக்காகும்.

எதிர்க்கட்சிகளைச் சிதறடிப்பதில் மகிந்த ராஜபக்ச உண்மையிலேயே செயற்றிறன் மிக்கவர். அவர் தனது ஆட்சிக் காலம் முழுக்க பிரதான எதிரணியான ஐக்கிய தேசியக் கட்சியை அமைதியாக இயங்க இடமளித்ததில்லை. அந்தக் கட்சியில் உள்ளோரைத் தனது பக்கம் வளை[த்]தெடுப்பதில் அவர் எப்போதும் குறியாக இருந்தா[ர்]. அதில் வெற்றியும் கண்டார். மகிந்தவின் இத்தகை[ய]




அரசியல் சூழ்ச்சியிலிருந் ஜே.வி.பியினாலும் தப்பி கொள்ள முடியவில்லை.
மக்களைக் குழப்பமடையச்செ யும் அரசியலே எதிரணியால் இ போது தீவிரமாக முன்னெ கப்பட்டுக்கொண்டிருக்கிற

மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தவும், அரசி மீது வெறுப்பை ஏற்படுத்தவுமே எதிரணியினர் இ வாறான அரசியல் பாணியைக் கையாள்கின்ற என்பது தெரிகிறது. உண்மையான ஜனநாயகத்தை புதியதொரு அரசியல் கலாசாரத்தையும் தோற்றுவி தற்கு இன்றைய அரசு முற்படுகின்றபோதிலும் மகி அணியினரின் தந்திரோபாயங்கள் அரசுக்குப் பெ பாதிப்பையே ஏற்படுத்துகின்றன.

மகிந்த தரப்பினரின் குறுகிய அரசியல் இலாப நே கங்களுக்கு அடிபணியாமல், போர் வெற்றி விழா முன்னர் போன்று பெருமெடுப்பில் நடத்துவதில்லை என தீர்மானித்து அதனை வெறுமனே வார்த்தையில செயலிலும் காண்பித்துள்ளமையானது, நல்லாட்சி அ நல்லிணக்கத்துக்கான பாதையில் திடமாக முன்செல்கின் என்பதை உறுதிப்படுத்துவதற்கான முக்கிய நகர்வாகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | 6 | 9 | | | | |
| | | | | | 5 | 2 | | 9 |
| | 4 | | | 8 | 7 | | | |
| 9 | | | | | | 1 | | |
| 6 | | | 3 | | 4 | | | 2 |
| | | 5 | | | | | | 3 |
| | | | 5 | 7 | | | 9 | |
| 5 | | 7 | 4 | | | | | |
| | | | | 2 | 1 | | | 8 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 1 | 6 | 9 | 7 | 8 | 4 | 5 |
| 6 | 7 | 9 | 5 | 4 | 8 | 3 | 1 | 2 |
| 4 | 8 | 5 | 3 | 1 | 2 | 7 | 6 | 9 |
| 2 | 9 | 8 | 1 | 6 | 3 | 4 | 5 | 7 |
| 5 | 3 | 7 | 4 | 2 | 9 | 6 | 8 | 1 |
| 1 | 4 | 6 | 7 | 8 | 5 | 2 | 9 | 3 |
| 9 | 1 | 3 | 8 | 7 | 6 | 5 | 2 | 4 |
| 8 | 5 | 2 | 9 | 3 | 4 | 1 | 7 | 6 |
| 7 | 6 | 4 | 2 | 5 | 1 | 9 | 3 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# ஜி.வி.யின் பாடல்கள் வெளியீடு



"டார்லிங்" படத்துக்குப் பிறகு, இயக்குநர் சாம் ஆண்டன், இசையமைப்பாளர், நடிகர் ஜி.வி.பிரகாஷ் ஆகியோர் மீண்டும் இணைந்திருக்கும் படம் "எனக்கு இன்னொரு பேர் இருக்கு". ஜி.வி.பிரகாஷுக்கு ஜோடியாக ஆனந்தி நடித்திருக்கும் இந்தப் படத்தை லைக்கா புரடெக்ஷன்ஸ் நிறுவனம் தயாரித்து இருக்கிறது. இந்த நிறுவனத்தின் இன்னொரு தயாரிப்பான சங்கரின் "எந்திரன்" 2 ஆம் பாகத்தில் ரஜினிக்கு வில்லனாக நடித்து வருகிறார் பொலிவூட் நடிகர் அக்ஷயகுமார். இரண்டு படங்களுமே ஒரே நிறுவனம் தயாரிக்கும் படங்களென்பதால் "எனக்கு இன்னொரு பேர் இருக்கு" படத்தின் பாடல்களை நடிகர் அக்ஷயகுமார் வெளியிட்டுள்ளார். இதனால் இந்தப் படம், கோலிவூட் இரசிகர்கள் மட்டுமன்றி, பொலிவூட் இரசிகர்கள் வரையில் கவனம் பெற்றிருக்கிறது. 4 பாடல்களும், ஒரு இசையில் இடம்பெற்றுள்ள "எனக்கு இன்னொரு பேர் இருக்கு" படத்துக்கு ஜி.வி.பிரகாஷே இசையமைத்துள்ளார்.

பனித்துளி @mymindvoice

தாண்டி
விடக்கூடிய பள்ளம் தான்...
இறங்கி கடந்தால்...
இன்னொரு பரிமாணம்..
பயணத்துக்கு!!

WhatsApp

ஆசிரியர்; "படிச்சி முடிச்சதுக்குப் பின் என்ன பண்ணலாம் என்று இருக்கிறாய்?"
மாணவன்; "புக்கை மூடி வைக்கலாம் என்று இருக்கிறேன் சார்"

ஆசிரியர்; "சுரேஷ்... நீ மட்டும் ஏன் ஹோம் வோர்க் பண்ணலை?"
சுரேஷ்; "நான் ஹொஸ்ரல்ல தங்கி இருக்கிறேன் சார்"

படித்ததில் பிடித்தது

ஆசிரியர்; "நீ மூன்றாம் மாடியில் இருக்கும் போது தீப் பிடித்துக் கொள்வதாக நினைத்துக்கொள். எப்படி அங்கிருந்து தப்பிப்பாய்?"
மாணவன்; "ரொம்ப ஈஸி சார். கற்பனைப் பண்ணுவதை நிறுத்திக் கொள்வேன்"

ஆசிரியர்; "உங்க பையன் இங்கிலிஸில் படுவிக்கா இருக்கிறான் சார்"
தந்தை; "தமிழில் எப்படி இருக்கிறான் என்று சொல்லுங்க சார்"
ஆசிரியர்; "தங்களின் மகன் ஆங்கிலத்தில் மிகவும் வலுவிழந்து இருக்கிறான்"
தந்தை; ????







# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** குழப்பம் நீங்கி, மனதில் தெளிவு உண்டாகும். தொழில், வியாபாரத்தில், உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். சேமிக்கும் விதத்தில் வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**இடபம்:** வாழ்வில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு உருவாகும். தொழில், வியாபாரத்தில், உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். குடும்பத் தேவை தாராள செலவில் நிறைவேறும்.

**மிதுனம்:** மனதில் இனம் புரியாத சஞ்சலம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில், வருமானம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் நேரம் தவறாமையைப் பின்பற்றவும். உடல் நலத்துக்கு ஒவ்வாத உணவைத் தவிர்க்கவும்.

**கடகம்:** அடுத்தவர் விடயத்தில், கருத்துச் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில், குறைகளைச் சரி செய்வது நல்லது. பெண்கள் வீட்டுச் செலவுக்காகக் கடன் வாங்குவர். பிள்ளைகளின் செயற்பாடு நிம்மதியளிக்கும்.

**சிங்கம்:** மனதில் உற்சாகம் நிலைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். அரச விடயத்தில் நன்மை கிடைக்கப் பெறுவீர்கள்.

**கன்னி:** குடும்பத்தினர் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில், புதிய முயற்சியால் ஆதாயம் காண்பீர்கள். சேமிப்பு உயரும். வெகுநாள் காணாமற் தேடிய பொருள் கிடைக்கும்.

**துலாம்:** புதிய திட்டம் மூலம் வளர்ச்சி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், நல்ல முன்னேற்றம் உண்டாகும். ஆதாயம் கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும்.

**விருச்சிகம்:** சிலர் உங்களைப் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில், விடாமுயற்சி தேவைப்படும். லாபம் சுமார். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர். சொத்தின் முக்கிய ஆவணங் களைப் பிறர் பொறுப்பில் தரக் கூடாது.

**தனுசு:** எதிர்ப்புகளை சமயோசிதமாக முறியடிப்பீர்கள். தொழில், உற்பத்தி, விற்பனையில் வளர்ச்சி அதிகரிக்கும். நிலுவைப்பணம் கிடைக்கும். உறவினர் வருகையால், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**மகரம்:** மனதில் தெய்வ நம்பிக்கை உண்டாகும். தொழிலில், அபிவிருத்தி பணியில் ஈடுபடுவீர்கள். வருமானம் உயரும். நண்பருக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறை வேற்றுவீர்கள். விருந்து விழாவில் பங்கேற்பீர்கள்.

**கும்பம்:** உறவினர் எதிர்பார்ப்புடன் அணுகுவர். தொழில், வியாபாரத்தில், இடையூறை சரி செய்வது அவசியம். வருமானம் படிப்படியாக உயரும். உடல்நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம்.

**மீனம்:** உறவினர் பேச்சால் பிரச்சினை உருவாகலாம். தொழில், வியாபாரத்தில், இலாபம் மிதமாக இருக்கும். சுப விடயத்தில் தாமதம் உண்டாகும். அடுத்தவருக்காகப் பணப் பொறுப்பை ஏற்க வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீரையை எப்படிப் பார்த்து வாங்குவது?

கீரைகள் வாங்கவே பயமாக இருக்கிறது. இருப்பதிலேயே அதிக கெமிக்கல் தெளிக்கப்படுவது கீரைகளில் தான் என்று கேள்விப்படுகிறோம். எல்லோராலும் வீட்டிலேயே கீரை வளர்க்க முடியாத நிலையில் பாதுகாப்பான கீரையை எப்படிப் பார்த்து வாங்குவது? கீரை சமைக்கும் முன் எப்படி சுத்தப்படுத்த வேண்டும்?

ஆரோக்கிய வாழ்வுக்குத் தேவையான சரிவிகித உணவை பூர்த்தி செய்வதில் கீரைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. உடலுக்குத் தேவையான தாதுக்கள், விற்றமின்கள் மற்றும் புரதங்களைப் பெற கீரைகளைத் தினசரி உணவில் சேர்த்துக் கொள்வது மிகவும் அவசியம்.

கீரைகளின் நன்மைகளைப் பற்றிப் பேசும் போது அதன் வளர்ப்பின் போது உபயோகப்படுத்தப்படும் பூச்சிக்கொல்லிகள், பூஞ்சைக்கொல்லிகள், களைக் கொல்லிகள் போன்ற இரசாயனங்களால் ஏற்படும் தீமையும் எமது நினைவுக்கு வந்து நம்மை பயமுறுத்தும். மேலும் எல்லோராலும் இயற்கை முறையில் வளர்க்கப்பட்ட கீரைகளை வாங்குவது சாத்தியமானது அல்ல.

எனவே, கீரைகளின் மேல் பகுதியில் இருக்கும் இத்தகைய இரசாயனங்களில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வது மிகவும் அவசியம். சில சிறிய செயல் முறைகளின் மூலம் மேற்கூறிய இரசாயனங்களை கீரையிலிருந்து எளிதில் களைய முடியும். கீரைகளை வாங்கும் போது ஆரோக்கியமானவையாகப் பார்த்து வாங்க வேண்டும். வெள்ளை அல்லது துரு போன்ற புள்ளிகளோ, கோடுகளோ அல்லது துகள்களோ இருப்பின் அவை பூஞ்சை அல்லது பூச்சிகளின் முட்டையாக இருக்கலாம்.

எனவே அவற்றை நீக்கி விட வேண்டும். முதலில் கீரைகளை சுத்தமான நீரில் கழுவ வேண்டும். பின்னர் உப்பு நீரில் இரண்டு அல்லது மூன்று முறை கழுவ வேண்டும். குளிர்ந்த நீரில் கழுவுவதன் மூலம் 70-80 வீத இரசாயனங்களை நாம் அகற்ற முடியும். பின்னர் வெதுவெதுப்பான நீரில் கழுவுவது அல்லது நீராவியில் வேக வைப்பது போன்றவையும் இந்த இரசாயனங்களைக் களைய உதவும்.

2 அல்லது 3 கரண்டி வினிகரை நீரில் கலந்து 15-20 நிமிடங்கள் அதில் ஊற வைத்து சமைக்கும்போது இரசாயனங்கள் பெருமளவு நீங்கி விடும். மேலும் ஒரு கரண்டி எலுமிச்சைச்சாறுடன் ஒரு கரண்டி சமையல் சோடா மற்றும் ஒரு கப் நீர் சேர்த்து தயாரிக்கும் எளிய கலவையில் 5-10 நிமிடங்கள் ஊற வைத்து பின்னர் நல்ல நீரில் கழுவுவதன் மூலமும் இரசாயனங்களை உணவுப் பொருள்களிலிருந்து நீக்கலாம்.

கீரைகளை நன்கு கழுவிய பின்னரே நறுக்க வேண்டும். நறுக்கிய பின் கழுவும் போது அதிலுள்ள சத்துக்களை வெகுவாக இழக்கிறோம். கீரையை வேக வைத்த நீரை சாம்பார் போன்ற பதார்த்தங்கள் செய்யப் பயன்படுத்துவதன் மூலம் அதிலுள்ள சத்துகள் வீணாகாமல் பயன் படுத்தமுடியும்.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 600 | 800 | 700 | 800 | – |
| நண்டு | 250 | 400 | 300 | 450 | 500 | 200 | – |
| கணவாய் | 600 | 700 | 500 | 500 | 600 | 800 | – |
| பாரை | 550 | 600 | 500 | 600 | 700 | – | 450 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 600 | – | – |
| சீலா | 300 | 500 | 400 | 500 | 400 | – | 400 |
| விளை | 650 | 400 | 400 | 500 | 500 | 600 | 300 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 300 | – | – |
| கும்பிளா | 400 | 500 | 300 | 450 | 400 | – | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 450 | 300 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 300 | 500 | 300 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 200 | 400 | 300 |
| நகரை | 250 | 300 | – | 250 | 600 | – | 320 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | – | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | 250 | 200 | 400 | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 300 | – | 200 |
| மதனம் | 150 | 300 | 180 | 300 | 250 | – | 200 |
| கொய் | 100 | 200 | 60 | 80 | 100 | 200 | – |
| பாலை | 400 | 300 | 250 | 350 | 400 | 300 | – |
| வாழை | 100 | 200 | 200 | 400 | 300 | – | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | [illegible] | நெல்லியடி | திருநெல்வேலி | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 60 | 80 | 80 | 120 | – | 40 | 70 |
| கத்தரி | 140 | 80 | 80 | 100 | 100 | 140 | 70 | 80 |
| கரட் | 120 | 120 | 80–200 | 100 | 160 | 140 | 70 | 140 |
| மரவள்ளி | 60 | 60 | 60 | 60 | 50 | 80 | 40 | 40 |
| பயிற்றை | 200 | 120 | 80 | 140 | 170 | 100 | 90 | 100 |
| பாகல் | 140 | 120 | 130 | 140 | 160 | 120 | 120 | 120 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 100 | 100 | 100 | 120 | 60 | 60 |
| பெ.வெங்காயம் | 80 | 90 | 80 | 90 | 100 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 100 | 140 | 100 | 160 | 100 | 120 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 40 | 40 | 15 | 35 |
| தக்காளி | 100 | 140 | 140 | 180 | 160 | 240 | 140 | 180 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 40 | 40 | 40 | 35 | 30 |
| கீரை | 30 | 30 | 40 | 15 | 30 | 40 | 25 | 40 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 30 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 400 | 200 | 200 | 200 | 300 | 300 | 60 | 200 |
| புடோல் | 100 | 60 | 120 | 60 | 60–80 | 80 | 30 | 80 |
| கோவா | 140 | 120 | 100 | 120 | 120–140 | 160 | 90 | 100 |
| வெண்டி | 100 | 80 | 80 | 120 | 100–120 | 120 | 50 | 80 |
| போஞ்சி | 200 | 160 | 200 | 180 | 180 | 200 | – | 180 |
| லீக்ஸ் | 200 | 160 | 100–160 | 120 | 160 | 250 | 100 | 140 |
| தேங்காய் | 40 | 20 | 50 | 40 | 30–40 | 40 | 15–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 80 | 90 | 100–120 | 100 | 75 | 120 |
| தேசிக்காய் | 500 | 350 | 600 | 350 | 300–400 | 250 | 350 | 350 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 15 | 15–20 | 20 | 10 | 12 |
| கறிமிளகாய் | 140 | – | 200 | 140 | 150–160 | 160 | – | 150 |
| இராசவள்ளி | 150 | 140 | 180 | 150 | 160–180 | – | 110 | 120 |
| முருங்கைக்காய் | 150 | 120 | 150 | 150 | 120–180 | 240 | 150 | 150 |



## மசால் வடை

**தேவையான பொருள்கள்**

கடலைப் பருப்பு - 1 கப்
பச்சை மிளகாய் - 2
பெரிய வெங்காயம் - 2
பூண்டு - 10 பல்லு
இஞ்சி ஒரு சிறிய துண்டு
உப்பு - தேவையான அளவு
கறிவேப்பிலை - சிறிது
எண்ணெய்
- பொரிக்க தேவையான அளவு

**செய்யும் முறை**

- கடலைப் பருப்பை அரை மணி நேரம் தண்ணீரில் ஊறப் போடவும்.
- பிறகு எடுத்து உரலிலோ அல்லது மிக்சியிலோ போட்டு அரைக்கவும்.
- அரைக்கும் போது பூண்டு மற்றும் தேவையான அளவு உப்புச் சேர்த்து தண்ணீர் அதிகம் ஊற்றாமல் இறுக்கமாக அரைத்துக் கொள்ளவும்.
- வெங்காயம், பச்சைமிளகாய், இஞ்சி, கறிவேப்பிலையை சிறுசாக நறுக்கிக் கொள்ளவும்.
- கடலைப் பருப்புடன் நறுக்கியவற்றை நன்கு பிசைந்து கொள்ளவும்.
- அடுப்பில் சட்டியை வைத்து எண்ணெய் விட்டு கடலைப் பருப்பை சிறு உருண்டைகளாகஎடுத்து வடையாகத் தட்டி எண்ணெயில்போட்டு சிவந்ததும் எடுத்து பயன்படுத்தவும்.

### நாளை

வைகாசி-08
சனிக்கிழமை - 21.05.2016
திதி: பூரணை பி.இ.02.59 வரை
நட்சத்திரம்: விசாகம்
மு.இ.07.32 வரை
ராகுகாலம்: 08.32-10.22 வரை
சுபநேரம்: 02.52-04.22 வரை
பூரணை, வைகாசி விசாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுட்பம்



## கடலுக்குள் வீடு

கடலில் வாழும் வகையான வீடொன்றின் திட்டமொன்றை, இத்தாலியைச் சேர்ந்த கட்டுமான நிறுவனமொன்று வடிவமைத்துள்ளது.

உலகை வலம் வரக் கூடிய இந்த வீடு ஒரு மணி நேரத்துக்கு 6.5 கிலோமீற்றர் தூரம் பயணிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீடுக்குக்குத் தேவையான சக்தியை கிட்டத்தட்ட 40 சதுர மீற்றர் (430 சதுர அடி) சூரியகலம் மூலம் பெற்றுக்கொள்கிறது. இந்தச் சூரிய கலமானது மறைக்கப்படக் கூடியவாறு மேல் கூரையில் பொருத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் புயல்களிலிருந்து அதனை பாதுகாத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அத்துடன் காற்று மற்றும் நீர் விசையாழிகளை பொருத்தி போதுமான அளவு சக்தியைப்பெற்றுக்கொள்ள முடியும் எனவும் இதன் மூலம் முகில் காலங்களில் அதை இயக்கக் கூடியதாகயிருக்கும் எனவும் கூறப்படுகின்றது.

தேவையான குடிதண்ணீரானது சூரிய வலு சுத்திகரிப்பு முறைகள் மூலமும், மழை நீர் சுத்திகரிப்பு தொகுதிகள் மூலமும் பெற்றுக்கொள்ளப்படுகிறது. மரக்கறி உணவுகள் சூழவுள்ள தோட்டத்திலிருந்து பெறப்படுகிறது.

அதன் அடியில் நீருக்குள் அமிழ்ந்த நிலையில் ஒரு ஜன்னல் உள்ளது, அதனூடாக கடலுக்கடியில்செல்லும்உயிரினங்களை அவதானிக்க முடியும் எனவும், தேவையான குளிர்ச்சியை உணரமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் முக்கிய அமைப்பானது திசைகாட்டியுடன் பொருத்தப்பட்டுள்ளது. இது அதனை விரும்பிய திசையில், விரும்பிய கோணத்தில் வைத்திருக்க உதவும் என்றும் இதனை வடிவமைத்துள்ள நிறுவனம் தெரிவித்துள்ளது.



## லெனோவாவின் புதிய கைபேசி

கைபேசித் துறையில் வளர்ந்துவரும் நிறுவனமான லெனோவா நிறுவனம், தனது புதிய அங்கமான வைப் சி எனும், புதிய தொடுதிரைக் கைபேசியை அறிமுகம் செய்யவுள்ளது.

லெனோவா வைப் சி அண்ரொய்ட் 5.1.1 லொலிபாப் இயங்குதளம் மூலம் இயங்குகிறது. 386 பிக்சல் அடர்த்தி மற்றும் 720V1280 பிக்சல்கள் தீர்மானம் கொண்ட 5.0 இன்ச் எச்டி ஐ.பி.எஸ். எல்.சி.டி. திரை கொண்டுள்ளது.

லெனோவா வைப் சி ஒன்று ஜிபி ரெம் உடன் மைக்ரோ எஸ்.டி. அட்டை வழியாக 32 ஜி.பி வரை விரி வாக்கக்கூடிய 8 ஜி.பி உள்ளடங்கிய சேமிப்பு வசதி கொண்டுள்ளது.

எல்இடி ஃபிளாஷ் கொண்ட 5 மெகாபிக்சல் பின்புற கமரா மற்றும் 2 மெகாபிக்சல் முன் எதிர் கொள்ளும் கமராவைக் கொண்டுள்ளது.

# 4டபிள்யு.டி-50எச்.பி ட்ராக்டர்களை சொனாலிகாவுடன் இணைந்து அறிமுகம் செய்த நவலோக ஹோல்டிங்ஸ்

நவலோக ஹோல்டிங்ஸ் குழுமத்தின் அங்கத்துவ நிறுவனமான நவலோக அக்ரி (பிரைவேட்) லிமிட்டெட், விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ரீதியில் மேம்படுத்தப்பட்ட விவசாய தீர்வுகளை வழங்குவதன் மூலம் விவசாயத் துறையின் உற்பத்தித் திறனை மேம்படுத்தக்கூடியதாக இருக்கும் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளது.

மேலும், இந்தியாவின் சொனாலிகா ட்ராக்டர்ஸ் தொழிற்சாலைக்கு அண்மையில் பயணம் செய்திருந்த அங்கீகாரம் பெற்ற விநியோகத்தர்களிடமிருந்து கிடைத்த கருத்துக்களின் பிரகாரம், தொழில்நுட்ப ரீதியில் சிறந்த ட்ராக்டர்களை விற்பனை செய்யத் தீர்மானித்தது.

மேலும், விவசாயிகளுக்கு வெவ்வேறு நிலங்களின் மண் தன்மைகளுக்கு உகந்த வகையிலான ட்ராக்டர் தேவைப்படுகிறது. அத்துடன் அதிகளவு சக்தி வாய்ந்த தீர்வுகள் குறைந்த எடையை கொண்டதாக அமைந்திருப்பது பற்றிக் கவனம் செலுத்துகிறது. குறைந்த விலையில் தரமான தீர்வுகளை எதிர்பார்ப்பவர்களாக அவர்கள் அமைந்துள்ளனர்.

இந்த தேவைகளை நன்குணர்ந்து, நவலோக அக்ரி, 4நிம் திறன் வாய்ந்த 50 குதிரை வலு கொண்ட (hp), ட்ராக்டர் விவசாய சமூகத்தில் புதிய அறிமுகமாக அமைந்துள்ளது.

event புதிய சொனாலிகா 4நிம் ட்ராக்டர் என்பது, அண்மையில் வெல்லவாயவில் நிறைவடைந்த தொழிற்றுறை கண்காட்சி மற்றும் நுகர்வோர் விற்பனை சந்தை 2016 இல் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. நவலோக அக்ரி முகாமைத்துவத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் சொனாலிகா விற்பனை முகாமையாளர் மற்றும் பிராந்திய விற்பனை பிரதிநிதி ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

வெல்லவாய பகுதியில் அமைந்துள்ள நவலோக அக்ரி காட்சியறையில் புதிய சொனாலிகா 4நிம் ட்ராக்டர்களை பார்வையிட முடியும். பொலனறுவை, பரந்தன் மற்றும் வெல்லவாய ஆகிய ஏனைய பகுதிகளில் விரைவில் இந்த ட்ராக்டர்கள் விரைவில் விற்பனைக்காக காட்சிப் படுத்தப்படவுள்ளன. விவசாயிகளின் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில், கந்தளாய், குருநாகல், கலென் பிந்துனுவெள மற்றும் பொலனறுவை ஆகிய பகுதிகளிலும் இந்த ட்ராக்டர் வகை விற்பனை செய்யப்படவுள்ளன.

நவலோக ஹோல்டிங்ஸ் மற்றும் நவலோக அக்ரி ஆகியவற்றின் தலைவர் ஜயந்த தர்மதாச கருத்துத் தெரிவிக்கையில், நவீன சொனாலிகா ரக ட்ராக்டர்களை இலங்கையின் விவசாய சமூகத்துக்கு அறிமுகம் செய்வதையிட்டு



மிகவும் பெருமையடைகிறோம். இந்த முதலாவது 4நிம் 50hp ட்ராக்டர் என்பது வெவ்வேறு விவசாய செயற்பாடுகளுக்கு பயனுள்ளதாக அமைந்துள்ளது. 4நிம் பிரிவில் காணப்படும் மிகச் சிறந்த தெரிவாக இது அமைந்துள்ளது என நாம் நம்புகிறோம் – என்றார்.

சொனாலிகா ட்ராக்டர்கள் நிர்மாணத்துறையைச் சேர்ந்த நிறுவனங்களுக்கும் சிறந்தன. இந்த செயற்பாடுகளுக்கான ட்ராக்டர்கள் உயர்ந்த குதிரை வலுக்களான 76, 90 மற்றும் 120 போன்றவற்றை கொண்டுள்ளன. 50 குதிரை வலுவைக் கொண்ட 4நிம் ட்ராக்டர் உயர் எரிபொருள் சிக்கனத்தை வழங்கக் கூடியது, பராமரித்தல் இலகுவானது, நவலோகநிறுவனத்தின்மூன்று ஊழியர் சேவைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. (து)

## வணிகம்

# MSc கற்கைகளுக்கு மாணவர்களைச் சேர்க்கும் SLIIT

MSc கற்கைகளுக்கு மாணவர்களைச் சேர்க்கும் நடவடிக்கைகளை இலங்கை தகவல் தொழில்நுட்ப கல்வியகம் ஆரம்பித்துள்ளது.

இலங்கையின் முதல் தர பட்டப்படிப்புகளை வழங்கும் கல்வியகம் எனும் வகையில், இலங்கை தகவல் தொழில்நுட்ப கல்வியகம், மக்கள், கலாசாரம் மற்றும் நற்பெயர் ஆகியவற்றை பேணும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுத்த வண்ணமுள்ளது. 7000க்கும் அதிகமான மாணவர்கள் இலங்கை தகவல் தொழில்நுட்ப கல்வியகத்தில் இதுவரையில் கல்வி பயின்று வருவதுடன், பட்டப்பின்படிப்பு, பட்டக்கீழ் படிப்பு தொடர்பான பல கற்கைகளை கல்வியகம் வழங்கி வருகிறது.

மாணவர்களுக்கு வாய்ப்புகளை வழங்கும் வகையில், அறிவு அடிப்படையிலான கற்கைகளான MSc in Information Technology, MSc in Information Management, MSc in Information Systems, MSc in IT (Specializing in Cyber Security) kw;Wk; MSc in Enterprise Applications Development (Sheffield Hallam University, UK) ஆகியவற்றை பின்பற்றுவதற்கு வாய்ப்புகளை வழங்க இலங்கை தகவல் தொழில்நுட்பக் கல்வியகம் முன்வந்துள்ளது.



தனது MSc கற்கைநெறி ஊடாக தகவல் தொழில்நுட்பத்துறையில் பட்டதாரிகளை உருவாக்குவதற்கு திட்ட மிட்டுள்ளதுடன், தமது நிபுணத்துவத்தை தொழிற்துறை மற்றும் வணிக் சூழலில் உள்வாங்க திட்ட மிட்டுள்ளது. இந்த கற்கைகளின் மூலமாக மாணவர்களின் இயலுமைகளை மேம்படுத்தி மதிப்பிட்டு வெவ்வேறு துறைகளில் அவர்களுக்கு கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான வசதிகளை கல்வியகம் வழங்குகிறது. 1ஆம் வருட M.Sc கற்கையை மாணவர்கள் பூர்த்தி செய்த பின்னர், அவர்களுக்கு [illegible] வழங்கப்படுகிறது.

ஆர்வமுள்ள மாணவர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை 2016 மே மாதம் 12 ஆம் திகதி முன்னெடுக்க திட்டமிட்டுள்ளது. இந்த கற்கைகளுக்கான தெரிவு என்பது தகுதிகாண் பரீட்சை மற்றும் மே மாதம் 27 ஆம் திகதி நேர்முகத் தேர்வு ஆகியவற்றின் ஊடாக மேற்கொள்ளப்படும். இந்த கற்கை நெறி ஜூலை 2ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது.

இலங்கை தகவல் தொழில்நுட்ப கல்வியகத்தில் பெற்றுக் கொண்ட அனுபவம் தொடர்பில் பழைய மாணவரான துமின் சஹிஹெட் கருத்துத் தெரிவிக்கையில்; இலங்கை தகவல் தொழில்நுட்ப கல்வியகத்தில் எனக்கு கற்கையை பூர்த்தி செய்ய வாய்ப்புக் கிடைத்தமை என்பது உண்மையில் பெரும் மகிழச்சியூட்டும் விடயமாக அமைந்துள்ளது. குறிப்பாக திறமை மற்றும் அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களிடமிருந்து பல புதிய விடயங்களை பயின்று கொள்ளக்கூடியதாக இருந்தது. இலங்கை தகவல் தொழில்நுட்ப கல்வியகத்தில் தொடர்ந்திருந்த ஆய்வு அடிப்படையில் அமைந்த M.Sc கற்கை மூலமாக பாடங்கள் தொடர்பில் ஆழமான அறிவை பெற முடிந்ததுடன், எனது வெளிப்படுத்தல் ஆளுமைகளை மேம்படுத்திக் கொள்ளவும், உதவியாக அமைந்திருந்தது. தகவல் தொழில்நுட்பத்தில் MSc கற்கையை பூர்த்தி செய்ததன் மூலமாக எனது தொழில் வாழ்வில் உயர்ந்த நிலைகளுக்கு செல்ல பெரிதும் உதவியாக இருந்தது – என்றார். (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவை

தாழ்வு மையம், சூறாவளியாக மாற்ற மடைந்திருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.
இந்த சூறாவளிக்கு 'ரோனு' எனப் பெயரிடப்பட்டுள்ளது.
எனினும் குறித்த சூறாவளி நேற்றிரவு இலங்கையிலிருந்து 700 கிலோமீற்றர் தூரத்தில் இந்தியாவை அண்மித்துள்ளதனால், அந்தச் சூறாவளி மையத்தால் இலங்கைக்கு எந்தவித பாதிப்புக்களும் ஏற்படாது என்று வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றிரவு விடுத்த அறிவித்தலில் தெரிவித்துள்ளது.
இதேவேளை,கடலில் பிரயாணம் செய்வோர், மீன்பிடிக்காகக் கடலுக்குச் செல்வோர் மற்றும் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (த-வ-5)

## திருமண வீட்டில்

நிறையுடைய நகைகளை அபகரித்துச் சென்றுள்ள னர் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பில் இரவுவேளை குறித்த திருடர்கள் பயணித்ததாகக் கூறப்படும் சொகுசுக் கார் குறித்த சி.சி.ரி.வி காணொலியை வைத்து விசாரணை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தத் திருட்டு நல்லூர், நாயன்மார்கட்டு வீதியில் நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.
இது குறித்து மேலும் தெரியவருவதாவது:- குறித்த வீட்டில் திருமணச் சடங்கு முடிந்து, நேற்றுமுன்தினம் நான்காம் நாள் கொண்டாட்டம் இடம்பெற்றுள்ளது. அன்றிரவு அங்கு இருந்தவர்கள் சுமார் 12 மணியளவில் படுக்கைக்குச் சென்றுள்ளனர். நேற்றுக் காலை அவர்கள் விழித்தபோதே நகைகள் காணாமற்போனமை தெரியவந்தது.
நேற்றுமுன்தினம் படுக்கைக்குச் செல்லும்போது, அவர்களது வீட்டுக்கதவுத் திறப்பு காணாமற்போயிருந்தது. அதனை அவர்கள் பொருட்படுத்தியிருக்கவில்லை. கதவை உள்புறமாக தாழப்பாள் போட்டுவிட்டு நித்திரையாகியுள்ளனர்.
இந்த நிலையில், இரவு கார் ஒன்று அவர்களது வீட்டை அண்மித்து நின்றுள்ளதையும், அதிலிருந்து 4 பேர் இறங்கி நடந்து சென்றமையையும் ஒருவர் நள்ளிரவில் கண்டுள்ளார்.
இந்த நிலையில், மதில் பாய்ந்து உள்ளே சென்ற திருடர், வீட்டின் கதவு, தாழ்ப்பாள் போடப்பட்டிருந்தமையால், அங்கிருந்த 2 தும்புத்தடிகளை எடுத்து ஒன்றாகக் கட்டி அதன் மூலமாக கதவின் தாழ்ப்பாளைத் தட்டிக் கதவைத் திறந்து உள்ளே சென்றுள்ளனர்.
உள்ளே 2 பெண்கள் தமது தாலிக்கொடிகளைக் கழற்றி தலையணைக்குக் கீழ் வைத்துவிட்டு நித்திரையாகியுள்ளனர். அந்தத் தாலிக் கொடிகள் உள்ளிட்ட வேறு நகைகளும் திருடப்பட்டுள்ளன.
பின்னர் புதுமணத் தம்பதியர் இருந்த அறையின் கதவு பூட்டப்பட்டிருந்ததால் அறையின் வெளி ஜன்னலை நுணுக்கமாகத் திறந்து மணமகனுக்கு அருகில் இருந்த சங்கிலி திருடப்பட்டுள்ளது.
இவ்வாறு சுமார் 28 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளதாகக் குறித்த வீட்டின் உரிமையாளரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெறும்போது, தமக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை என்பதால் திருடர் மயக்க மருந்து விசிறிவிட்டு அங்கு திருடியிருக்கலாம் என்று வீட்டுக்காரர்கள் சந்தேகிக்கின்றனர்.
திருடர்கள் சென்றதாகக் கூறப்படும் கார் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோது, அந்தப் பகுதியில் உள்ள கட்டடம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராவில் பதிவான காட்சிகளை வைத்து, கார் குறித்து விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன்,தடயவியல் நிபுணர்களும் அங்கு விசாரணை மேற்கொண்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த-வ-4)

**சேவைநலன் பாராட்டு**

திருமதி **ஜெயலக்ஸ்மி கணேசமூர்த்தி**



யாழ் போதனா வைத்தியசாலையில் **தாதிய உத்தியோகஸ்தராகவும், தாதிய சகோதரியாகவும்** கடந்த 36 வருடங்களாகச் சேவையாற்றி இன்று (20.05.2016) ஓய்வில் செல்லும் எமது சங்க அங்கத்தவர் **திருமதி ஜெயலக்ஸ்மி கணேசமூர்த்தி** அவர்களைச் சீரும் சிறப்புடனும் குடும்பத்தினருடன் பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல இறைவனைவேண்டி வாழ்த்துகின்றோம்

**தாதிய உத்தியோகஸ்தர்
நலன்புரி கூட்டுறவுச் சங்கம்.**

**வேலைவாய்ப்பு**

இலங்கையில் பிரசித்திபெற்ற பிரபலமான நிட்டம்பு, பஸ்யால, தெமட்டகொட, வத்தளை, பாணந்துறை, சீதுவை போன்ற தொழிற்சாலைகளுக்கு உடனடியாக வேலையாள்கள் தேவை. உணவு, தங்குமிட வசதிகள் இலவசம். நாள் சம்பளம், கிழமை சம்பளம், மாத சம்பளமாக ரூபா 38,000 வரை பெற்றுக் கொள்ளமுடியும்.வந்தவுடனேயே வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர். கீழ்காணும் இலக்கத்துக்குத் தொடர்பு கொள்ளவும்.

**072 389 6106, 077 636 3156**

**பெயர்மாற்றம்**

இல 194, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சியைச் சேர்ந்த **சந்திரன் சின்னராணி** ஆகிய நான் எனது பெயரை இன்று முதல் **சந்திரன் துளசிகா** என பெயர்மாற்றம் செய்வதோடு இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

**துளசிகா**

**Majestic** Cineplex Jaffna
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்
CEYLON THEATRES




விசாரணை ☎ 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk

# பனை அபிவிருத்திச் சபை

## PALMYRAH DEVELOPMENT BOARD

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள் குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு

Ministry of Prison Reforms, Rehabilitation, Resettlement and Hindu Religious Affairs

### Invitation for Bids (IFB)

***'rocurement Number - PDB/LP/PR/02/2016***

. The Chairman Department Procurement Committee on behalf of the Palmyrah Development Board now invites sealed bids from eligible and qualified bidders for Palmyrah production machineries ,tools and equipments listed in the table below.

. Bidding will be conducted through *National Competitive Procedures*

. Interested eligible bidders may obtain further information from and inspect the Bidding Documents at the address given below.

. Pre bid meeting will be held at Head office, Palmyrah Development Board, Jaffna on 27th of May 2016 at 10.00 AM.

. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the below mentioned address from 20th May 2016 until 13th June 2016 upon payment of a non refundable fees of Rs.1000 (One Thousand Rupees) Method of payment should be by cash.

. Bids must be delivered or sent by registered post to the address below on or before *13th June 2016 at 2.00 PM.* late bids will be rejected. Bids will be opened in the presence of the bidders' representatives who choose to attend in person at the address below Soon after the closing.

Bicycles, Tools and Equipments

| Line Item No. | Description of Goods or related services | Qty and unit | Line Item No. | Description of Goods or related services | Qty and unit |
|---|---|---|---|---|---|
| 1 | Bicycle for men | 200 Nos | 13 | Plastic Can 25 Litters | 400 Nos |
| 2 | Chest Cover | 400 Nos | 14 | Plastic Can 10 Litters | 800 Nos |
| 3 | Foot Cover | 400 pairs | 15 | Plastic Can 05 Litters | 1200 Nos |
| 4 | Leather Belt (One Set) | 400 Nos | 16 | Alluminium Pan with Lid | 500 Nos |
| 5 | Tapping tools keeping box | 400 Nos | 17 | Padangu (Poly crome) | 500 Pcs |
| 6 | Sand pots | 4000 Nos | 18 | Mamooty | 500 Nos |
| 7 | Tapping Knife | 400 Nos | 19 | Continious Band sealer | 5 Nos |
| 8 | Supporting Knife | 400 Nos | 20 | Grinding mill | 05 Nos |
| 9 | Boiling Pan with lid | 16 Nos | 21 | Gas cylinder with Gas | 08 Nos |
| 10 | Industrial gas burner | 8 Nos | 22 | Settling tank | 02 Nos |
| 11 | Pulp Drier | 12 Nos | 23 | Stainless steel vessel | 08 Nos |
| 12 | Jaggery boiling pan | 10 Nos | 24 | Jaggery mould | 100 Nos |

Palmyrah Production Mechineres

| Line Item No. | Description of Goods or related services | Qty and unit | Line Item No. | Description of Goods or related services | Qty and unit |
|---|---|---|---|---|---|
| 1 | Palmyrah Fiber crushing machine | 02 Nos | 4 | Industrial Autoclave | 02 Nos |
| 2 | Fiber Extraction Machine | 04 Nos | 5 | Pulp extractor | 06 Nos |

The Chairman
Palmyrah Development Board.
Head Office, Kandy Road,
Jaffna.
TP No :- 021-2222034
E-mail :- slpdbho@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்த் திருவிழா இன்று

கொழும்புத்துறை வதிரிபீட விநாயகர் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். (து)

## அறுபதாவது பிறந்தநாள் வாழ்த்து



**திரு. கனகசிங்கம் பாக்கியசிங்கம்**

(முகாமைத்துவ உதவியாளர் பிரதேச சபை உப அலுவலகம் உடுப்பிட்டி)

Happy Birthday

அகவை அறுபதில் காலடி வைக்கும் திரு.கனகசிங்கம் பாக்கியசிங்கம் அவர்களை சகல சௌபாக்கியங்களைப் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

"திருஇரத்தினவாசம்"
அல்வாய்.

Best Wishes

வாழ்த்துவோர்:
திருநாவுக்கரசு செல்வநாதன்
செல்வநாதன் யோகமாலா
செல்வநாதன் லக்ஷிகா
செல்வநாதன் சுதர்ஸ்மன்

## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்

பிரசாத் வீதி, நவாலி கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

**சிற்றம்பலம் குலமணி**



கடந்த 21.04.2016 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னாரது மரணச் செய்தி கேட்டு எமது துன்பத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 20.05.2016 வெள்ளிக் கிழமை காலை 7.30 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு 21.05.2016 சனிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் "எமது இல்லத்தில்" நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு : தனிப்பட்ட அழைப்பு கிடைக்கப் பெறாதவர்கள் இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரசாத் வீதி,
நவாலி கிழக்கு
மானிப்பாய்.
தொ.இல : 0776099866

இங்ஙனம்
குடும்பத்தினர்.

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை
### மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை
### ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்

வட்டாரம்: 15
ஆதன இலக்கம் : 83 (புதிய இலக்கம்)
யாழ். காரைநகர் வீதி.
கிராமசேவையாளர் பிரிவு : J/143

வட்டாரம் 15, யாழ். காரைநகர் வீதி, ஆதனஇலக்கம் 83 (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சண்டிலிப்பாய் இறை "சிந்தானையும் செம்பகவளவும்" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 04 (2 ஆம், 3ஆம் துண்டுகளாக கொண்ட) இவ்வாதனமானது சண்டிலிப்பாய் மேற்கு தற்காலம் டென்மார்க், தம்பையா சிவசுதனும் பெண் தர்மானந்தசிவம் ஆகிய (அற்றோனித்தத்துவக்காரி சோத்துப்பிடிச்சி சிவகுமார் விஜயசெல்வி) இவர்களால் சண்டிலிப்பாய் மேற்கு மார்க்கண்டு குணபாலகிருஷ்ணர் கைம்பெண் நாகேஸ்வரி என்பவருக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு.பொ.சுந்தரலிங்கம் அவர்கள் முகதாவில் 2827 ஆம் இலக்க 2010.06.16 ஆம் திகதிய உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு.K. கனகசபை அவர்களால் வரையப்பட்ட 3862 B/10 இலக்க 2010.05.25 ஆம் திகதிய நிலஅளவைப் படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது "சிந்தானையும் செம்பகவளவும்" நிலப்பரப்பு 04 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது மார்க்கண்டு குணபாலகிஷ்ணர் [illegible]ம்பெண் நாகேஸ்வரி என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய [illegible]வடிக்கை எடுக்[illegible] [illegible]டும் என்பதனை அறியத்தருகின்றேன்.

[illegible]ளர்,
[illegible]ற்கு பிரதேசபை.

## மீண்டும்

நடைபெற்ற தேர்தல், பெரும் எதிர்பார்பை ஏற்படுத்தியிருந்தது. எந்தக் கட்சி ஆட்சி அமைக்கும் என்பதைத் தெளிவாகக் கூற முடியாத நிலை காணப்பட்டது. அத்துடன் அ.தி.மு.க அரசுக்கு எதிரான மனநிலையும் தமிழகத்தில் நிலவியது. சென்னை வெள்ளம் மற்றும் மதுபானச் சாலைகள் என்பவற்றால் ஆளும் அ.தி.மு.க கட்சி மீது எதிர் மனநிலை உருவாகியிருந்தது.

இவ்வாறானதொரு நிலையிலேயே தேர்தல் இடம்பெற்றது. 234 தொகுதிகளில் 232 தொகுதிகளில் மாத்திரம் கடந்த 16 ஆம் திகதி தேர்தல் இடம்பெற்றது. எஞ்சிய இரு தொகுதிகளான தஞ்சாவூர், அரவக்குறிச்சியில் வாக்காளர்களுக்குப் பண விநியோகம் இடம்பெற்றமையினால், அந்தத் தொகுதிகளுக்கான வாக்குப் பதிவு இடம்பெற வில்லை.

நடைபெற்று முடிந்த 232 தொகுதிகளுக்குமான வாக்கு எண்ணிக்கை நேற்றுக் காலை ஆரம்பமானது. முதலில் தபால் மூல வாக்குகள் எண்ணப்பட்டன. பின்னர் மின்னணு இயந்திரத்தின் ஊடாகப் பதிவு செய்யப்பட்ட வாக்குகள் எண்ணப்படத் தொடங்கியது.

2011 ஆம் ஆண்டு தேர்தலின்போது, அ.தி.மு.க அறுதித் தனிப் பெரும்பான்மையுடன் அமோக வெற்றி பெற்றிருந்தது. தி.மு.க படுதோல்வியைச் சந்தித்திருந்தது. ஆனால் இந்தத் தேர்தலில் அ.தி.மு.க அமோக வெற்றியைப் பதிவு செய்யவில்லை. அத்துடன் தி.மு.க கடந்த தேர்தலுடன் ஒப்பிடுகையில் பெரும் எழுச்சியைப் பெற்றுள்ளது. 2011 ஆம் ஆண்டு தேர்தலில் அ.தி.மு.க 147 ஆசனங்களையும், தி.மு.க. 23ஆசனங்களையும், தே.மு.தி.க 29 ஆசனங்களையும், காங்கிரஸ் 5 ஆசனங்களையும், பா.ம.க 3 ஆசனங்களையும் பெற்றிருந்தன.

ஆனால் இந்தத் தேர்தலில், அ.தி.மு.க 134 ஆசனங்களையும், தி.மு.க. 89 ஆசனங்களையும், தி.மு.க. கூட்டணிக் கட்சிகளான காங்கிரஸ் 8 ஆசனங்களையும், முஸ்லிம் லீக் ஓர் ஆசனத்தையுமே பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது. விஜயகாந்த் தலைமையிலான தே.மு.தி.க எந்தவொரு ஆசனத்தையும் வெற்றி கொள்ளவில்லை.

**'ஜெ' சாதனை**

1984 ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் எம்.ஜி.ஆர் அமோக வெற்றி பெற்று தொடர்ச்சியாக இரண்டாவது முறை முதல்வரானார். அதன் பின்னர், தமிழகத்தில் அ.தி.மு.க ஆட்சி, தி.மு.க ஆட்சி என்று மாறி மாறி இரண்டு கட்சிகளும் ஆட்சி பீடத்தில் இருந்து வந்தன.

இந்த நிலையில் 2016 சட்டமன்றத் தேர்தல் முடிவு, வரலாற்றை மீள் பதிவு செய்திருக்கிறது. இரண்டாவது முறையாக ஜெயலலிதா ஆட்சியை தக்க வைத்துள்ளார்.

**வலுவான எதிர்க்கட்சி**

தமிழக சட்ட மன்றத் தேர்தலில் வலுவான எதிர்க்கட்சியாக தி.மு.க இடம்பிடித்துள்ளது. தமிழக சட்ட மன்றத்தில் கடந்த காலங்களில் எதிர்க் கட்சியாக இருந்த கட்சிகள் சொற்ப அளவிலான தொகுதிகளை மட்டுமே தம் வசம் வைத்திருந்த நிலையில், ஒரு வரலாற்றுச் சாதனை என்று சொல்லும் அளவுக்கு தி.மு.க கூட்டணி இந்தத் தேர்தலில் 98 தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்கின்றது.

**தவிடுபொடியான கருத்துக் கணிப்புகள்:**

தேர்தல் கருத்துக் கணிப்புகளுக்கான எதிர்பார்ப்பு அரசியல் கட்சிகளிடையேயும், பொதுமக்களிடையேயும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. மே 16 ஆம் திகதி தமிழகத் தேர்தல் தினத்தன்று மாலை வட இந்திய ஊடகங்கள் தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகளை வெளியிட்டன. அவற்றில் 4 கணிப்புக்கள் தி.மு.க.வுக்கு சாதகமாக இருந்தன. ஒன்று மட்டுமே அ.தி.மு.க வெற்றி பெறும் எனக் கணித்திருந்தது. தேர்தலுக்கு முன்னர் பத்திரிகைகளும், காட்சி ஊடகங்களும் நடத்திய கருத்துக் கணிப்புகளும் பெரும்பாலானவை தி.மு.க.வுக்கு ஆதரவாகவே இருந்தன. சில இழுபறி நிலை, தொங்கு சட்டசபை என்றெல்லாம் கூட கணித்திருந்தன. ஆனால், கணிப்புகளை தவிடுபொடியாக்கி அ.தி.மு.க தனிப் பெருங்கட்சியாக ஆட்சி அமைக்கிறது.

(து-வ-5)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, விவசாய பீட . பீடாதிபதி அலுவலகத் தில் தொழிலாளியாகக் கடைமையாற்றும் **திரு.ம. ராஜ்குமார்** அவர்களின் அன்புத் தந்தை

**கதிரிப்பிள்ளை மகேந்திரன்**

அவர்கள் 18.05.2016 அன்று அமரத்துவம் அடைந்தமையிட்டு அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**விவசாயபீட நலன்புரி சங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.**

## கண்ணீர் அஞ்சலி



செயலாளராக கடமையாற்றிய **இ. பகீரதன்** அவர்களின் அன்பு மாமி

***திருமதி பரமேஸ்வரி அமரேசன்*** அவர்கள்

இறைபதமடைந்தமையயிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைச் செலுத்துவதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்
காரைநகர் பிரதேச சபை, காரைநகர்.**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## ஏழாம் ஆண்டு நினைவலைகள்

**அமரர்
சின்னத்துரை
சதாசிவம்**



மண்ணில்
07.05.1951

விண்ணில்
23.05.2009

திதி: அபரபக்க சதுர்த்தசி

ஆண்டுகள் ஏழு ஓடிப்போனாலும்
ஆறாது துயர் மட்டும் இன்னும் ஓய்ந்ததில்லை
மாறாத பந்தமும் நீங்காத நினைவுகளும்
அலை கொண்டு போனாலும்
அப்பா எங்களோடு தான் வாழ்ந்திடுவீர்கள்
வருடங்கள் பல ஆனாலும்

519, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## வெசாக் தின அழைப்பு

பாதுகாப்புப்படை யாழ்ப்பாணம் ஏற்பட்டில் இம்முறை வெசாக் தின நிகழ்வுகள் எதிர்வரும் மே மாதம் 21 ஆம் திகதி முதல் தொடர்ந்து ஏழு நாள்கள் வேம்படி வீதி மற்றும் யாழ் பொதுநூலகத்தின் அருகிலுள்ள மைதானத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வெசாக் தின அலங்காரங்கள், பக்திப் பாடல்களும், வெசாக் தோரணங்களும் அமைக்கப்படவுள்ளதுடன்

**மிகப் பெரிய அன்னதான நிகழ்வுகள் 21 ஆம், 22ஆம் திகதிகளில் (இருநாள்கள்) மாலை முதல் ஆரம்பமாகவுள்ளன.**

**எனவே இந்நிகழ்வுக்கு அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு இலங்கை இராணுவத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைகளுக்கு

நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
நாட்டில் ஏற்பட்டுள்ள மழை, வெள்ளம், மண்சரிவு ஆகிய இயற்கை இடர்களினாலேயே பாதுகாப்புக் கருதி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டார்.
எனினும் வடக்கு மாகாணத்தில் சாதாரண காலநிலை காணப்படுவதனால், அனைத்துப் பாடசாலைகளும் இன்று இயங்கும் என நேற்றுப் பிற்பகல் அறிவித்த வடக்குக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், அதனை நேற்று மாலையே மீளப் பெற்றுள்ளார்.
இந்த நிலையில் வடக்கு மாகாணத்தின் சகல பாடசாலைகளுக்கும் இன்று விடுமுறை வழங்கப்படுவதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சும் அறிவித்துள்ளது. (த-வ-4)

## வடக்கு

அமைப்புக்களின் பிரதிநிதிகள், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடல் யாழ்.பொது நூலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.
இதன்போதே இவ்வாறான முடிவு எட்டப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் குறிப்பிட்டார்.
வடக்கு மாகாண மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.
வடக்கு மாகாண சபைக்கு இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய முழுமையான அதிகாரங்கள் இல்லை. எனவே அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன், அதிகார சபையை உரு வாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டெனீஸ்வரன்,
அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் மாகாண அரசுகளிடம், கடற்கரையிலிருந்து சுமார் 6 கிலோ மீற்றர் வரையிலான கடற் பிரதேசம், அந்த மாகாண அரசுகளின் நிர்வாகத்திலேயே உள்ளது. அதனடிப்படையிலேயே எமது மாகாணத்துக்கும் மீன்பிடி அதிகார சபையை உருவாக்குவதற்கான நியதிச் சட்டத்தைத் தயாரிக்கவுள்ளோம்.
இதற்கு மீனவர் அமைப்புக்கள் தமது ஆலோசனைகளை வழங்குவதற்கு 10 நாள்கள் கால அவகாசம் வழங்கியுள்ளோம். மீனவர் அமைப்புக்கள் தங்களது பிரச்சினைகள் மற்றும் நியதிச் சட்டம் எவ்வாறு அமையவேண்டும் என்பது தொடர்பிலான ஆலோசனைகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.
இவ்வாறு கிடைக்கப்பெறும் ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்டு அறிக்கை தயாரிப்பதற்குக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் அமைச்சின் செயலாளர், மீன்பிடி அமைச்சின் செயலாளர், விவசாய அமைச்சின் செயலாளர் மற்றும் யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் சூசைஆனந்தன் ஆகியோரை உள்ளடக்கிய இந்தக் குழு அறிக்கையைத் தயாரிக்கும்.
இதனை அடிப்படையாக வைத்து, நியதிச் சட்டம் உருவாக்கப்படும். இதனூடாக வடபகுதி மீனவர்களின் பெரும்பான்மையான பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் - என்றார். (த-வ-5-10)



## மரண அறிவித்தல்

பிறக்க ஒரு காலமுண்டு- இறக்க ஒரு காலமுண்டு -பிரசங்கி (3:2)

### திருமதி வெள்ளைச்சி கோகிலான்

தோற்றம் 17 . 06 . 1933



மறைவு 19 . 05 . 2016

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், 37/27, புங்கன் குளம் வீதி, ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வெள்ளைச்சி கோகிலான் நேற்று (19.05.2016) வியாழக் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.
அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (21.05.2016) சனிக்கிழமை பி.ப. 2.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37/27, புங்கன்குளம் வீதி,
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.
021 205 1041

தகவல்:
குடும்பத்தினர்.
போதகர் ஆபேல் (பிரான்ஸ்)

## மரண அறிவித்தல்கள்



### கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை

(கண்டி பிரபல புகையிலை வியாபாரி)

தாமோதர வித்தியாசாலையடி கரணவாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் தேன்புளியடி கரணவாய், கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை நேற்று (19.05.2016) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியின் புதல்வரும், காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், கிருஷ்ணலீலாவதி, பத்மாவதி ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராசதாசன், கிருஷ்ணமூர்த்தி (ஓய்வுபெற்ற நீர்வழங்கல்சபை ஊழியர்) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான தஞ்சம்மா, பொன்னம்மா மற்றும் மகேஸ்வரி, சீனிவாசகம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வெல்லன்கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேன்புளியடி,
கரணவாய், கரவெட்டி. (C) (10.17)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி A. பிரான்சிஸ்கா பூமணி (பூமணி ரீச்சர்)

(முன்னாள் உப அதிபர், கொக்குவில் நாமகள் வித்தியாலயம், முன்னாள் ஆசிரியர், புனித அந்தோனியார் ஆண்கள் வித்தியாலயம், புனித அன்னம்மாள் மகளிர் வித்தியாலயத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றார்)

தோற்றம் 12.11.1935 மறைவு 18.05.2016



யாழ் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு மாளிகாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி A.பிரான்சிஸ்கா பூமணி அவர்கள் கடந்த (18.05.2016) புதன்கிழமை கொழும் பில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி J.N. பொன்னையா தம்பதிகளின் அன்பு மகளும், ஸ்ரான்லி மோகன் (ARCHITECT NBRO- COLOMBO).சாள்ஸ்பாஸ்கரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், எமில்டா ரஜனி (எமிலி), நிருபா ஆகியோரின் அன்பு மாமியும், திருச்செல்வம், காலஞ்சென்ற குலசிங்கம் மற்றும் தவமணி, செல்வமணி, யோகமணி, பவளமணி, பாக்கியராஜா, காலஞ்சென்ற சோதிமணி மற்றும் ருக்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிரின்ஸ் லக்ஸ்மன், சத்தியஜித், கீர்த்திகன், சரண்ரதன், சாருரூபவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் பொரளை ஜயரட்ண மலர்ச்சாலையில் இன்று (20.05.2016) வெள்ளிக்கிழமையும், நாளை (21.05.2016) சனிக்கிழமையும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு (22.05.2016) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டதன் பின் பொரளை கனத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி: D55/38, NHS FLATS மாளிகா வத்தை,
கொழும்பு - 10. 011 247 8486, 077 654 5191

தகவல்:
குடும்பத்தினர்.

திருமதி
### கணேஸ்வரி நாகரத்தினம்



கிளானை கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் மயிலிட்டி வடக்கை நிரந்தர வதிவிடமாகவும், தொம்மை வீதி, உடுவிலை தற்காலிக வதிவிட மாகவும் கொண்ட திருமதி கணேஸ்வரி (தேவி) நாகரத்தினம் நேற்று (19.05.2016) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு சின்னத்தங்கம் தம்பதி யரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வயிரமுத்து- சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், நாகரத்தினத்தின் (தேசிங்கம்) அன்பு மனைவியும், மேனகா (மீரா), பிரதீபன் (தீபன், ஜேர்மனி), சுபதீபன் (சுபாஸ், ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும், பரரூபசிங்கம் (ரூபன், ஜேர்மனி), துஷிக்கா (ஜேர்மனி), ரதனா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொம்மை வீதி,
உடுவில்.

தகவல்: நாகரத்தினம்
(தேசிங்கம்- கணவர்)
021 224 0560

## மரண அறிவித்தல்

### சுவாமிநாதன் சிவபாதசுந்தரம்



உசன் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிநாதன் சிவபாதசுந்தரம் கடந்த (18.05.2016) புதன் கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா -யாழ் பழித்த மொழி அம்மையார் தம்பதியரின் அன்பு மருமகனும், சுரேந்திரனின் (கனடா) அன்புத் தந்தையும், இராஜேஸ்வரியின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி, இராஜநாதன், புவனேஸ்வரி மற்றும் தங்கராஜா (லண்டன்), மகேஸ்வரன் (கனடா), விமலேஸ்வரி (சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (22.05.2016) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.கேதீஸ்வரன்
(பெறாமகன்)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா கந்தசாமி



அச்சுவேலி தம்பாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா கந்தசாமி நேற்று (19.05.2016) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் கந்தசாமியின் அன்பு மனைவியும் சரஸ்வதி, தங்கராசா, ஜெயகௌரி (ஆசிரியர், தோப்பு அருள் நந்தி வித்தியாசாலை), ஈஸ்வரி (பிரான் ஸ்) ஆகியோரின் அன்புத் தாயு ம், தங்கமணி, பாலசுப்பிரமணியம் காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மற்றும் சிவராசலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், அரிகரன் (பிரான்ஸ்), அமலைதி (பிரான்ஸ்), சுபாசினி (லண்டன்), சுதாகர் (லண்டன்), ரஜீந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், கோப் பாய் பிரதேசசெயலகம்), மதன்ராஜ் (ஆசிரியர் மல்லாவி மத்திய கல்லூரி), சிந்துஜா (கோப்பாய் கல்வியற் கல்லூரி), நிவேதன், பதுஷன், சாகித்தியன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடை பெற்று இன்று (20.05.2016) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்பாலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தம்பாலை,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 226 9816

### திருமதி பத்மாவதி இராசரெத்தினம்

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி பத்மாவதி இராசரெத்தினம் நேற்று (19.05.2016) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான மாசிலாமணி - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்க ளான சின்னையா- விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமக ளும், இராசரெத்தினம் அவர்களின் பாசமிகு துணைவியாரும், சயேசன் (பிரான்ஸ்), கேதீஸ்வரி (ஆசிரியை, புங்குடுதீவு சுப்பிரமணியமகளிர் வித்தியாலயம், புங்குடுதீவு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பானுகலா (பிரான்ஸ்), அன்பரசன் (முகாமைத்துவ உதவியாளர், வலயக்கல்வி அலுவலகம், வேலணை) ஆகியோரின் அன்பு மாமியும், பானுஷன், டினோஷா, கபிஷன், அபிஷன் (பிரான்ஸ்), ஹர்சனா, கம்ஷனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நயினாதீவு - 07.
021 320 1490

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரையிறுதிக்குத் தகுதி பெற்றன பண்டத்தரிப்பு, மெதடிஸ்த பெண்கள் அணிகள்

கரணவாய், மே 20

மாகாண மட்ட பூப்பந்தாட்டத் தொடரில் 19 வயதுப் பெண்கள்பிரிவில், பண்டத்தரிப்புபெண்கள்உயர்தரப்பாடசாலை மற்றும் பருத் தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை என்பன அரையிறுதியாட்டங் களுக்குத் தகுதி பெற்றுள்ளன.

மன்னார் பொது விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற இந்தக் காலிறுதி ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையும், கிளிநொச்சி மகாவித்தியாலயமும் பலப்பரீட்சை நடத்தின. 3 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் முதல் செற்றில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் சார்பாக அனட் றெனோக்கா களமிறங்கினார். அவர் கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவி சுலக் சனாவை 21:5, 21:6 என்ற புள்ளிகளின் அடிப் படையில் தோற்கடித்து முதல் வெற்றியைப் பதிவுசெய்தார். தொடர்ந்து இடம்பெற்ற இரண் டாவது தனிநபர் ஆட்டத்தில் விளையாடிய சியானுகா 21:16, 21:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவியான கோபிகாவைத் தோற்கடிக்க 2:0 என்ற நேர் செற்களில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலை.

தொடர்ந்து இடம்பெற்ற பிறிதொரு காலிறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண் கள் பாடசாலையும் மன்னார் பற்றிமா மகா வித்தியாலயமும் மோதின. முதல் செற்றில் களமிறங்கிய மெதடிஸ்த பெண்கள் கல்லூரி மாணவி சாமினி 21:1, 21:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் பற்றிமாவின் மிதுசாவைத் தோற்கடித்து தனது அணியின் முதல் வெற் றியைப் பதிவுசெய்தார். இரண்டாவது செற்றில், மெதடிஸ்த பெண்கள் கல்லூரி மாணவி பிரசாந்தி 21:4, 21:3 என்ற புள்ளிகளின் அடிப் படையில் சுகன்யாவைத் தோற்கடிக்க முடி வில் 2:0 என்ற நேர்செற்கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது பருத் தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி.

(ம-108)

## தமிழக

இது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ் வரன் தெரிவித்துள்ளதாவது:-

தமிழக முதலமைச்சராக செல்வி ஜெ. ஜெயலலிதா தெரிவானமைக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவர் தொடர்ந்தும் எம்மோடு இணைந்து தமிழ் மக்களுக்குப் பலவிதமான நன்மைகளைச் செய்வார் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

தமிழர் தரப்பினால் மீண்டும் தெரிவாகியுள்ளார். அவர் மீது இருக்கும் செல்வாக்கு மீண்டும் வெளிப்பட்டுள்ளது. அதனால் அவர் இதுவரை காலமும் தமிழ் மக்களுக்குச் செய்தவற்றைத் தொடர்ந்தும் மேற்கொள்ள இறைவன் அருள் கிடைக்க வேண்டும் - என்றார்.

இதேவேளை, கச்சதீவில் புதிய ஆலயம் அமைக்கப்படுவது தொடர்பில் எழுந்துள்ள சர்சை தொடர்பாக, முதலமைச்சரிடம் ஊடகவியலாளர்களினால் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த வடக்கு மாகாண முதலமைச்சர், கச்சதீவில் அமைக்கப்படவுள்ள தேவாலயம் தொடர்பில் நான் கருத்துக் கூற விரும்பவில்லை. தேவாலயம் அமைப்பது தொடர்பில் பல பேச்சுக்கள் எழுந்துள்ளன. இந்த விடயம் தொடர்பில் தமிழ்நாட்டு அரசு ஒரு கருத்தும், புதுடில்லி வேறு கருத்தும் கொண்டுள்ளது. இதனால் நான் கருத்து கூற விரும்பவில்லை. இது பரிசீலிக்க வேண்டிய விடயம் - என்றார். (த-வ-5-101)

## தாண்டவமாடும்

குச் சராசரியாக 50 மீல்லி மீற்றருக்கு அதிகமாக மழை பெய்கின்றது. இதனால் நாட்டின் பல பாகங்களிலும் பெரியளவில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதுடன், மண்சரிவுகளும் ஆங்காங்கே இடம்பெறுகின்றன.

நேற்று மாலை வரை இடம்பெற்றுள்ள பாதிப்புகள் தொடர்பில் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்ட தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

சீரற்ற காலநிலையால், கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 70 ஆயிரத்து 262 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரு இலட்சத்து 65 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

குருநாகல் மாவட்டத்தில் 32 ஆயிரத்து 633 பேர் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை, கேகாலை மாவட்டத்தில் 21 ஆயிரத்து 555 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 9 ஆயிரத்து 361 பேர் இடம் பெயர்ந் துள்ளனர். புத்தளம் மாவட்டத்தில் 25 ஆயிரத்து 84 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 4 ஆயிரத்து 948 பேர் இடம் பெயர்ந்து 46 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் வெள்ளம் மற்றும் மழை காரணதாக 37 ஆயிரத்து 442 பேர்பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் கிளிநொச்சி மாவட்டத்தில் 17 ஆயிரத்து 982 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, இவர்களில் ஆயிரத்து 192 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

கேகாலை மாவட்டத்தின் அரநாயக்க பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற மண்சரிவில் புதையுண்ட நூற்றுக்கு மேற்பட்டோரில் நேற்று மாலை வரை 19 பேரின் சடலங்களே மீட்கப்பட்டுள்ளன எனவும், கேகாலை மாவட்டத்தின் களுப்பான தோட்டத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற மண்சரிவில் புதையுண்ட 16 பேரில் 10 பேரின் சடலங்களே நேற்று மாலை வரை மீட்கப்பட்டுள்ளன எனவும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை மண்சரிவு இடம்பெற்ற பகுதிகளில் காணாமற்போயுள்ளவர்களை உயிருடன் மீட்பதற்கான வாய்ப்புகள் இல்லை என இராணுவம் தெரிவித்துள்ளது. எனினும் இராணுவத்தினர் தொடர்ந்து தேடுதல் பணியை முன்னெடுத்து வருவதாக இராணுவப் பேச்சாளர் ஜயநாத் ஜயவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் இராணுவத் தளபதி சுதாந்த ரனசிங்க தெரிவிக்கையில், அரநாயக்க பிரதேச நிலச்சரிவில் சிக்கி உள்ளோரை உயிருடன் மீட்பதற்கான சாத்தியம் குறைவாகவுள்ளது. மண்சரிவு ஏற்பட்ட போது, காணமற்போன 144 பேரும் இந்த நேரம் இறந்திருக்கலாம் என அஞ்சுகிறேன். இருந்தாலும், எங்களுடைய மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கும். மீட்கப்படும் சடலங்கள் உடனடியாக உரிய குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்படும்.

மேலும், அரநாயக்க பிரதேசத்தில் இதுவரை எந்த உடல்களையும் கண்டெடுக்கவில்லை. புலத்கோபிட்டிய பிரதேசத்தில் மேலும் 5 உடல்களை மீட்டுள்ளன - என்றார்.

இதேவேளை, களனி கங்கையின் நீர் மட்டம் ஒரு அடியேனும் உயர்ந்தால் கொழும்பு மற்றும் அதனை சூழவுள்ள பிரதேசங்களுக்கான நீர் விநியோகம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

வெள்ளத்தால் நாட்டின் கிளைப்பகுதிகளில் இருந்து வழிந்து வரும் நீரினாலேயே களனி கங்கையின் நீர்மட்டம் உயர்வதற்கான சாத்தியக்கூறு இருக்கின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் வானிலை அதிகாரி மொஹமட் சாலிஹீன் தெரிவித்தார்.

மத்திய, சப்ரகமுவ, மேல், வடமேல் மாகாணங்களிலும், காலி, மாத்தறை மாவட்டங்களிலும் இடையிடையே மழை பெய்யும் எனவும், அம்பாந்தோட்டை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் எனவும் அவர் மேலும் கூறினார். (த-வ-4)

## இடர்களில்

வர்த்தகர் கள், கொடை யாளர்கள் மற்றும் தொண்டு நிறுவனங் களை முன்வருமாறு ஜனாதிபதி அவசர அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற் றிரவு ஊடகங்களுக்கு வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எனது அன்புக்குரிய மக் களின் முன்னால் இந்த அறிக் கையினை முன் வைப்பதற்கான காரணம், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் பல பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டிருக்கின்ற துன்பகரமான நிலைமையும், அதையிட்டு அரசு முன் னெடுத்துவரும் நடவடிக்கைகள் பற்றியும் அறியத் தருவதற்காகவே ஆகும்.

சீரற்ற காலநிலை காரணமாக இலங்கையில் பல பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளம், மண்சரிவு மற்றும் ஏனைய இடர்களால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள், காணாமற்போனவர்கள், சொத்துக்களின் இழப்பு பற்றியும் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருக்கும் பாதிக்கப்பட்ட அனைத்துமக்களுக்கும் இந்தச்சந்தர்ப்பத்தில் அரசின் ஆழ்ந்த மனவருத்தத்தை தெரிவித்துக்கொள்கின்றேன்.

அத்தோடு தற்போது ஏற்பட்டுள்ள இந்த நிலைமைகளுக்கு முகம்கொடுக்க நேர்ந்ததில், பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கான நிவாரணப் பணிகளில் ஏற்கனவே கடற்படை, தரைப்படை, வான்படை ஆகிய முப்படைகளும் பொலிஸ் பிரிவும் பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் உள்ளிட்ட அரச உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோர் தமது உயிரை பணயம் வைத்து அர்ப்பணிப்புடன் செயற்படுவதை நான் மிகவும் பாராட்டுகின்றேன்.

இந்த நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் முப்படைகள், பொலிஸ் உள்ளிட்ட அரசின் அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் அரசின் கௌரவமிக்க நன்றியை தெரிவித்துக்கொள்கின் றேன்.

பொதுமக்களின் நன்மதிப்பை பெற்றுக்கொள்ளும் விதத்தில் மிகுந்த அர்ப்பணிப்புடன் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வரும் அரசு இந்த நிலைமைகளை கருத்திற்கொண்டு தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைகளையும்நாளை ஏற்படக்கூடிய நிலைமைகளைப்பற்றியும் எமக்கு கிடைக்கப்பெறும் தகவல்களின் அடிப்படையில் மூன்று வழிகளில் செயற்படுவதற்கு எண்ணியுள்ளோம்.

முதலாவதாக தற்போது ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியான நிலைமைக்கு முகம் கொடுத்துள்ள மக்களுக்காக எம்மால் இயன்ற ஆக உச்சக்கட்ட நிவாரணங்களை பெற்றுக்கொடுத்தல். இரண்டாவதாக இந்த சீரற்ற காலநிலையுடன் மேன்மேலும் மழை அதிகரிக்குமாக இருப்பின், அதற்கு முகங்கொடுக்க தயாராகுதல். மூன்றாவதாக இந்த சீரற்ற காலநிலை அகன்று இயல்பு நிலை ஏற்பட்டதன் பின்பு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள், சுகாதார வசதிகள், அடிப்படை வசதிகள் ஆகியவற்றை பெற்றுக்கொடுப்பதற்கு அரசின் முன்னுரிமையை வழங்கி செயற்படுதல்.

இந்த அனைத்து விடயங்கள் தொடர்பிலும் அரசு மிகுந்த பொறுப்புடன் தமது கடமைகளை புரிந்து வருவதாக கூற வேண்டும். அத்துடன் இந்த இடரினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு உணவு, சுகாதார வசதிகள், தற்காலிக தங்குமிட வசதிகள் ஆகியவற்றை பெற்றுக்கொடுப்பதற்காக அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கினறது. நமது நாட்டின் பொதுமக்கள் வர்த்தகத் துறையின் கொடையாளர்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகிய அனைவரிடமும் மிகுந்த கௌரவத்துடனும் பணிவுடனும் பாதிக்கப்பட்ட மக் களுக்கு உங்களால் வழங்கக்கூடிய அனைத்து உதவிகளையும் வழங்க முன்வருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அரசு என்ற வகையில் இந்தநிலைமைக்கு முகங்கொடுப்பதற்காக எம்மாலான அனைத்து செயற்பாடுகளையும் குறைவின்றி முன்னெடுப்பதற்கு அர்ப் பணிப்புடன் இருக்கின்றோம். ஆயினும் அநேகமாக இவ்வாறான பிரச்சினைகளின்போது எழுகின்ற குற்றச்சாட்டுக்கள், விமர்சனங்கள் ஆகியவற்றை தவிர்த்துக்கொள்வது [illegible]காரியமாகும். இருந்தபோதிலும் [illegible]குற்றச்சாட்டுக்களையும் விமர்சனங்களையும் இயன்றளவு குறைத்துக் கொள்வதற்காக அரசு முழுமையான அர்ப்பணிப்புடன் செயற்படுவதோடு, நான் ஏற்கனவே கூறியதைப்போன்று இந்த நாட்டின் கொடையாளிகளிடமும் பொதுமக்களிடமும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தம்மால் இயன்ற மிக உச்சக்கட்ட உதவிகளை செய்து ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அவ்வாறான நன்கொடைகள், உதவிகள் ஆகியவற்றை பெற்றுக்கொடுக்கும்போது, உரிய செயற்பாட்டின் தேவை இருப்பதால் ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் ஒன்று திரட்டு வதற்காக மாவட்ட செயலகங்களிலும் பிரதேச செயலகங்களிலும் விசேட பிரி வொன்றினை ஸ்தாபித்துள்ளோம். அதன்மூலம் முறையான திட்டங்களை வகுத்து ஊழல்கள், மோசடிகள், முறைகேடுகள் ஏற்படாதவகையில் கிடைக்கின்ற நன்கொடைகளை நேரடியாகவே பொதுமக்களுக்கு பெற்றுக்கொடுக்கும் வேலைத் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளோம்.

அதேபோன்று அவ்வாறான நன்கொடைகளை தத்தமது விருப்பத்திற்கமைய நேரடியாக அந்தந்த பிரதேசங்களில் இருக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க முடியும். அதேபோன்று மாவட்ட செயலகங்களினூடாகவும் அவற்றைப் பெற்றுக்கொடுப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே பொதுமக்களுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்புகள் பற்றியும் அப்பாதிப்புகளுக்கு இதுவரை பரிகாரம் கிடைக்காமல் இருப்பின் அதைப்பற்றியும் ஜனாதிபதி செயலகத்தில் ஸ்தாபித்திருக்கும் விசேட பிரிவின் 1919 தொலைபேசி இலக்கத்தினூடாக எமக்கு அறிவிக்க முடியும். அவ்வாறு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளில் இருந்து குறிப்பிட்ட சில பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய பிரதேச அரசியல்வாதிகளின் செயற்பாடுகளில் குறைகள் காணப்படுவதாக தெரிய வந்துள்ளது.

இந்தக்குற்றச்சாட்டானது அனைவர் மீதும் சுமத்தப்படும் ஒரு குற்றச்சாட்டல்ல, ஏராளமான பிரதேசங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் இந்தப்பணிகளில் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர். ஆயினும் சில பிரதேசங்களின் செயற்பாடுகள் தொடர்பில் இக்குற்றச்சாட்டுக்கள் எழுந்திருக்கின்றன. ஆகையால் மிகுந்த கௌரவத்துடன் அரசியல் கட்சி பேதங்களின்றி அனைவரும் தத்தமது பிரதேசங்களில் அரசியல் தலைமைத்துவத்தை வழங்கி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பணிகளில் அர்ப்பணிப்புடன் தமது பங்களிப்புகளை வழங்குவதற்கு முன்வருமாறு கேட்டுக் கொள்கின்றேன். அத்தோடு ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் அவற்றை எமக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின் றேன்.

நமது நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த இடர் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பணியில் குறிப்பாக வீட்டு வசதி, சுகாதார வசதி மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு உதவுமாறு நாம் எமது நட்பு நாடுகளிடம் கேட்டுக்கொண்டுள்ளோம். அதற்கமைய ஏற்கனவே பல நாடுகள் எமக்கு உதவி வழங்குவதற்கு முன்வந்துள்ளன என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனோகராவுக்கு இலகு வெற்றி கழுகுகள் கழகத்தின் தொடரில்



யாழ்ப்பாணம், மே 20

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் நடப்பு வருடத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மனோகரா அணி வெற்றிபெற்றுள்ளது.

கழுகுகள் வி.கழகமைதானத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மனோகரா அணியை எதிர்த்து புத்தூர் வீனஸ் அணி மோதிக் கொண்டது. கோல்கள் எவையும் பதிவாகாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 35 ஆவது நிமிடத்தில் புத்தூர் வீனஸ் அணியின் லக்சிகன் தனது அணியின் முதல் கோலினைப் பதிவு செய்தார். பழி தீர்க்க வேண்டும் என்ற முனைப்பில் விடாப் போராட்டத்தை முன்னெடுத்த மனோகரா அணி, 43 ஆவது நிமிடத்தில் அனோஜனின் கோலால் பதிலடி கொடுத்தது. 1:1 என்ற கோல் கணக்கில் மாற்றம் ஏதும் இல்லாமல் நகர்ந்து கொண்டிருந்தது ஆட்டம். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்கள் நிறைவடைய இரு நிமிடங்கள் இருந்த வேளையில் மற்றுமொரு கோலைப் பதிவுசெய்து முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது மனோகரா. (ம-23)

# 7 தையல்களுடன் சதம் கோக்லியின் தாண்டவம்

பஞ்சாப்புக்கு எதிரான ஆட்டத்தில் கோக்லி சதம் கடந்தார். கையில் 7 தையல்களுடன் அவர் இந்த சதத்தைப் பெற்றுள்ளமை தற்பொழுது வெளிவந்துள்ளது. நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் தொடர்ந்து சதங்களையும், அரைச்சதங்களையும் விளாசி வருகிறார் கோக்லி. பஞ்சாப்புக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டம் மழை குறுக்கிட்டமையால் 15 பந்துப்பரிமாற்றங்களாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் 211 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்குக் களமிறங்கிய பஞ்சாப் 14 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 120-9 என்றிருந்த பொழுது மழை மீண்டும் குறுக்கிட பெங்களூர் அணிக்கு டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 82 ஓட்டங்களால் வெற்றி வழங்கப்பட்டது. இந்த ஆட்டத்தில் கோக்லி 113 ஓட்டங்களை எடுத்திருந்தார். இதற்கு முன்னர் பெங்களூர் கொல்கத்தாவை எதிர்கொண்டது. இந்த ஆட்டத்தில் பந்தை தடுக்க முற்பட்ட வேளையில் கோக்லியின் கையை பந்து தாக்கி வெடிப்பை ஏற்படுத்தியது. இதனால் அவருக்கு 7 தையல்கள் போடப்பட்டன. தையல்களுடன் நேற்றுமுன்தின ஆட்டத்தில் கலந்துகொண்ட கோக்லி காயத்தையும் பொருட்படுத்தாமல் சதம் விளாசினார். சதம் விளாசிய பிற்பாடு அவர், காயம் ஏற்பட்ட தனது கையை ரசிகர்களை நோக்கி தட்டிக் காட்டினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் இது அவர்து 4ஆவது சதமாகும். (ம)

# விம்பிள்டனை வெல்வதே ரபேல் நடாலின் இலக்காம்



சர்வதேச ரென்னிஸ் தொடரின் ஐந்தாம் நிலை வீரரான ஸ்பெயினின் ரபேல் நடால் நடப்பு வருடத்தின் விம்பிள்டன் தொடரைக் கைப்பற்றுவதே தனது இலக்கு என்று தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஒரு சர்வதேச அந்தஸ்துப் பெற்ற தொடரையேனும் கைப்பற்றாத நடால் இந்த வருடம் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தி வருகிறார். மியாமி ரென்னிஸ் தொடரைக் கைப்பற்றிய பின்பு ரபேல் நடால் போர்முக்குத் திரும்பி விட்டார் என்று பலரும் கருத்துத் தெரிவித்து வருகின்ற நிலையில் நடாலும் சாதகமான ஒரு கருத்தைத் தெரிவித்துள்ளார்.

ரென்னிஸ் தொடர்களிலேயே கௌரவம் மிக்க தொடரான விம்பிள்டன் தொடர்பாக நடால் தெரிவிக்கையில் - இந்த வருடம் எனக்கு சிறப்பாக அமைந்துள்ளது என்பது மறுப்பதற்கில்லை. ஆனால் நான் முழுமையான போர்மில் (திறனில்) உள்ளேன் என்பதையும் ஏற்றுக்கொள்ள மாட்டேன். நான் இன்னும் எனது பழைய நிலைக்குத் திரும்பவில்லை. அதற்கு அதிக காலம் தேவைப்படும் என்றும் கருதவில்லை. விம்பிள்டன் தொடருக்கு முன்னர் (ஆண்டின் மத்திய பகுதியில் நடைபெறும் தொடர்) போர்முக்குத் திரும்ப வேண்டும் என்றும் விம்பிள்டனைக் கைப்பற்ற வேண்டும் என்றும் விரும்புகிறேன் - என்றார். (ம)

# வோஸ்னியாக்கி திடீர் விலகல்



டென்மார்க்கின் நட்சத்திர வீராங்கனையான கரோலின் வோஸ்னியாக்கி காயம் காரணமாக பிரான்ஸ் ரென்னிஸ் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் தரப்படுத்தலில் முதலிடத்திலிருந்த வோஸ்னியாக்கி தொடர்ந்து பின்னடைவைச் சந்தித்து வந்தார். இதனால் இந்த வருடத்திலிருந்து அவர் 30ஆவது இடத்துக்கு பின்னரே தரப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தார். இந்த நிலையில் காலில் ஏற்பட்ட காயம் காரணமாக அடுத்து இடம்பெறவுள்ள பிரான்ஸ் ரென்னிஸ் தொடரிலிருந்தும் அவர் விலகியுள்ளமை தரப்படுத்தலில் அவருக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. (ம)

## இன்றைய மோதல்கள்

**யங்ஹென்றிஸின் தொடர்**

யங்ஹென்றிஸ் வி.கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சென்.ஹென்றிஸ் கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.மேரிஸ் அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் அணியும், இரவு 8.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து மன்னார் அந்தோனியார்புரம் அணியும் மோதவுள்ளன.

**கழுகுகள் வி.கழகத் தொடர்**

நெற் கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து உரும்பிராய் சென்.மைக்கல் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜெகமீட்பர் அணியை எதிர்த்து நக்கீரன் அணி மோதவுள்ளது. (ம-422-23)

## ஐ.பி.எல். கிண்ணம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொல்கத்தாவுக்கு அடி கொடுத்தது குஜராத்

## பிளே ஓவ் வாய்ப்பையும் அதிகப்படுத்தியது

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற கொல்கத்தா–குஜராத் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 6 இலக்குகளால் வெற்றிபெற்றது குஜராத். இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி பிளே ஓவ் சுற்றை கிட்டத்தட்ட உறுதிசெய்யும் என்பதால் இரு அணிகளும் வாழ்வா? சாவா?நிலையிலேயே களமிறங்கின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற குஜராத் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. ஈரப்பதமும், புற்களும் நிறைந்ததாய் ஆடுகளம் காணப்பட்டது. பந்துவீச்சுக்கு உதவக்கூடிய இத்தகைய ஆடுகளத்தில்முதலில்களத்தடுப்பைச் செய்வது என்ற முடிவு சிறந்த முடிவே. கொல்கத்தாவின் ஆரம்ப வீரர்களாக உத்தப்பா மற்றும் கம்பீர். எட்டே ஓட்டங்களுடன் ரண்அவுட் செய்யப்பட்டார் கம்பீர். சிமித்தின் வேகம் நேற்று இலக்குகளை அள்ளியது. பாண்டே, சாவ்லா இருவரையும் அடுத்தடுத்து வெளியேற்றினார். சிறிது நேரம் தாக்குப்பிடித்த உத்தப்பாவும் 25 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சிமித்தால் வெளியேற்றப்பட்டார். 8.2 பந்துப்பரிமாற்றங்களில் (50 பந் துகளில்) 50 ஓட்டங்களைத் தொட்டது கொல்கத்தா. நீண்ட இடைவெளியின் பின்னர் சிக்சர் ஒன்றை விளாசினார் யூசொப்பதான். வேறு சில பவுண்டரிகளும் அவரால் பதிவாகின. அதற்கேற்ப பந்துகளை வீணடித்துக் கொண்டுமிருந்தார். 36 ஓட்டங்களு டன் யூசொப்பதானை வீழ்த்தினார் குல்கர்னி. இதற்காக அவர் 36 பந்துகளை எடுத்துக் கொண்டார். மொத்தத்தில் இவரது இன்னிங்ஸால் கொல்கத்தாவுக்கு பெரிய இலாபம் ஒன்றும் இல்லை. பின்வரிசை வீரர்களாலும் பெரிதான மாற்றங்களை ஏற்படுத்த முடியாது போக, முடிவில் கொல்கத்தா 124–8.

பந்துவீச்சில் குஜராத்தின் சார்பாக சிமித் 4 இலக்குகளையும், பிராவோ, குல்கர்னி, ஜகடி மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய குஜராத்துக்கு ஆரம்பம் படுமோசமாக அமைந்தது. முதல் பந்துப்பரிமாற்றத்தின் முதல் பந்திலேயே ஆட்டமிழந்தார் சிமித். அதிக அழுத்தத்தை வரவிடாது அதே பந்துப்பரிமாற்றத்தில் ரெய்னாவால் ஓர் பவுண்டரியும் மக்கலத்தால் ஓர் சிக்சரும் பதிவாகின. அந்த சிக்சரே மக்கலத்தால் பெறப்பட்ட ஒட்டுமொத்த ஓட்டங்களுமாக அமைந்தது. 12 ஓட்டங்களுடன் மோர்கலின் பந்தில் போல்ட் ஆனார் டினேஸ் கார்திக். தற்பொழுது குஜராத் 38–3. ரெய்னா, பின்ஞ் இருவரும் நிலைத்து நிற்க, கொல்கத்தாவின் வாய்ப்புக்கள் மங்கத் தொடங்கின. அளவுக்கு அதிகமான அகலப்பந்துகளும் வீசப்பட்டு தமது தலையில் தாமே மண்ணைக் கொட்டிக் கொண்டிருந்தனர் கொல்கத்தாவின் பந்துவீச்சாளர்கள். 33 பந்துகளில் ரெய்னாவின் அரைச் சதம் பதிவானது.முடிவில் 39 பந்துகள் மீதமிருக்க கொல்கத்தாவை வென்றது குஜராத். (ம)

போட்டிப்பரீட்சைக்கான கருத்தரங்குகள்
SLEAS (Open)
நான்கு வினாத்தாள்களும் எதிர்பார்க்கை வினாக்கள் கலந்துரையாடப்படும்.
சனி (21/5). ஞாயிறு (22/5) திங்கள் (23/5).
காலை 9.00 - 3.00மணி வரை
June மாதம் நடைபெறவுள்ள
SLAS
SLEAS
பரீட்சைக்கு ஞாயிறு (22/5), திங்கள் (23.05) காலை 9.00 - 4.00 மணிவரை
கணக்காய்வாளர் (Auditor)
பரீட்சைக்கு சனி (21.05) 2.00 -5.00 மணிவரை
June மாதம் தொடக்கம் பிரதி சனி 10.00 - 4.00 மணிவரை நடைபெறும்.
T.P: 0766883394
021 222 3382
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரிவீதி கொமர்ஷல் வங்கியருகில்)

விசேட கருத்தரங்கு
May 29இல் நடைபெறவுள்ள
SLEAS (Open)
விரைவில் நடைபெறவுள்ள
SLAS (Open/Limit)
பிரதி சனி
காலை 9.00 - 4.00
விரிவுரையாளர்
P. உமாசங்கர், P. கமல்தாசன்
போட்டிப்பரீட்சை வகுப்புகள்
❖ சமுர்த்தி உத்தியோகத்தர்
❖ கிராம சேவையாளர்
❖ சட்டக்கல்லூரி அனுமதி
பிரதி சனி 2.00 - 5.00
விசேட இறுதிக்கருத்தரங்கு
SLEAS (Open)
காலம் : 28.05.2016 சனி
8.30 - 12.00
இடம் : Bambalapitiya Government Flats Community Center Hall , Col- 04.
நாவலர்
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்.
T.P: 0774696695

# சானகவின் வேகத்தில் இங்கிலாந்து தடுமாற்றம்

இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தின் நேற்றைய முதல் நாளில், முதலில் துடுப்பெடுத்தாடிவரும் இங்கிலாந்து, நாள் முடிவில் 171–5 என்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. பந்துவீச்சுக்கும் ஒத்துழைக்கக்கூடிய லீட்ஸ் ஆடுகளத்தில் முதலில் களத்தடுப்பு என்பது ஏற்கக்கூடிய முடிவே. இங்கிலாந்தின் ஆரம்ப வீரர்களாக குக் மற்றும் கேல்ஸ். டெஸ்ட்டில் 10ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்டி, குறைந்த வயதில் குறித்த பெறுபேற்றை எட்டிய சச்சினின் சாதனையைத் தகர்க்க குக்குக்கு இன்னும் 36 ஓட்டங்களே தேவைப்பட்டன. ஆனால் அனுமதிக்கவில்லை அறிமுக வீரரான சானக. ஒரு முனையில் கேல்ஸ் நிலைத்து நின்றாலும் மறுமுனையில் ஹொம்டன், ரூட் இருவரும் ஒரே பந்துப்பரிமாற்றத்தில் சானகவிடம் வீழ்ந்தனர். பிரசாத்தின் இடத்தில் அவருக்குப் பதிலாக களமிறங்கியமைக்கு சானக சிறப்பாகவே செயற்பட்டார். வின்ஸை வெளியேற்றினார் எரங்க. மாற்றத்தை ஏற்படுத்தவல்ல ஸ்டோக்ஸால் முடிந்தது 12 ஓட்டங்கள் மட்டுமே. தற்பொழுது இங்கிலாந்து 83–5. ஒரு முனை பலவீனமானதாக இருந்தாலும் மறுமுனையில் அரைச்சதம் கடந்தார் கேல்ஸ். பரிஸ்ரெளவும் நிலைக்க இணைப்பாட்டம் ஒன்று அரங்கேறியது. மேலதிக இலக்கை எட்டாமல் 100 ஓட்டங்களை எட்டியது இங்கிலாந்து. பரிஸ்ரெளவும் அரைச் சதம் கடந்தார். 171–5 (53 பந்துப்பரிமாற்றங்கள்) என்ற நிலையில் இருந்தபொழுது மழை குறுக்கிட ஆட்டம் நிறுத்தப்பட்டது. மழை தொடர முதல்நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. கேல்ஸ் 71 ஓட்டங்களுடனும், பரிஸ்ரெளவ் 54 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர். (ம)



# சூழ்நிலைக்கு ஏற்ப விளையாடுவதில் மெஸ்ஸியை வீழ்த்திய றொனால்டோ

## பெர்குசனின் கணிப்பில்

மெஸ்ஸியை விட றொனால்டோ தான் சூழ்நிலைக்கு ஏற்ற கால்பந்தாட்ட வீரர் என மன்செஸ்டர் யுனைற்றெட் அணியின் புகழ்பெற்ற முன்னாள் பயிற்சியாளர் அலக்ஸ் பெர்குசன் தெரிவித்துள்ளார்.

அயர்லாந்தில் நடந்த கோல்ப் விளையாட்டுக் குறித்த நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பெர்குசன் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில், சமீப காலங்களில் சிறந்த கால்பந்தாட்ட வீரர் யார் என்பதைக் கண்டுபிடிப்பதற்காக, கிறிஸ்டியானோ றொனால்டோ மற்றும் மெஸ்ஸி இருவரும் ஒருவருக்கு ஒருவர் எதிராக நிறுத்தப்பட்டு வருகின்றனர். மெஸ்ஸி, றொனால்டோ இருவரும் ஒருவருக்கு ஒருவர் குறைந்தவர்கள் அல்ல. ஆனால், என்னைப்பொறுத்தவரை மெஸ்ஸிக்கும், றொனால்டோவிற்கும் இடையே சில வித்தியாசங்கள் உள்ளன. மெஸ்ஸி ஒரு கால் பழக்கமுடையவர். ஆனால் றொனால்டோவால் இரண்டு கால்களையும் கொண்டு பந்தை வலுவாக உதைக்க முடியும். பந்தைத் தலையால் கட்டுப்படுத்த முடியும். எல்லாவற்றுக்கும் மேலாக, சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு விளையாடுவதில் றொனால்டோவுக்கு நிகராக எவரும் இல்லை. நிச்சயம் மெஸ்ஸியாலும் ஈடுகொடுக்க முடியாது– என்றார்.

அலக்ஸ் பெர்குசன், றொனால்டோவை இவ்வாறு அதிகம் புகழுவதற்கும் ஒரு காரணம் உள்ளது.

றொனால்டோ, 2003 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை மன்செஸ்டர் அணியில் விளையாடிய பொழுது, பெர்குசனே அந்த அணிக்கு தலைமைப் பயிற்சியாளராக இருந்தார். குரு சிஷ்யனை விட்டுக் கொடுப்பாரா? என்ன. (ம)

**வடமாகாண கடமை நிறைவேற்று அதிபர்களுக்கான அவசர பொதுக்கூட்டம்**

காலம்: 22.05.2016 ஞாயிறு பி.ப. 12.30 மணி
இடம் : யா / யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
குறிப்பு: முதல் நியமனக் கடிதம், கடமை நிறைவேற்று அதிபர் நியமனக் கடிதம், உயர்கல்விச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளுடன் தவறாது கூட்டத்துக்கு சமுகம் தரவும். சமுகமளிக்காதவர்கள் தொடர்பில் சங்கம் கவனத்தில் கொள்ளாது.
செயலாளர்,
வடமாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் [illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org